இன்றைய காலநிலை

கூடிய வெப்பநிலை 28 °c

குறைந்த வெப்பநிலை 24 °c

மழையுடன் கூடிய காலநிலை எதிர்பார்க்கப்படுகின்றது.


# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 32

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 கதிர்: 057 வள்ளுவர் ஆண்டு: 2045 தை 09, புதன் 22.01.2014


## எனது கணவர் ஒரு தொகுதி ஆண்களுடன் படையினரின் பஸ்ஸில் இருக்கக் கண்டேன்

### இளம் குடும்பப் பெண் ஒருவர் நேற்று கிளிநொச்சியில் சாட்சியம்

கிளிநொச்சி, ஜன. 22
இராணுவத்தினர் எனது கணவரை ஒரு தொகுதி ஆண்களுடன் பஸ்ஸில் கொண்டு சென்றதை நான் நேரடியாகக் கண்டேன். அந்த பஸ்ஸில் ஏற முயன்ற என்னை இராணுவத்தினர் வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தினர். மூன்று நாள்களில் விடுவோம் என்று கொண்டு சென்றவர்கள் இத்தனை வருடங்கள் கடந்தும் இன்னமும் விடுவிக்கவில்லை என்று இளம் பெண்ணொருவர் கிளிநொச்சியில் நேற்றுச் சாட்சியமளித்தார்.

திருமணம் செய்து ஆறு மாதங்களிலேயே கணவன் அவ்வாறு கொண்டு செல்லப்பட்டதாகவும் அவர் அங்கு கூறினார்.

காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றன. இதில் கலந்து கொண்டு சாட்சியமளிக்கையிலேயே

21 ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் புதைகுழியின் எல்லை தெரியவில்லை

### விவரம் அறிய நீண்ட நாள் எடுக்கும் என்கிறார் சட்ட வைத்திய அதிகாரி



மன்னார், ஜனவரி 22
மன்னார் மனிதப் புதைகுழியின் எல்லை எதுவரை உள்ளது என்பதைக் கண்டுபிடிக்க முடியாத நிலையில் உள்ளோம். புதைகுழியில் இருந்து தொடர்ச்சியாக மனித எலும்புக்கூடுகள் மட்டுமே மீட்கப்பட்டு வருகின்றன. பெரிய அளவிலான தடயப்பொருள்கள் எவையும் இதுவரை மீட்கப்படவில்லை. இதனால் இது குறித்த விவரங்களைக் கண்டறிய நீண்ட நாள்கள் எடுக்கும்

இவ்வாறு தெரிவித்துள்ளார் மன்னார் மனிதப் புதைகுழியைத் தோண்டும் பணியில் ஈடுபட்டுள்ள அனுராதபுரம் சட்ட வைத்திய அதிகாரி டி.எல். வைத்தியரட்ன.

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியைத் தோண்டும் பணி நேற்று செவ்வாய்க்கிழமை காலையும் மன்னார் நீதிவான் முன்னிலையில் இடம்பெற்றது. அனுராதபுரம் சட்ட வைத்திய அதிகாரி டி.எல். வைத்தியரட்ன தலைமையிலான குழுவினர் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று மனித எலும்புக்கூடுகள் எவையும் முழுமையாக மீட்கப்படவில்லை. இதுவரை

21 ஆம் பக்கம் பார்க்க

## ஆளும் தரப்பு உறுப்பினரை தாக்கிய எதிரணி உறுப்பினர்

கிளிநொச்சி, ஜன. 22
கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர், எதிர்க்கட்சி உறுப்பினரால் தாக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் தாக்குதலுக்கு இலக்கான ஆளும்தரப்பு உறுப்பினர் ப. குமாரசிங்கம் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,
கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் இந்த வருடத்தின் முதலாவது கூட்டத் தொடர் நேற்று ஆரம்பமானது.

இதன்போது கிளிநொச்சி பொதுச் சந்தையில் ஏற்படும் நெருக்கடிகள், முரண்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

ஆளும்தரப்பான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் குமார சிங்கம் பொதுச் சந்தையை சீராக இயங்க வைப்பதற்கு சில தனிப்பட்ட அரசியல் காரணிகள் இடையூறாக இருப் பதாகச் சுட்டிக் காட்டினார். இதன்போது எதிரணியான ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் அதனை எதிர்த்ததால் இருவருக்கும் இடையில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டு, பின்னர் அடி தடியில் முடிவடைந்துள்ளது.

21 ஆம் பக்கம் பார்க்க

## மதத் தலங்கள் தாக்கப்படுவதை உடன் நிறுத்துக

கொழும்பு, ஜன. 22
இலங்கையில் வழிபாட்டுத் தலங்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களுக்கு முடிவு கட்டுமாறு அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது எனக் கொழும்பிலுள்ள தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கை தேசிய அங்கிலிக்கன் கூட்டமைப்பு அமெரிக்கத் தூதர் மிச்சேல் சிசனை நேற்றுச் சந்தித்துப் பேசியது. ஹிக்கடுவையில் அண்மையில் இரு தேவாலயங்கள் கும்பலொன்றால் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து இந்தச் சந்திப்பில் முக்கியமாக விவாதிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பையடுத்து வழிபாட்டுத் தலங்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களுக்கு முடிவுகட்டப்பட வேண்டும் என்று அமெரிக்கா எப்போதுமே வலியுறுத்தி வருகிறது எனத் தூதரகம் தெரிவித்துள்ளது. (உ-சி)

## மீனவர் கைது தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஜன 22
இலங்கை-இந்திய அரசுகளிடையே எட்டப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் ஏற்கெனவே கைது செய்யப்பட்ட இரு நாட்டு மீனவர்களும் பரஸ்பரம் விடுவிக்கப்பட்டுவரும் நிலையில் இந்திய மீனவர்கள் 26 பேர் நேற்று நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்துக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் இவர்களை நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தினர். அவர்களை

21 ஆம் பக்கம் பார்க்க

## 152 பேர் இதுவரை சாட்சியம்

*கிளிநொச்சி, ஜன. 22*
*கிளிநொச்சியில் கடந்த நான்கு தினங்கள் இடம்பெற்ற காணாமற்போனோர் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வில் 152 பேர் சாட்சியமளித்துள்ளனர் என்று ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம தெரிவித்துள்ளார்.*

*கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக, வடக்கு- கிழக்கில் காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள் வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்பட்டது.*

21 ஆம் பக்கம் பார்க்க

## கடத்தியவர்களே குற்றவாளிகள்

### ஜனாதிபதி ஆணைக்குழு நேற்றுத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 22
காணாமற்போனவர்களை அவர்களின் விருப்பத்துக்கு மாறாகக் கடத்தியவர்கள்தான் குற்றவாளிகள். அவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்குச் சட்டமா அதிபர் திணைக்களத்தினூடாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஆணைக்குழு பரிந்துரைக்கும் என்று காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளைமேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவினர் நேற்றுத் தெரிவித்தனர்.

தமது பிள்ளைகளை விடுதலைப் புலிகள் கட்டாயப்படுத்திக் கொண்டு சென்றதாகவும் அதன் பின்னர் அவர்கள் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற்போனதாகவும் பெற்றோர் சிலர் விசாரணையில் தெரிவித்தனர்.

இது குறித்துக் கருத்து வெளியிடும்போதே ஆணைக்குழுவினர் மேற்கண்டவாறு கூறினர்.

ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம, ஆணையாளர்களான மனோ ராமநாதன், சுரஞ்சனி விஜயவர்த்தன ஆகியோர், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்றுச் சாட்சியங்களைப் பதிவு செய்தனர். அதன் பின்னர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

**விருப்பத்துக்கு மாறாக கொண்டு செல்லப்பட்டனரா?**

காணாமற்போனவர்கள் என்று சொல்லப்படும்பொழுது,

21 ஆம் பக்கம் பார்க்க

22 JAN 2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளை இழந்தோரின் கண்ணீர்ப் பதிவுகள்



இறுதிப் போரில் காணாமற் போன வர்கள் தொடர்பில் ஆராயவென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு முன்னிலையில் கடந்த 4 நாள்களாக நூற்றுக்கணக்கானோர் சாட்சியமளித்தனர்.

நேற்று ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் சாட்சியம் அளிக்காது ஒருவர் சட்டமா அதிபர் திணைக்களத்தில் மாத்திரம் சாட்சியமளித்தார்.

# இடம்பெயர் நிவாரணம் நிறுத்தப்பட்டோர் விவரத்தை மீள திரட்டுக்கிறது செயலகம்

### *உண்ணாவிரதத்தை ஒத்திவைத்தார் தம்பிராசா*

யாழ்ப்பாணம், ஜன. 22

சொந்த இடங்களைவிட்டு இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்கள், நண்பர்கள் உறவினர்கள் வீடுகளில் தங்கியிருப்பவர்களின் விவரம் திரட்டப்பட்டு வருவதாக யாழ். மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார். மீள்குடியமர்த்துகை அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய இந்தத் தரவுகள் திரட்டப்படுகின்றன என்று அவர் தெரிவித்தார்.



இவ்வாறு நலன்புரி நிலையங்களில்வாழும் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணம் கடந்த மூன்று வருடங்களாக நிறுத்தப்பட்டிருந்தது. அதனை மீண்டும் வழங்க வேண்டும் என்பது உட்படச் சில கோரிக்கைகளை வலியுறுத்தி இ.தம்பிராசா கடந்த சில தினங்களாக யாழ். மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக உண்ணாவிரதம் இருந்து வந்தார். வடமாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் இவர். அடக்குமுறைக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் என்ற வகையில் இந்தப் போராட்டத்தைத் தான் முன்னெடுக்கிறார் என்று அவர் அ... ந்தார்.

அவரத... ம் 5 நாள்களைக் கடந்த நிலையில் நிவாரணம் நிறுத்தப்பட்டவர்கள் தொடர்பான விவரங்களைப் பெறுவதற்கான முன்னாயத்தப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் நேற்றுத் தெரிவித்தார்.

இதை அடுத்து தம்பிராசா தனது உண்ணாவிரதத்தை நேற்று மாலை நிறுத்தினார். தனது போராட்டம் ஒத்திவைக்கப்படுகிறது என்று அவர் அறிவித்தார்.

"இடம்பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவை மீள வழங்குமாறு புனர்வாழ்வு அமைச்சிடம் தான் கடிதம் மூலமாகக் கோரியுள்ளார் என்றும் அந்தக் கோரிக்கையை அமைச்சு ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அதனைச் செயற்படுத்த 14 நாள்களுக்கு அவகாசம் தேவைப்படும் என்பதனாலும் பட்டினிப் போராட்டத்தைக் கைவிடுமாறு அரச அதிபர் கோரியுள்ளார். அவர் நடவடிக்கை எடுப்பதாகக் கூறியதன் அடிப்படையில் எனது போராட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளேன்" என்றார் தம்பிராசா.

வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் கடந்த 23 வருடங்களாகத் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் உள்ளனர். இவர்களில் சுமார் 9 ஆயிரம் குடும்பங்கள் இன்றுவரை நலன்புரி நிலையங்கள் மற்றும் நண்பர்கள் உறவினர்கள் வீடுகளிலேயே தங்கியுள்ளனர். அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவுப் பொருள்கள் 2010 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டது.

"இடம்பெயர்ந்த மக்கள் தற்போது தங்கியுள்ள பிரிவுகளைச் சேர்ந்த பிரதேச செயலர்களிடம் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பிலான விவரங்களைச் சேகரித்து அனுப்புமாறு கடந்த வாரம் கோரியிருந்தோம். விரைவில் அந்தத் தரவுகள் யாழ். செயலகத்துக்குக் கிடைத்துவிடும். அதனைத் தமக்கு அனுப்பி வைக்குமாறு மீள் குடியேற்ற அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. அதன்படி அமைச்சுக்கு அனுப்பவுள்ளோம். அதன் பின்னர் அமைச்சு மேலதிக நடவடிக்கையை மேற்கொள்ளும்" - என்று 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

உண்ணாவிரதத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் முடித்து வைத்தார். இந்த நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (உ-4)

# ஈழத் தமிழர் அவலங்களை விளக்க களமிறங்குகிறார் மலேசியத் தமிழர்

இலங்கைத் தமிழர்களின் அவலங்களை பிரிட்டனில் விளக்குவதற்கு மலேசியாவில் உள்ள பினாங் மாநிலத்தின் பிரதி முதலமைச்சர் பி.இராமசாமி முன்வந்துள்ளார் என 'பிறீ மலேசியா டுடே' பத்திரிகை நேற்றுச் செய்தி வெளியிட்டது.

பிரிட்டிஷ் வாழ் தமிழர்கள் அமைப்பின் ஆதரவில் இந்த மாத இறுதியில் நடைபெறவிருக்கும் மாநாட்டில் அவர் அறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றவுள்ளார்.

'பிரி மலேசியா ருடே'க்கு (இன்றைய சுதந்திர மலேசியா) இராமசாமி அளித்துள்ள பேட்டியில் இந்த விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இன ஒழிப்பு, தமிழர் களுக்குச் சொந்தமான காணிகள் கபளீகரம் போன்ற விடயங்கள் தனது அறிக்கையில் பிரதான இடத்தைப் பிடிக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

"பாரம்பரிய காணிகளிலிருந்து ஒரு சமூகத்தை வேரோடு களைந்தெடுப்பதும். ஓர் இன ஒழிப்புச் செயலே. இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் சம்பந்தப்பட்ட விவகாரம், எனது மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சர்வதேச மேடையில் இந்த அட்டூழியங்களுக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுப்பேன்."

இப்படித் தெரிவித்துள்ள இராமசாமி, இலங்கையில் தமிழர்கள் இழந்த உரிமைகள் குறித்து மலேசிய அரசால் குரலெழுப்ப முடியாததற்குக் காரணம் அது கோழைத்தனமான அரசாக இருப்பதுதான் என்றும் விமர்சித்துள்ளார்.

இந்து ஆலயத்தை ஒரு பௌத்த கோவிலாக மாற்றுவது. சரீர ரீதியாக இல்லாவிட்டாலும் கலாசார பூகோள ரீதியாக மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட இன அழிப்பின் ஓர் அம்சமே என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"இலங்கை விவகாரத்துக்குத் தீர்வு காண்பதற்கான ஒரே வழி, சிங்களவர்களைப் பெரும்பான்மையினராகக்கொண்ட நாட்டில் இதிலிருந்து விடுபட்டு தனித்துவமான ஒரு நாட்டில் தங்களின் நிர்வாகத்தை மேற்கொள்ள தமிழர்களுக்கு உரிமை அளிப்பதேயாகும். தமிழர்களுக்குச் சுதந்திரமான ஒரு நாடே தேவை. இரு வேறுபட்ட இனங்கள் இலங்கைக்குள் ஒன்றாக இருக்க முடியும் என்பது நடைமுறைக்கு ஒத்துவராத ஒன்று" - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பொதுநூலகத் தீ வைப்பில் அரசின் சிரேஷ்ட அமைச்சரும் தொடர்பு

*வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம்.22
கடந்த 1981 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது யாழ்ப்பாணம் பொது நுலகம் தீ வைத்து கொளுத்தப்பட்டது. இந்தத் தீவைப்புடன் அரசின் சிஷ்ேட அமைச்சர் ஒருவர் தொடர்புபட்டிருந்ததாகவும் குடிபோதையில் இருந்த சிங்கள சிப்பாய்கள் சிலரும் இதனுடன் தொடர்புபட்டிருந்ததாகவும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்தக் கால கட்டத்தில் 16 மொழிகளில் புலமை வாய்ந்த தாவீது அடிகளார் யாழ். நூலகத்தைப் பயன்படுத்தி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். எனினும் ஆராய்ச்சி முடிவில் நூலகம் எரிக்கப்பட்டதால் மனமுடைந்த அவர் உயிரிழந்தார்.

இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தால் யாழ்ப்பாணம் பொது நுலகத்துக்கு ஒரு தொகுதி நுல்கள் கையளிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார் முதலமைச்சர்.

தென்கிழக்காசிய நாடுகளிலேயே அதிகூடிய புத்தகங்களைக் கொண்ட நூலகமாக யாழ்ப்பாண நூலகம் ஒரு காலத்தில் விளங்கியது என்று குறிப்பிட்ட முதலமைச்சர் பெறுமதி மிக்க



*ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் தலைவர் டேவிட் ஆனல்ட் யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு ஒரு தொகுதி நூல்களைக் கையளித்தார்.*

ஆவணங்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டதன் விளைவாக ஆவணங்கள் மீளவும் தேடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது தெரிவித்ததாவது:-

தென்கிழக்காசிய நாடுகளிலேயே 95 ஆயிரம் புத்தகங்களை கொண்ட நூலகமாக யாழ்ப்பாண நூலகம் விளங்கியது. தீ வைப்பின் காரணமாக பொக்கிசங்களாகக் கருதப்பட்ட நூல்கள் முற்றுமுழுதாக எரிந்து சாம்பலாகின.

தற்போது ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உதவியுடன் பெருந்தொகுதி நூல்கள் பொது நூலகத்துக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. தொடர்ந்தும் இந்த நூலகத்தின் அபிவிருத்திக்கு இவ்வாறான உதவிகள் பயனுள்ளதாக அமையும் - என்றார்.


ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தால் நூலகங்களை வலுப்படுத்தும் செயற்றிட்டத்துக்கு அமைவாக 1.2 மில்லியன் பெறுமதியான 284 நூல்கள் யாழ்பாணம் பொது நூலகத்துக்கு நேற்று கையளிக்கப்பட்டன. அந்த நூல்களில் சிறுவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் பயனடையக் கூடியதான நூல்கள் வழங்கப்பட்டன.

ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் தலைவர் டேவிட் ஆனல்ட் தலைமையிலான குழுவினர் நேரடியாக வருகை தந்து நூல்களைக் கையளித்தனர். நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், யாழ் மாநகர சபை முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா, மாநகர சபை ஆணையாளர் மற்றும் ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் அதிகாரிகள், நூலகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-14)

## காப்பெற் வீதியின் அகலம் குறைப்புக்கு மக்கள் எதிர்ப்பு

தென்மராட்சி, ஜன.22
மட்டுவில் பகுதியில் காப்பெற் வீதியின் அகலம் குறைக்கப்பட்டு அமைக்கப்படுவது குறித்து அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

மீசாலை ஏ-9 வீதியிலிருந்து வேம்பிராய் கனகன்புளியடி மட்டுவில் ஊடாகப் புத்தூர் வரை காப்பெற் வீதி அகலிப்புப் பணி இடம்பெற்று மட்டுவில் வடக்குப் பகுதியில் குறிப்பிட்ட அளவு பணிகள் பூர்த்தி செய்யப்படாமல் இருந்துவந்தது.



இந்த இடத்தில் 3 அடி அகலத்துக்கு கற்கள் போடப்பட்டு தார் ஊற்றப்பட்டு ஒரு வருடமாக அந்தப் பகுதி வேலை பூர்த்தி செய்யப்படாமல் காணப்பட்டது. தற்போது அதில் ஓர் அடி அகலத்துக்கு மட்டும் காப்பெற் இடப்படுகிறது.

ஏனைய இரண்டு அடி அகல வேலைகளை மேற்கொள்ள நிதிப் பற்றாக்குறை என்றும் இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் முறையிடுமாறும் ஒப்பந்தகாரரால் தெரிவிக்கப்படுகிறது.

ஒப்பந்தகாரரால் கற்கள் பரவப்பட்டு தார் ஊற்றப்பட்ட வீதியின் இருமருங்கும் பள்ளமாகக் காணப்படுகின்றன. இதனால் வாகனங்களில் வருவோர் ஆபத்தை எதிர்நோக்கும் அபாயம் காணப்படுவதாகவும் குறித்த பகுதியில் மழை காலங்களில் அந்த வீதியின் இரு பக்கமும் நீண்ட தூரம் வெள்ளம் தேங்கி நின்று அயலில் உள்ள மக்களுக்கும் வாகனங்களில் வருவோருக்கும் பல்வேறு சிரமங்களை ஏற்படுத்தும் நிலை வரலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வீதி அகலிப்புக்காக தமது காணிகளை விட்டுக் கொடுப்பவர்களுக்கு அதற்குரிய இழப்பீடு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை எந்தவொரு இழப்பீடும் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.


இந்த விடயத்தில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும்சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளனர். (வ-9)

## புனரமைக்கப்பட்டு வருகின்றன பழுதடைந்த தளபாடங்கள்

*வவுனியா தெற்கு பாடசாலைகளுக்கு உரித்தானவை*

வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் காணப்படும் பழுதடைந்த தளபாடங்களைப் புனரமைக்கும் நடவடிக்கைகளில் வலயக் கல்வி அலுவலகத்தினர் ஈடுபட்டுள்ளனர். வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட 60 க்கும் மேற்பட்ட பாடசாலைகளில் மாணவர்கள் பயன்படுத்தும் தளபாடங்கள் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இவை பாடசாலைகளின் மூலை முடுக்குகளில் காணப்படுகின்றன. இதனை அவதானித்த வவுனியா தெற்கு கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா பல்வேறு நிறுவனங்கள் மற்றும் அரச உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இவற்றை இனம் கண்டு புனரமைப்பதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.



தற்போது பழுதடைந்த தளபாடங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு புனரமைக்கப்பட்டு மீண்டும் உரிய பாடசாலைகளுக்கு வாகனம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன. (க-402)

## வர்த்தகருக்கு 3,000 ரூபா அபராதம்

தென்மராட்சி.ஜன.22
நுளம்பு உற்பத்தியாகக் கூடிய வகையில் உணவு கையாளும் நிலையத்தை வைத்திருந்த சாவகச்சேரி பகுதி வர்த்தகருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தின் போது சுகாதாரப் பகுதியினருடன் இணைந்து சாவகச்சேரி பொலிஸார் நடத்திய பரிசோதனையின் போது டெங்கு நுளம்பு உற்பத்தியா கக் கூடிய வகையில் வர்த்தக நிலைய சுற்றாடலை வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி பொலிஸரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. (வ-9)

## 30 வருடங்களாக திருத்தம் காணாத கட்டுடை வீதி



மானிப்பாய், ஜன.22
மானிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கட்டுடை அரசடி வீதியில் 30 வருடங்களாக புனரமைப்பு வேலைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று சனசமூக நிலையத்தின் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

மானிப்பாய் கட்டுடை மேற்கு அரசடி வீதியே 30 வருடங்களுக்கு மேல் எந்த வித புனரமைப்புப் பணிகளும் மேற் கொள்ளப்படாதுள்ளது என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

கட்டுடை மகாசனசமூக நிலையத் தலைவர் இது தொடர்பில் தெரிவிக்கையில்:
இந்தக் கிராமத்தின் [illegible] இடங்களின் [illegible] கூடிய காலங்களில் அபிவிருத்தி வேலைகள் இடம்பெற்றன.

ஆனால் இற்றைவரையும் கட்டுடை அரசடி வீதி கவனிப்பார் அற்ற நிலையில் கைவிடப்பட்ட நிலையில் உள்ளது.

முப்பது வருட காலமாக குன்றும் குழிகளும் நிறைந்த இந்த வீதியால் கர்ப்பிணித் தாய்மார் முதல் வயோதிபர் என பலதரப்பட்டோரும் பயணிக்க முடியாத நிலையில் இந்த வீதி காணப்படுகின்றது.

மகா சனசமூக நிலையம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல கடிதங்கள் சமர்ப்பித்தும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாததால் இந்தக் கிராம மக்கள் விசனமடைந்துள்ளனர் - என்றார். (வ)

## சந்தேக நபருக்கு மறியல்

இரவு வேளையில் வர்த்தக நிலையம் ஒன்றினுள் புகுந்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடியதான குற்றச்சாட்டில் நபர் ஒருவரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

கொடிகாமம், எருவன் பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்து நேற்று நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வர்த்தகருக்கு வலைவீசும் மும்பை பொலிஸ்

சென்னை, ஜன.22
இலங்கையின் ஏசியா கெப்பிட்டல் நிறுவனத்தின் பிரதான பங்காளரான விஜய ஈஸ்வரன் என்ற வர்த்தகருக்கு எதிராக இந்தியாவின் மும்பாய் பொலிஸார் பிடிவிறாந்து பிறப்பித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.
சர்வதேச வர்த்தகரான ஈஸ்வரன் மேற்கொண்டதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பில் நிதி மோசடி விசாரணைப் பிரிவில் வாக்கு மூலம் வழங்க சமுகமளிக்கவில்லை என்ற குற்றச்சாட்டில் இந்தப் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.
ஈஸ்வரன். ஹொங்கொங் நாட்டை தலைமையிடமாக கொண்டு உலகில் பல நாடுகளில் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகிறார். இலங்கையில் உள் ள ஏசியா கெப்பிட்டல் நிறுவனத்தில் அவரே அதிக கூடிய பங்குகளைக் கொண்டுள்ளார்.
அத்துடன் இவர் கொழும்பு பங்குச் சந்தையில் 3.6 பில்லியன் ரூபாவை முதலீடு செய்துள்ளார். இலங்கை வம்சாவளித் தமிழரான ஈஸ்வரன், கொழும்பைச் சேர்ந்த பெண்ணொருவரை மணமுடித்துள்ளார். இதற்கு முன்னர் அவருக்குச் சொந்தமான கோல்ட்க் வேஸ்ட் என்ற நிறுவனத்தை இலங்கை மத்திய வங்கி தடை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

# இலங்கைக்கு கப்பல் விற்பனை; மத்திய அரசுக்கு தொடர்பில்லை

## இந்திய வெளியுறவுத்துறை பதில்



மதுரை, ஜன.22
இலங்கைக்கு கப்பல் விற்பனை விவகாரத்தில் மத்திய அரசுக்கு எவ்வித தொடர்பும் கிடையாது என்று உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் இந்திய வெளியுறவுத் துறை பதில் அளித்துள்ளது.
இலங்கைக்கு போர் கப்பல்கள் விற்க மத்திய அரசுக்குத் தடை விதிக்கக்கோரி உயர் நீதி மன்ற மதுரை கிளையில் சட்டத்தரணி ஸ்டாலின் வழக்குத் தொடர்ந்துள்ளார்.
இந்த வழக்கு நீதிபதிகள் சுதாகர், வேலுமணி ஆகி யோர் முன் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.
இலங்கைக்கான மத்திய வெளியுறவுத்துறை இணைச் செயலாளர் மயானக் ஜோஷி பதில் மனுத்தரக்கல் செய்தார். அதில் கூறியிருப்பதாவது:
கோவா கப்பல் கட்டும் நிறுவனத்தில் இருந்து 2 ரோந்துக் கப்பல்களை வாங்குவதற்கு, இலங்கை அரசு ஒப்பந்தம் செய்துள்ளது. அவை ரோந்துக் கப்பல்கள்தான். போர்க் கப்பல்கள் அல்ல. ரோந்துக் கப்பலில் போருக்கு பயன்படுத்தக் கூடிய ஆயுதங்கள் இருக்காது.
இந்த வர்த்தக ஒப்பந்தம் நூறு மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புடையது. இந்த ஒப்பந்தத்தால் இந்தியாவின் மீதான மதிப்பு சர்வதேச அளவில் உயரும். கப்பல் வர்த்தக ஒப்பந்தம் கோவா கப்பல் கட்டும் நிறுவனத்துக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலானது. இதில் மத்திய அரசுக்கு சம்பந்தம் இல்லை.
கடந்த3வருடங்களாக இலங்கை இந்தியா இடையே இராணுவ உறவு மற்றும் வர்த்தக உறவு மேம்பட்டுள்ளது. சர்வதேச கடல் எல்லையில் இந்திய கடலோர காவல் படையினர், விமானப் படையினர் தொடர்ந்து கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இந்திய மீனவர்களைச் சுடமாட்டோம் என்று இலங்கை அரசு உறுதியளித்துள்ளது. இதன் விளைவாக 2011 ஏப்ரல் முதல் இலங்கைக் கடற்படையால் சுடப்பட்டு தமிழக மீனவர்கள் யாரும் இறக்கவில்லை. சர்வதேச கடல் எல்லை மற்றும் இலங்கைக் கடல் எல்லைக்குள் செல்லக்கூடாது என தமிழக மீனவர்களை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். இதை மீறி பிடிபடும் மீன வர்களை மனிதாபிமானத் துடன் நடத்த வேண்டும் என்று இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளோம்.
மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் உண்மையல்ல. மனுவை நிராகரிக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது. அடுத்த விசாரணையை நீதிபதிகள் தள்ளி வைத்தனர்.

> " "
> சர்வதேச கடல் எல்லையில் இந்திய கடலோர காவல் படையினர். விமானப் படையினர் தொடர்ந்து கண் காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

# கிளாலியில் கஞ்சா செடி மீட்பு

யாழ்ப்பாணம்,ஜன.22
கிளாலிப் பகுதியில் கஞ்சா செடிகளை வீட்டில் பயிரிட்டு வளர்த்த இருவர் நேற்றுப் பளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது 30 கஞ்சா செடிகளும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.
தமக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த இடத்துக்கு சென்ற போது அங்கு வீட்டுக்கு அருகில் மறைவான இடம் ஒன்றில் கஞ்சா செடிகள் பயிரிடப்பட்டிருந்தாகவும், அவற்றை மீட்டதுடன், வீட்டில் இருந்த பெண் ஒருவரும், அவரது மகனும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இவர்கள் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் பளைப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-4)

# இந்திய குடியரசு தின வைபவம்

யாழ்ப்பாணம்,ஜன.22
இந்தியாவின் 64 வது குடிரயரசு தினத்தையொட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணை தூதரகத்திலும் இந்திய தேசியக் கொடி ஏற்றப்படும் நிகழ்வு இடம்பெறும். நல்லூர் மருதடி ஒழுங்கையிலுள்ள துணைத்தூதரகத்தில் அன்றைய தினம் காலை 9 மணிக்கு நடைபெறும் நிகழ்வில் இந்திய குடி மக்கள் அனைவரும் கலந்து கொள்ளும்படி அழைக்கப்பட்டுள்ளார்கள். இந்திய குடியுரிமை அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் வருபவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# கஞ்சா வைத்திருந்தவர் கைதானார்

மாங்குளம், ஜன.22
கஞ்சா வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் புளியங்குளம் மருதோடைப் பகுதியில் ஒரு வரை கடந்த ஞாயிற்றுக் கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.
புளியங்குளம் பொலிஸ் நிலை யத்தின் உப பொலிஸ் பரிசோத கர் சரத் தலைமையில் சென்ற குழுவினர் புளியங்குளம் மருதோடைப் பகுதியிலுள்ள வீடொன்றை முற்றுகையிட் டுத் தேடுதல் நடத்தினர். அங்கு 8 கிலோ கிராம் கஞ்சாவும் 30 கஞ்சாச் செடிகளும் கைப்பற் றப்பட்டன. இதனை அடுத்து குறித்த வீட்டின் உரிமையாள ரைப் பொலிஸார் கைது செய் துள்ளனர். (த-400-422)

# தாச்சிப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜன.22
யாழ். மாவட்டத் தாச்சி சங்கத்தின் அனுமதியுடன் அளவெட்டி பாரதி விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் மின்னொளித் தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அளவெட்டி பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இதில் இன்று புதன்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:
மாலை 6 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் வல்லசுட்டி சாந்தி ஸ்ரீ விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இரவு 7 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கீரிமலை கணேசா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுன்னாகம் காந்தரூபன் விளையாட்டுக்கழகம் மோதும். (த-288-23)

# வீரப்பன் கூட்டாளிகளின் தூக்கு ஆயுள் தண்டனையாகக் குறைப்பு

## உச்ச நீதிமன்றம் அதிரடி

டில்லி, ஜன.22
வீரப்பனின் கூட்டாளிகள் நான்கு பேரின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
கடந்த 1993ஆம் ஆண்டு கர்நாடகாவில் வீரப்பனின் கூட்டாளிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் அந்த மாநிலப் பொலிஸார் 22 பேர் கொல்லப்பட்டனர்.
இது தொடர்பான வழக்கில் வீரப்பனின் மூத்த சகோதரர் ஞானப்பிரகாசம், கூட்டாளிகள் பிலவேந்திரண், சைமன், மீசை மாதையன் ஆகிய நான்கு பேருக்கு மைசூர் தடா நீதிமன்றம் ஆயுள்தண்டனை விதித்தது.
இதற்கு எதிராக அவர்கள் தொடர்ந்த மேல் முறையீட்டு வழக்கில், ஆயுள்தண்டனையை தூக்குத் தண்டனையாக அதிகரித்து கடந்த 2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
தூக்குத் தண்டனையை குறைக்கக் கோரி நான்கு பேரும் அதே ஆண்டு பெப்ரவரி மாதம் ஜனாதிபதிக்கு கருணை மனுக்களை அனுப்பினர். அந்த மனுக்களை ஒன்பது ஆண்டுகள் கழித்து கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் ஜனாதிபதி நிராகரித்தார்.
அதனையடுத்து கருணை மனுக்களை நிராகரிக்க நீண்ட காலம் எடுத்துக் கொண்டதால், தூக்குத் தண்டனையை குறைக்கக் கோரும் உரிமை உள்ளது எனக் கூறி, அவர்கள் சார்பில் சட்டத்தரணி காலின் கான்சல்ஸ் உச்ச நீதிமன்றத்தில் கடந்த பெப்ரவரி மாதம் மனுத்தாக்கல் செய்தார். அதன் மீதான விசாரணை முடிவடைந்துள்ள நிலையில் உச்ச நீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியது.

# இனந்தெரியாதோரின் தாக்குதலில் இருவர் காயம்

தென்மராட்சி,ஜன.22
மிருசுவில் பகுதியில் ரயில் பாதைப் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டு விட்டு வீடு திரும்பிய குழுவினர் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட தாக்குதலில் இருவர் காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் மிருசுவில், பழைய வாய்க்கால் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.
ரயில்பாதை புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டு விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த குழுவினரை வழி மறித்த கும்பல் ஒன்று அவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.
இதில் கனகராயன்குளத்தைச் சேர்ந்த எஸ். இந்திரகுமார் (வயது 29) மிருசுவிலைச் சேர்ந்த ஜேமதாஸ - விஜயகாந்தன் (வயது -22) ஆகிய இருவரும் காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
சம்பவம் தொடர்பில் வைத்தியசாலை பொலிஸார் ஊடாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-9)

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**
BAF - XXXX இலக்க றோட் மாஸ்டர் 200 CC விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 024 2226921, 078 2780569

**கணக்காளர் தேவை**
வவுனியாவில் உள்ள கடை ஒன்றுக்கு கணக்காளர் தேவை.
தொடர்பு:- 024 2226921, 078 2780569

**காணி விற்பனைக்கு**
கைதடி தெற்கு A.P.C ஒழுங்கையில் மாகாணசபைக் கட்டடத்திற்கு அருகில் $3\frac{1}{2}$ பரப்புக் காணி விற்பனைக்குண்டு
தொடர்பு:
077 897 0812/077 202 4720

**After O/Levels**
60% கட்டணக்கழிவை பெற்றிடுங்கள்
AN ISO 9001 : 2008 CERTIFIED INSTITUTION
DiTEC Diploma in Information Technology
AdOA Adv. Diploma in Office Administration
DiCA Computerized Tally Accounting
DiWP Diploma in Web Programming
DiWD Diploma in Web design & Development
AdCHN Adv. Diploma in Hardware & Networking
Duration : 3 Months for all courses
CSC-ASIAN
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION
யாழ். நகர் 2G ஸ்ரான்லி வீதி, 021 2225677
சாவகச்சேரி கட்டுக்காணி வீதி, 021 2270267
கிளிநொச்சி A9 வீதி, ஆனந்தபுரம், 021 2283025
வவுனியா 192, குருமன்காடு சந்தி, மன்னார் வீதி, 024 2226050

# மரண அறிவித்தல்

## கதிர்காமு சீவரத்தினம்



ஏழாலை வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் உடுவிலைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு சீவரத்தினம் நேற்று (21.01.2014) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு- கைராசி தம்பதியரின் அன்பு மகனும், தர்மலிங்கம் -சிவமணி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும், இரவீந்திரனின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அன்னம்மா, அருளம்பலம் மற்றும் வள்ளிப்பிள்ளை(கனடா) கந்தையா (கனடா-பால சுப்பிரமணியம் ஆசிரியர்), தங்கச்சியம்மா, காலஞ்சென்ற நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தங்கராசா மற்றும் நாகம்மா, காலஞ்சென்ற இராசையா மற்றும் கனகம்மா, காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், சிவசுப்பிரமணியம், சிவயோகராணி (சுவிஸ்), ஸ்ரீபாலஸ்கந்த ராசா(அமெரிக்கா), பாலசிறிதரன், பாலசிறிகுகன், ஸ்ரீபாலமயில்வண்ணன் (கனடா), ஆகியோரின் சிறிய தந்தையும், பாலாஜி(இந்தியா), கிரியா(இந்தியா) ஆகியோரின் பெரிய தந்தையும், இராச குலதேவி, ஜெயராசகுலசிங்கம், இராஜேஸ்வரன், கருணாதேவி, தனபாக்கியம், கோகிலாதேவி, ஞானேஸ்வரன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியகள் இன்று (22.01.2014) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகமூர்த்தி வீதி, உடுவில். தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி.தென்மேற்கில் 3 வீதிகளுக்கு விமோசனம்

வலி.தென்மேற்கு, ஜன.22
வலி.தென்மேற்கு பிர தேசத்திலுள்ள மூன்று வீதிகள் பிரதேச சபையின் நிதியிலிருந்து சுமார் 45 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன. இதற்கான நிதி 2014 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.
உயரப்புலம் அடைக்கல நாயகி வீதி 14½ லட்சம் ரூபா செலவிலும், சில்லாலை கொட்டையடி வீதி 16 லட்சம் ரூபா செலவிலும், வடலியடைப்பு பிள்ளையார் கோயில் வீதி 14 லட்சம் ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளன.
இதற்கான கேள்விகள் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.
கடந்த 2012 ஆம், 13 ஆம் ஆண்டுகளுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் குறித்த வீதிகள் புனரமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்ட போதிலும் நிதியின்மை காரணமாக பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ-115)




சுதுமலை வடக்கு இளைஞர் கழகத்தினால் சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலையில் பொங்கல் தினத்தன்று பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (வ)

# தேர்தல் திணைக்களத்தால் ஆங்கில மொழியில் கடிதம்

### வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் கண்டனம்

வலி.தென்மேற்கு, ஜன.22
தேர்தல் திணைக்களத்தால் ஆங்கில மொழியில் மட்டும் அனுப்பப்பட்ட கடிதம் குறித்துக் கடுமையான ஆட்சேபனை தெரிவித்துள்ள வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள், அரசில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள மும்மொழித் திட்டத்தின் கீழ் தமிழ்மொழியும் இணைக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளனர்.
வலி.தென்மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் பதில் தவிசாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது.
முன்னாள் தவிசாளர் அ.ஜெபநேசனின் பதவி விலகல் கடிதம் தொடர்பாக தேர்தல் ஆணையாளரால் பிரதேச சபைக்கு ஆங்கில மொழியில் மட்டும் அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் செயலாளரினால் சபையில் வாசிக்கப்பட்டது.
ஆங்கில மொழியில் மட்டும் அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் குறித்து கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ள சபை உறுப்பினர்கள், சகல திணைக்களங் களிலும் மும்மொழிக் கொள்கை நடைமுறைப் படுத்தப்படல் வேண்டும் என்று அரசால் அறிவிக்கப்பட்டுள்ள இவ்வேளையில், தமிழ் மொழி பெயர்ப்பு இணைக்கப்படாமல் ஆங்கிலத்தில் மட்டும் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதென்று தெரிவித்துள்ளதுடன் தொடர்ந்தும் இந்த நிலை ஏற்படுமேயானால் கடிதங்களைத் திருப்பி அனுப்ப வேண்டியிருக்கும் என்றும் மேலும் தெரிவித்துள்ளார். (வ-115)

> "-"
> ஆங்கில மொழியில் மட்டும் அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் குறித்து கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ள சபை உறுப்பினர்கள், சகல திணைக்களங்களிலும் மும்மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தப் படல் வேண்டும் என்றனர்.

## வீதி புனரமைப்பு

தென்மராட்சி, ஜன.22
கைதடி வடக்குப் பகுதியில் 50 வருடங்களாக புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்பட்ட வன்னிய சிங்கம் வீதி முதலாம் ஒழுங்கை சாவகச்சேரி பிரதேச சபையால் 3 லட்சம் ரூபா செலவில் கிரவல் போடப்பட்டு செப்பனிடப்பட்டுள்ளது.
பிரதேசசபை உறுப்பினர் சங்கரன் தங்கராசாவால் கடந்த வருடம் பிரதேச சபையில் முன்மொழியப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டு மூன்று லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (...9)

# சாவகச்சேரி மருத்துவமனை பிரேத அறையைக் குளிரூட்டுக

யாழ்ப்பாணம்,ஜன.22
சாவகச்சேரி ஆதார மருத்துவமனை பிரேத அறைக்கு குளிரூட்டிகள் பொருத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன.
சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை மீளப் புனரமைக்கப்பட்டுள்ளதால் தென்மராட்சி மட்டுமல்ல பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு, பூநகரி போன்ற பிரதேச மக்கள் தமது வைத்திய தேவைக்காக இந்த வைத்தியசாலைக்கு வருகின்றனர்.
அத்துடன் ஏ-9 வீதி ஊடாக வரும் தூர இடங்களைச் சேர்ந்தவர்கள் விபத்துக்களைச் சந்திக்கும் பட்சத்தில் இந்த வைத்தியசாலைக்கு கொண்டு வரப்படுகின்றனர்.
இந்த நிலையில் உயிரிழப்புச் சம்பவித்தால் சடலங்களைக் கையளிக்கும்வரை பிரேத அறையிலேயே வைக்கப் படுகின்றன. இதனால் இங்கு குளிரூட்டிகள் இல்லாததால் சடலங்கள் பழுதடையும் நிலை ஏற்படுகிறது. விபத்து மற்றும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு குறிப்பிட்ட நேரத்தினுள் உயிரிழப்பு சம்பவித்தால் அது தொடர்பான விசாரணைகள் முடியும் வரை சடலத்தை வெளியே கொண்டு செல்ல முடியாத நிலை.
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடந்த வருடம் ஐந்து லட்சம் ரூபா செலவில் பிரேத அறை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஐந்து குளிரூட்டிகள் பொருத்தக்கூடிய வகையில் அறைகள் அமைக்கப்பட்ட போதிலும் இதுவரை குளிரூட்டிகள் பொருத்தப்படவில்லை.
அண்மையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து கொண்டு வரப்பட்ட இருதய நோயாளி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட போது இடைவழியில் உயிரிழந்ததால் சடலம் சாவ கச்சேரி வைத்தியசாலை பிரோத அறையில் வைக்கப்பட்டு மூன்றாம் நாள் உரிய விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (வ)

# பிரதான வீதிகளுக்கு மஞ்சள்கோடு அமைக்குக

நவாலி, ஜன.22
ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய் பகுதி பிரதான வீதிகளுக்கு குறுக்கே மஞ்சள் கோடுகள் அமைக்காததால் விபத்துக்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.
குறித்த பகுதியில் பாடசாலைகள் பிரதான வீதியோரங்களில் அமைந்துள்ளதால் மாணவர்கள் வீதியைக் கடக்கும்போது வேகமாக வரும் வாகனங்களுடன் மோதி விபத்துக்கு உள்ளாகும் நிலை காணப்படுகிறது.
இதனால் பாடசாலைக்கு நேரத்துக்குச் செல்ல முடியாமல் கால தாமதமாகிச் செல்வதால் பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் தண்டனைக்கும் உள்ளாகின்றனர். எனவே சம்பந்தப்பட்டவர்கள் நேரில் பார்வையிட்டு குறித்த வீதியில் மஞ்சள் கோடு அமைக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-100)

# கட்டுக்குள் வந்தது கால்வாய் நோய்

வலி.வடக்கு, ஜன.22
யாழ்.மாவட்டத்தில் திடீரென பரவிய கால் நடைகளுக்கான கால்வாய் நோய் பிரதேச கால் நடை வைத்தியதிகாரிகள் விரைவாக மேற்கொண்ட தடுப்பு நடவடிக்கைகளால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ள அதே சமயம் கால்நடைகள் எவையும் இறக்காமல் பாதுகாக்கப்பட்டுள்ளன என்று கால்நடை சுகாதார திணைக்கள யாழ். பிராந்திய உதவிப் பணிப்பாளர் திருமதி வக்சலா அமிர்தலிங்கம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தெரிவித்துள்ளார்.
யாழ்.மாவட்டத்தில் கால்வாய் நோய் பரவுவது குறித்து கொழும்பு தலைமையகத்துடன் தொடர்பு கொண்டதும் உடனடியாக கால் நடைகளுக்கு ஏற்றுவதற்கான கால்வாய்த் தடுப்பூசி மருந்துகள் போதியளவு அனுப்பி வைக்கப்பட்டதுடன் பிரசாரம் செய்வதற்கான ஒலிபெருக்கி சாதனங்களும் கூட அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.
கால்வாய் நோய் பரவிய பகுதிகளான தெல்லிப்பழை, கோப்பாய், சங்கானைப் பகுதிகளில் இந்த நோய்க்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டதுடன் அயல் பிரதேசங்களிலும் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டன.
இதற்கு வேண்டிய அவசர நடவடிக்கைகளை பிரதேச கால் நடை சுகாதார திணைக்கள வைத்தியதிகாரிகளும் ஏனைய ஊழியர்களும் விரைவாக மேற்கொண்டு இந்த நோயை முழுமையான கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளதுடன் தொடர்ந்து இந்த நோய்க்கான தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.
கால்நடைகள் வளர்ப்பவர்கள் உரிய பிரதேச கால்நடை சுகாதார திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு தமது கால்நடைகளுக்கான தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்ளலாம் என்றும் உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (வ-86)

> "-"
> யாழ்.மாவட்டத்தில் கால்வாய் நோய் பரவுவது குறித்து கொழும்பு தலைமையகத்துடன் தொடர்பு கொண்டதும் உடனடியாக கால் நடைகளுக்கு ஏற்றுவதற்கான கால்வாய் தடுப்பூசி மருந்துகள் போதியளவு அனுப்பி வைக்கப் பட்டதுடன் பிரசாரம் செய்வதற்கான ஒலி பெருக்கி சாதனங்களும் கூட அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

# பாடசாலையிலிருந்து விலகிய மாணவருக்குப் பயிற்சிகள்

வட மாகாண கல்வி அமைச்சால் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களின் எதிர்கால நன்மை கருதி முறைசாராக் கல்விப் பிரிவை அபிவிருத்தி செய்யவும் ஊக்குவிக்கும் வகையிலும் நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளதாக வட மாகாண கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.
கடந்த காலங்களைவிட இந்த முறை முறைசாராக் கல்விப் பிரிவின் செயற்பாடுகள் விரிவடையவுள்ளதுடன் வட மாகாண கல்வி அமைச்சுக்கு உட்பட்ட 12 கல்வி வலயங்களிலும் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த முறை முதல் கட்டமாக கணினிப் பயிற்சி, மனைப் பொருளாதாரமும் முகாமைத்துவமும், உடை அமைத்தல், ஒட்டுதல் (வெல்டிங்), மணப் பெண் அலங்காரம், குழாய் பொருத்துதல் போன்ற பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டு பாடசாலைகளை விட்டு விலகிய மற்றும் இடை விலகிய மாணவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப் படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (வ-86)

## விடுமுறை தவிர்ந்த நாள்களில் பற்சிகிச்சை



தென்மராட்சி, ஜன.22
கொடிகாமம் பிரதேச மருத்துவமனைக்கு நிரந்தர பற்சிகிச்சை நிபுணர் நியமிக்கப்பட்டதை அடுத்து ஞாயிறு மற்றும் பொதுவிடுமுறை நாள்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் பற்சிகிச்சை இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
இதுவரை காலமும் பிரதி செவ்வாய்க்கிழமைகளில் சாவகச்சேரி மருத்துவமனை பற்சிகிச்சை நிபுணரால் பற்சிகிச்சை நடத்தப்பட்டு வந்தது.
கடந்த முதலாம் திகதி தொடக்கம் குறித்த மருத்துவமனைக்கு நிரந்தர பற்சிகிச்சை நிபுணர் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளதை அடுத்து தினமும் பற் சிகிச்சை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# படையினர் வசமுள்ள குடியிருப்புகள் இவ்வாரம் கையளிப்பு


தென்மராட்சி,ஜன.22
சாவகச்சேரி அஞ்சலகத்துக்கு முன்பாக படையினரால் பயன்படுத்தப்பட்டு வந்த 7 குடியிருப்புகள் உட்பட காணிகள் இந்த வாரம் உரியவர்களிடம் கையளிக்கப்படவுள்ளன.
காணி உரிமையாளர்கள் அழைக்கப்பட்டு விடுவிப்புக்கான படிவங்கள் கையொப்பம் பெறப்பட்டு வருவதாகவும் இன்னும் ஓரிரு தினங்களில் அவை உரியவர்களிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.
கடந்த 1996 ஆம் ஆண்டு தொடக்கம் பருத்தித்துறை வீதி, தேவாலய வீதி ஆகியவற்றில் காணப்பட்ட 7குடியிருப்புகள் உட்பட்ட காணிகளில் முகாம்கள் அமைக்கப்பட்டு இயங்கி வந்தன.
அண்மையில் இங்கிருந்து படையினர் வெளியேறி அல்லாரை தம்பு தோட்ட முகாமுடன் இணைந்து கொண்டனர்.
காணி உரிமையாளர்கள் நேற்று அழைக்கப்பட்டு காணிகளை அடையாளம் காட்டியதாகவும் அங்குள்ள படையினரின் பொருள்கள் அப்புறப் படுத்தப்பட்டு வருவதால் இன்னும் ஓரிரு நாள்களில் அவர்களது காணிகள் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ)

> "-"
> கடந்த 1996 ஆம் ஆண்டு தொடக்கம் பருத்தித்துறை வீதி, தேவாலய வீதி ஆகியவற்றில் காணப்பட்ட 7குடியிருப் புகள் உட்பட்ட காணி களில் முகாம் அமைக் கப்பட்டு இயங்கி வந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு தேவை

## பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்து



சென்னை, ஜன.22
தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுவதைத் தடுப்பதற்கு, அதுகுறித்து நிரந்தரத் தீர்வொன்றைக் காண வேண்டும் என்று தெரிவித்துள்ளார் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் ராமதாஸ்.

இந்த விடயம் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,


"வங்கக்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக் கப்படுவதும், தாக்கப்படுவதும் தொடர் கதையாகி வருகிறது. ராமேஸ்வரம் பகுதியில் இருந்து நேற்றுமுன்தினம் மீன்பிடிக்கச் சென்ற 20 தமிழக மீனவர்கள் கச்சதீவுப் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கைக் கடற்படை கைது செய்துள்ளது.

இன்னொருபுறம் கச்சதீவுக்கு அருகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் மீது கொடூரமான தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

மீனவர் பிரச்சினை குறித்து இலங்கை மற்றும் தமிழக மீனவர்களிடையே வரும் 27 ஆம் ஆம் திகதி பேச்சு நடத்தப்படவுள்ள நிலையில், ஒரே நாளில் 20 தமிழக மீனவர் கள் கைது செய்யப்பட்டிருப்பதற் கும், 20க்கும் மேற்பட்ட மீன வர்கள் கொடூரமாக தாக்கி காயப்படுத்தப்பட்டமைக்கும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

வங்கக்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களை இலங்கைப் படையினர் கைது செய்வதும், சுட்டுக் கொல்வதும் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக நீடிக்கும் நிலையில், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு நடவடிக்கை எடுக்காதது மிகுந்த வருத்தமளிக்கிறது. மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான பேச்சுக்களை இந்திய - இலங்கை அரசுகள் 2005ஆம் ஆண்டு ஆரம்பித்தன. ஆனால் இந்திய மத்திய, மாநில அரசுகள் இந்த விடயத்தில் போதிய அக் கறை காட்டாததால் 8 ஆண்டுகளுக்கு மேலாகியும் மீன வர் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை.

இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும். எதிர்வரும் 27 ஆம் திகதி சென்னையில் இரு நாட்டு மீனவர்களிடையே நடைபெறவுள்ள பேச்சுக்கள் அதற்கான நல்ல தொடக்கமாக இருக்க வேண்டும். அதற்கு முன்பாக இப்போது கைது செய்யப்பட்டுள்ள மீனவர்கள் உட்பட அனைத்து தமிழக மீன வர்களையும் இலங்கை சிறையிலிருந்து விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நட வடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)



புதுடில்லியில் கடமை தவறிய பொலிஸ் அதிகாரிகளை பணி இடை நீக்கம் செய்ய வலியுறுத்தி வீதியில் அமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவரும் அம்மாநில முதலமைச்சர் அர்விந்த் கெஜ்ரிவால், 90 சதவீத குற்றங்கள் போலீஸாருக்கு தெரிந்தே நடக்கிறது என்றும் குற்றம் சாட்டியுள்ளார். அதேவேளை, நேற்று இரண்டாவது நாளாகவும் கெஜ்ரிவால் நடத்திவரும் போராட்டத்தால் 4 மெட்ரோ ரயில் நிலையங்கள், இந்தியா கேட் ஆகிய பகுதி கள் மூடப்பட்டுள்ளன. (ற)

## ஆம் ஆத்மிக்கு வழங்கிய ஆதரவு;தேவையற்ற வேலை

புதுடில்லியில் அர்விந்த் கெஜ்ரிவால் தலைமையிலான ஆம் ஆத்மி அரசுக்கு ஆதரவளிக்கும் விடயத்தில் காங்கிரஸ் கட்சிக்குள் கருத்து வேறுபாடு நிலவுகின்றது என்று தெரிவித்துள்ளார் மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம்.

இதுகுறித்து அவர் கூறுகை யில், "அனுபவிமில்லாத ஒரு புதிய கட்சிக்கு ஆதரவளிப்பது அநாவசியமான முடிவு. ஆம் ஆத்மி அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவளிக்கும் பிரச்சினையில் காங்கிரஸ் கட்சிக்குள் கடும் கருத்துவேறுபாடு நிலவுகின்றது. இது ஒரு அநாவசியமான முடிவு என்றே நான் கருதுகிறேன். எங்களுக்கு (டில்லி சட்டசபையில்) 8 இடங்கள் இருந்தன. மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டுவிட்டோம். ஆட்சியமைக்கவோ அல்லது பிரதான எதிர்க்கட்சியாக அமரவோ எங்களுக்கு வாக்களிக்கப்படவில்லை. எனவே நாங்கள் அமைதியாக இருந்திருக்க வேண்டும். அதே சமயம் இது என்னுடைய தனிப்பட்ட கருத்தாகும்.

அதே சமயம் எவ்வித நிபந்தனையுமின்றி ஆம் ஆத்மி அரசுக்கு ஆதரவளிப்பது என்ற முடிவை காங்கிரஸ் கட்சியின் புதுடில்லி பிரிவு மேற்கொண்டது. இது சரியானதா இல்லையா என்பதை காலம்தான் சொல்லும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# மரண அறிவித்தல்

## நடராசா கமலநாதன்



புங்குடுதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 2ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட நடராசா கமலநாதன் 19.01.2014 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா-சிவக்கொழுந்து தம்பதியரின் மூத்த மகனும், அமிர்தலிங்கம்-சந்திராதேவி தம்பதியரின் மருமகனும், கௌரியின் பாசமிகு கணவரும், கீர்த்தனன், நர்மதன், சபிதரா, கேதாஶ்ரீ ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசரஸ்வதி, யசோதா, கமலாம்பிகை, விமலாம்பிகை, விமலநாதன், நவநாதன், காலஞ்சென்ற நந்தினிதேவி, பவானி மற்றும் சிவகேந்தினி, பவனீதரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கணேசையா, காலஞ்சென்ற இராமலிங்கம், அம்பிகை நாதன் மற்றும் சிவகாந்தன், மிசைலா, காலஞ்சென்ற கருணாகரன் மற்றும் சச்சியானந்தம், சறோஜினிதேவி, விஜயபாலன், ஜெயராணி ஆகியோரின் மைத்துனரும், சந்திராதேவி, தர்மரத்தினம், ஞானாம்பிகை, சிவலிங்கம் ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், தர்சினி, சுதர்சினி, கயந்தினி, பாலரிஷி, ஐங்கரன், ஜெயநந்தினி, தவமீரா, எழிலரசி, தபேந்திரா, உமாகாந்தி, குமுதினி, புவிதா, பவிதரன், வவிதரன், சபேசன், பிரசாந், செந்தூரிகா, தேனுசன், கிருஸ்ணகுமார், ஞானபாலன், சசிகரன், சுகந்தினி, பிரிந்தா ஆகியோரின் மாமனும், காண்டீபன், பார்த்தீபன், பிரதீபன், வினோதிகா, கௌசி, ரசிகா, மதுசிகா, கஜன் ஆகியோரின் பெரிய தந்தையும் சண்முகதாசன், சிவசங்கரன், சதீஸ்குமார், ரவிக்குமார், தர்சினி, சுதர்சன், தமயந்தி, தவரூபன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.01.2014) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மணற்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2ஆம் வட்டாரம், புங்குடுதீவு. தகவல்: குடும்பத்தினர்.

(43844) (10.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒலிம்பிக் போட்டிகளுக்கு அமெரிக்கா பாதுகாப்பு

நியூயோர்க், ஜன.22

ரஷ்யாவில் நடைபெறவிருக்கும் 22ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டிக்கு பாதுகாப்புக்கான முழுஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளது என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதுகுறித்து பென்டகன் செய்தி தொடர்பாளர் ஜான் கிர்பி கூறும் போது,

"பெப்ரவரி 6ஆம் திகதி முதல் 23ஆம் திகதி ரஷ்யாவில் நடைபெற உள்ள குளிர் கால ஒலிம்பிக் போட்டிக்கு பாதுகாப்பு அளிக்கும்படி ரஷ்யா கேட்டதை அடுத்து ரஷ்யாவின் கோரிக்கையை ஏற்று பாதுகாப்பு வழங்க அமெரிக்க ஒத்துக்கொண்டுள்ளது

இதுகுறித்த ஒப்புதலை அமெரிக்க பாதுகாப்பு செயலர் சக் ஹெகல், கடந்த 4ஆம் திகதி அளித்தார்" என்று தெரிவித் தார்.

அதேவேளை, குளிர்கால ஒலிம்பிக் போட்டியை நடத்தினால் தாக்குதல்கள் நடத்தப்படும் என்று ரஷ்யாவுக்கு தீவிரவாதிகள் அச்சுறுத்தல் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)



பெய்ரூட்டில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 4 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர். அடுக்கு மாடிக் குடியிருப்பு ஒன்றுக்கு முன்பாக இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் குறித்த குடியிருப்பு கடும் சேதங்களுக்குள்ளாகியுள்ளது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மீட்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் உயிரிழப்புகள் வெகுவாக அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகின்றது. (ற)

## ஈராக்கில் குண்டு வெடிப்பு: 28 பேர் சாவு



பாக்தாத், ஜன.22

ஈராக்கில் இடம்பெற்ற குண்டு வெடிப்புத் தாக்குதல்களில் 28 பேர் உயிரிழந்துள்ளனர்.

அன்பார் மாகாணத் தலைநகர் ரமாதி, பாக்தாத் உள்ளிட்ட இடங்களில் தீவிரவாதிகள் தொடர்ச்சியாக குண்டு வெடிப்புகளை நடத்தியுள்ளனர். ரமாதி பகுதியில் கண்ணி வெடியில் சிக்கி பொலிஸார் உள்பட 3 பேர் உயிரிழந்தனர்.

அதேபோன்று பாக்தாத்தின் தென்பகுதியில் உள்ள சந்தைப் பகுதியில் நிகழ்ந்த 2 குண்டு வெடிப்புகளில் 9 பேரும், பாக்தாத்தின் தென்கிழக்கு மாவட்டத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் 3 பேரும், வடக்குப் பகுதியில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் 3 பேரும் உயிரிழந்தனர். அங்குள்ள நீதிமன்ற வளாகத்தில் நிகழ்த்தப்பட்ட இரட்டைக் கார் குண்டு தாக்குதல்களில் 7 பேரும், பாக்தாத் சந்தையில் நிகழ்த்தப்பட்ட மற்றொரு தாக்குதலில் 3 பேரும் உயிரிழந்தனர். (ற)

## எலிசபெத்தின் பொறுப்புகள் சார்ள்ஸ் வசம்?

லண்டன், ஜன.22

பிரிட்டன் ராணி எலிசபெத் தன்னுடைய பொறுப்புகளை இளவரசர் சார்ள்ஸிடம் ஒப்படைக்க போகின்றார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரிட்டனின் ராணியாக இரண்டாம் எலிசபெத் முடிசூடி 60 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. அதனால் பிரிட்டன் ராணி எலிசபெத் (வயது 88), தன் மகன் சார்ள்ஸிடம்(வயது 65) பொறுப்பை வழங்கப் போகின்றார் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அண்மையில் பொறுப்புகளை பகிர்ந்து கொள்ளும் வகையில், 88 வயதாகும் ராணி எலிசபெத் மற்றும் இளவரசர் சார்ள்ஸின் அலுவலகங்கள் இணைக்கப்பட்டன. அத்துடன் நார்மண்டி கடற்கரையில் நடந்த இராணுவ விழாவில் இளவரசர் சார்ள்ஸும், ராணி எலிசபெத்தும் ஒன்றாக கலந்து கொண்டனர்.

இந்த நடவடிக்கைகள் எதிர்வரும் ஜூன் மாதம் 6ஆம் திகதி முதல் இளவரசர் தன் தாயோடு சேர்ந்து அதிகாரப்பூர்வமான பணிகளை கவனிப்பதற்கான முன்னோட்டம் என்று கருதப்படுகின்றது. (ற)

# இந்துக்களை தாக்கினால் கடுமையான நடவடிக்கை

## *பங்களாதேஷ் பிரதமர் எச்சரிக்கை*

டாக்கா,ஜன.22

இந்துக்கள் மீது தாக்குதல் நடத்துவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா.



பங்களாதேஷில் கடந்த 5ஆம் திகதி பொதுத் தேர்தல் பெரும் வன்முறைகளுடன் நடைபெற்றுமுடிந்தது. அதன் தொடர்ச்சியாகத் தற்போதும் அங்கு வன்முறைச் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன. வன்முறைகளின்போது இந்துக்கள் அதிகளவில் குறிவைத்துத் தாக்கப்படுகின்றனர் என்று கூறப்படுகின்றது.

இந்தநிலையில் இந்துக்கள் அதிகம் வாழும் சத்கிரா பகுதிக்கு பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா நேரில் சென்று நிலைமைகளை அவதானித்தார். அதன்பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்தியாவில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வசிப்பதை யாரும் மறந்து விடாதீர்கள். இங்கு இந்துக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டால், இந்தியாவில் உள்ள முஸ்லிம்கள் தாக்கப்பட வாய்ப்புள்ளது. பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களும் பங்களாதேஷில் சம உரிமையுடன் தொடர்ந்து வசிக்கலாம். நாட்டில் மக்களிடையே நிலவும் அமைதியை யாரும் சீர்குலைக்கக் கூடாது என்று எச்சரிக்கை விடுக்கிறேன். த்கிரா பகுதியில் வன்முறையில் ஈடுபட்டவர்கள் எங்கு பதுங்கியிருந்தாலும் கண்டுபிடிக்கப் படுவார்கள்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## ம.ஆபிரிக்காவில் வன்முறை; மக்கள் தேவாலயத்தில் தஞ்சம்



ஜீமா, ஜன.22

மத்திய ஆபிரிக்கக் குடியரசில் இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டுள்ள முஸ்லிம்கள் 700 பேர் தேவாலயங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

மத்திய ஆபிரிக்க குடியரசில் கடந்தாண்டு மார்ச் மாதம் முதல் இராணுவ புரட்சி ஏற்பட்டதில் இருந்து வன்முறைச் சம்பவங்கள் தொடர்கதையாகி விட்டன. கடந்த ஒரு மாதமாக கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே பெரும் கலவரம் இடம்பெற்று வருகின்றது. கடந்த சில நாள்களுக்கு முன் நடந்த மோதலில் கூட 6 முஸ்லிம் உட்பட 7 பேர் உயிரிழந்தனர். அதனால் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வேறு இடங்களில் தஞ்சமடைந்[illegible]

கலவரத்தால் பாதிக்கப்பட்டு அகதிகளாக வருவோருக்கு, போலி நகரில் உள்ள தேவாலய நிர்வாகத்தினர் அடைக்கலம் கொடுத்துள்ளனர். அங்கு சுமார் 700 முஸ்லிம்கள் தங்கி உள்ளனர்.

அதேவேளை நேற்றுமுன்தினம் கூடிய அந்நாட்டின் தேசிய இடைக்காலச் சபை உறுப்பினர்கள், இடைக்கால ஜனாதிபதியை தெரிவு செய்தனர். இரண்டு சுற்று வாக்கெடுப்புக்குப் பின்னர் பாங்குயி நகரத்தின் மேயராகப் பணி புரிந்து வரும் கேதரின் சம்பா பன்சா ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கலவரங்கள் நிறைந்துள்ள மத்திய ஆபிரிக்க குடியரசில், ஜனநாயக நெறியை நிலைநிறுத்தும் விதமாக நடைபெற்றுள்ள இந்தத் தேர்தல் ஒரு புதிய தொடக்கத்தை குறிக்கின்றது என ஐ.நாவின் ஒருங்கிணைந்த அமைதி பாதுகாப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது. (ற)

## திருமணத்துக்குப் பயந்து தலைமறைவான மகன்; பத்திரிகைகளில் விளம்பரமிட்டு தாய் வலைவீச்சு

பீஜிங், ஜன. 22

திருமணத்துக்குப் பயந்து ஒழி ஒளித்த மகனைத் தேடி பத்திரிகையில் விளம்பரமிட்டுள்ளார் சீனத் தாய் ஒருவர்.

சீனாவை சேர்ந்தவர் பெங். தன் படிப்பை முடித்து, ஆஸ்திரேலியாவில், வேலை பார்த்து வருகிறார். பெங்கின் குடும்பம், சீனாவில் உள்ள, குவாங சவ் என்ற பகுதியில், வசித்து வருகிறது. ஆஸ்திரேலியாவில் உள்ள பெங்கை, சீனாவிற்கு திரும்பி வந்து, திருமணம் செய்து கொள்ளும்படி, அவரது குடும்பத்தினர் வற்புறுத்தி வந்தனர்.

இந்த தொல்லை தாங்க முடியாத பெங், குடும்பத்தினரிடமிருந்து வரும் அழைப்புகளை துண்டித்தார். இந்நிலையில், பெங்கை தொடர்பு கொள்ள முடியாமல், தவித்து வந்த அவர் தாய், ஆஸ்திரேலியாவில் உள்ள, பிரபல சீன நாளிதழ் மூலம், விளம்பரம் கொடுத்தார். அதில், 'நான், உன்னைத் தொடர்பு [illegible] ருந்து பதில் வரவில்லை. இந்த கடிதத்தை நீ பார்ப்பாய் என நம்புகிறேன். உன் தந்தையும், தாயும் இனி, உன்னை திருமணம் செய்து கொள்ளும்படி, வற்புறுத்த மாட்டோம். ஜனவரி, 31ஆம் திகதி நடக்க இருக்கும், சீன புத்தாண்டை, நமது [illegible] விளம்பரமிட்டுள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். வைத்தியசாலை வளாகத்தில் நாய்களின் தொல்லை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.22

யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தில் கட்டாக்காலி நாய்களின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக விடுதியில் தங்கியிருக்கும் நோயாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இரவு வேளைகளில் கூட்டம் கூட்டமாக விடுதிகளின் முன்பகுதியில் படுத்திருக்கும் நாய்கள் நள்ளிரவில் பெரும் சத்தத்துடன் ஊளையிடுவதாலும், தமக்குள் கடிபட்டுக் குரைப்பதாலும் நோயாளிகளது நித்திரை பெரிதும் பாதிப்படைகின்றது. இதனால் தாம் நித்திரையின்றிப் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக நோயாளிகள் தெரிவிக்கின்றனர். இதனைத் தடுக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கேட்டுள்ளனர். (ந-100)

**BANKING & AAT** Foundation Intermediate Final **CLASSES FOR YOU**
புதிய பிரிவுகள் ஆரம்பம்
25 JAN 2014 (Sat)
நேரம் காலை 8.30
மிகத்தரமான விரிவுரையாளர்களுடன் இணைந்து கொள்ளுங்கள்
(43839)
**SPECTRA SKILLS**
No: 19, Stanley Road, Jaffna.
021 222 1422 | 021 222 1423

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**
இல.50/1, நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறையில் சகல வசதிகளும் கொண்ட வீட்டுடன் கூடிய 3¾ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:075 760 5848, 075 843 7293
(43801)(4.8.3)

**ஆங்கில மொழி மூலமான முன்பள்ளி**
2+ முதல் இணையலாம். ஆங்கிலத்தில் பேசலாம், ஆடலாம், திறமை மிக்க குழந்தையாக மாற்ற உடன் அழையுங்கள். (10 மாணவர் மட்டுமே அனுமதி)
தொடர்பு:077 393 6964,
இடம்: சட்டநாதர் கோயிலடி. (43825)(4.6)

**காணி விற்பனைக்கு**
அளவெட்டி, டச் வீதியில் உள்ள 7½ பரப்புக் காணி உடன் விற்பனைக்கு. தோட்டம் செய்ய, கடைகள் கட்ட உகந்தது.
தொடர்பு:077 899 3561 (43520)(4.6)

**TVகள் மலிவு விலையில்**
மிக மிக மலிவு விலையில் SONY பனசோனிக் TVகள் 21"-14,000/=, 29"-15,000/= DVD-3,000/= குளிர்சாதனப் பெட்டிகள், CD ரேடியோ-கசெற் Box அம்பிளிபயர் DTS என்பன.
தொடர்பு : 077 044 0570 (41773)(7.8.3)
ரேவி ரேற் சென்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்)
56, K.K.S. வீதி, சுன்னாகம்.

**கடை/ காட்சியறை வாடகைக்கு**
யாழ். நகரின் கஸ்தூரியார் வீதியில் வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் 25X35 அடி இரு இணைந்த/தனித் தனிக் கடை வாடகைக்கு. நகைக்கடை, காட்சியறை/ வேறு வியாபாரத்திற்கு. (43742)(1.5.6)
தொடர்பு:077 368 6142

**கார் விற்பனைக்கு**
பல்கலைக்கழக புறொபஸர் ஒருவரின் பாவனையில் உள்ள Honda Civic (புத்தம் புதிதாக ஜப்பானில் இருந்து இறக்குமதிசெய்யப்பட்டது) 301-XXXX விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 454 8375 (42229)(45.6.3)

**உடனடி வேலைவாய்ப்பு**
1.கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
- O/L அல்லது A/L சித்தி பெற்றவர்கள்.
- மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்
- கவர்ச்சியான ஆளுமைமிக்க இருபாலரும் தேவை
- கவர்ச்சிகரமான சம்பளம்


2.உணவு தயாரிப்பாளர்
- முன் அனுபவமுள்ளவர்கள் தேவை
- இருபாலரும் தேவை

எதிர்வரும் 23.01.2014 அன்று வியாழன் பி.ப2.00 மணிக்கு சுயவிபரக்கோவைகளுடன் வருகை தரவும்.
**128,Brown Road Jaffna**
0710920920 0217538326
www.nationjobbank.com

**Institute of Junior**
(Engeish Medium)
→ Elocution Classes
எலக்கியூசன் வகுப்புக்கள்
→ Spoken
→ Written
Preschool Children
Grade - 01, 02, 03, 04
30.01.2014இற்கு முன் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
இல.926, பருத்தித்துறை வீதி, நல்லூர் (சட்டநாதர் கோயில் முன்)
Email-Instituteofjunior 2013@gmail.com T.P:- 0771999630, 0212054052

**SUMITOMO**
Original Japan
பாதுகாப்பானவை நம்பகரமானவை
உலகில் மிகப்பெரிய உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான சுமிரோமோ ரப்பர் இன்டஸ்றீஸினால் சுமிரோமோ ரயர் யப்பானில் உற்பத்தி செய்யப்படுகின்றது.





- அதிஉயர்தரம்
- அதிகூடிய தூரம்
- நவீன வடிவமைப்புகள்
- ஸ்திரத்தன்மை
- உயர் தொழில்நுட்பம்

யாழ் நகரில் உங்கள் தேவைகளுக்கு
**பொபியூலர் மோட்டர் ஸ்டோர்ஸ்**
270, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.
தொ.பே.இல : 021-222 3535, 021-222 2403
பெக்ஸ் : 021-222 3535
**V.R. VADIVETKARASAN ENTERPRISES**
271, SEA STREET, COLOMBO - 11.
TEL : 0112 434 800, 2435732 Fax : 2435731
(C/10600)(2.6)

ஊரெழு - மடத்துவாசல் சுந்தரபுரி
**அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்**
**மஹா கும்பாபிஷேகம்**
சிறப்புற வாழ்த்துகின்றோம்

நிகழும் விஜய வருடம் தை மாதம் 9 ஆம் நாள், இன்று (22.01.2014) புதன்கிழமை கிருஷ்ணபக்ஷ ஷஷ்டி திதியும் அத்த நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் ஜீர்ணோத்தாரண புனராவர்த்தனம் பிரதி சித்தயோகமும் கூடிய நன்நாளில் காலை 9.30 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் பஞ்சகுண்ட மஹாயாக கும்பாபிஷேகம் இடம்பெறும்.




No. 15, Noel Mendis Mawatha,
Modarawila Industrial Estate, Panadura, Sri lanka.
T.P: 0382240040-5, 2243166-9, 038-5599800-8
www.causewaypaints.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரமில்லை இருட்டில் மக்கள்

கிளிநொச்சி, ஜன.22

கிளிநொச்சி ஏ-35 வீதியின் பரந்தன், உண்டியல் வீதி சந்தியில் இருந்து வை.எம்.சி.ஏ. சந்தி வரையான பகுதிக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படாமையால், இந்தப் பகுதி மக்கள் இரவு வேளையில் இருளின் மத்தியில் வாழ்வதாகத் தெரிய வருகின்றது.

போரின் பின்னரான மீளக் குடியமர்வை அடுத்து கடந்த 2010 ஆம் ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் மீளக்குடியமர்ந்த கோரக்கன்கட்டு, முரசுமோட்டை, ஊரியான் ஆகிய கிராமங்களில் வசிக்கும் குடும்பங்கள் போதிய அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் வசித்து வருகின்றன.

இதேவேளை இந்த வீதியின் பரந்தன் சந்தியில் இருந்து முதலாம் வீதி முதல் இரண்டாம், மூன்றாம், நான்காம் வீதிகள் அடங்கலாக உண்டியல் வீதி வரையும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் உண்டியல் சந்தியில் இருந்து கோரக்கன்கட்டு வை.எம்.சீ.ஏ. சந்தி வரையான பகுதிகளுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. இதனால் இந்த இடைப்பட்ட பகுதியில் வசிக்கும் சுமார் 65க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் இரவில் இருளில் மூழ்கிக் கிடக்கும் தமது பகுதிகளுக்கு மின்சாரத்தை வழங்குமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-55)



மன்னார் கடைத் தொகுதி நேற்று முன்தினம் திங்கட்கிழமை நண்பகல் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

# மன்னாரில் 40 கடைகள் கொண்ட கடைத் தொகுதி திறந்து வைப்பு

மன்னார், ஜன.22

மன்னார் நகர சபையால் புதிதாக அமைக்கப்பட்ட கடைத் தொகுதி நேற்று முன்தினம் திங்கட்கிழமை நண்பகல் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் தனியார் பஸ் தரிப்பிடத்துக்கு அருகில் மன்னார் நகர சபையால் 40 கடைகள் கொண்ட கடைத் தொகுதி ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. தற்போது 26 கடைகளின் நிர்மாணப் பணிகள் முடிவடைந்துள்ளன. இந்தக் கடைகள் தலா ஒரு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

மன்னார் வாராந்த சந்தையில் வர்த்தக நிலையங்களைஅமைத்து வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்ட மன்னாரை வதிவிடமாகக் கொண்ட வர்த்தகர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இந்தக்கடைகள் வழங்கப்பட்டன.

மன்னார் நகர சபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் குறித்த கடைத் தொகுதியின் திறப்பு விழா வைபவம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மன்னார் நகர சபையின் உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், நகர சபையின் செயலாளர் லேனாட் பிரிட்டோ, நகர சபை உறுப்பினர்கள், நகர சபை அலுவலர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

மன்னார் வர்த்தகர்களின் நீண்டநாள் கோரிக்கை இதன் மூலமாக நிறைவேறியுள்ளது. (க-56)

# கட்டடங்கள் இல்லாத கல்வி அலுவலகங்கள்

*பாடசாலைகளில் இயங்க வேண்டிய அவலம்*

அக்கராயன், ஜன.22

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள கல்விக் கோட்டங்களுக்கு நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கப்படாமையால் பாடசாலைகளின் ஒரு பகுதியில் அவை இயங்கவேண்டிய அவலநிலை உருவாகியுள்ளது

போரின் போது பெரும் அழிவுகளை எதிர்கொண்ட கிளிநொச்சி மாவட்டத்தின் உட்கட்டமைப்புப் பணிகள் இடம்பெற்று வரும் நிலையில் கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கென நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கப்படவில்லை.

இது தொடர்பாக நீண்ட நாள்களாகக் கோரிக்கை விடப்பட்ட போதிலும் அவை நிறைவேறாத நிலையே காணப்படுகின்றது.

இது தொடர்பாக வடமாகாண கல்வியமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தற்போது வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய கோட்டக் கல்வி அலுவலகங்கள் நிரந்தரக் கட்டடங்கள் இல்லாத நிலையில் இயங்கி வருகின்றன. (க-18)

# கிராமப் பாடசாலைகளில் மாணவரை இணைத்துக் கொள்வது வரவேற்கத் தக்கது

*வவுனியா கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் தெரிவிப்பு*

வவுனியா, ஜன.22

கிராமப்புறங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் பிள்ளைகளை இணைத்துக் கொள்கின்றமை வரவேற்கத்தக்க விடயமாகும். இவ்வாறு தெரிவித்தார் வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் ஆசிரிய ஆலோசகர் திருமதி உ. சுஜாதா.

வவுனியாமுருகனூர் சாரதா வித்தியாலயத்தில் இடம்பெற்ற தரம் ஒன்றில் மாணவர்களை இணைக்கும் கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் ;

தமது பிள்ளைகளை நகரப் புறப் பாடசாலைகளுக்கு அனுப்பாமல் இந்தப் பாடசாலையை முன்னேற்ற வேண்டும் என்ற அக்கறையுடன் தமது பிள்ளைகளை பெற்றோர்கள் இணைத்தது வரவேற்கத்தக்க விடயமாகும். என்றுமே இல்லாதவாறு இம்முறை 56 பிள்ளைகளை பெற்றோர் இந்தப் பாடசாலையில் தரம் 1 வகுப்பில் இணைத்துள்ளார்கள். இதையொரு வரலாற்றுச் சாதனை எனக் குறிப்பிட்டுக் கொள்வதில் தவறில்லை. எத்தனையோ நகரப் பாடசாலைகள் இருக்கும் போது கிராமப்புற பாடசாலைகளிலும் பிள்ளைகள் சிறந்த கல்வியைப் பெற்றுக் கொள்ள முடியும் என எண்ணி தமது பிள்ளைகளை இணைத்த பெற்றோரைப் பாராட்டுகின்றேன்.

> 56 பிள்ளைகளை பெற்றோர் இந்தப் பாடசாலையில் தரம் I வகுப்பில் இணைத்துள்ளார்கள்.

கிராமப்புறப் பாடசாலைகளில் படித்த பலர் இன்று பல்வேறு துறைகளில் பெரிய பதவிகளில் உள்ளனர். இவர்களைப் போல் எதிர்காலத்தில் இந்தப் பிள்ளைகளும் தலைசிறந்து விளங்குவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

கிராமப்புறப் பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற அதிபர்கள், ஆசிரியர்களின் செயற்பாடுகள் சிறப்பாக உள்ளன. பிள்ளைகளின் பாதுகாப்பும் இங்கு பேணப்படுகின்றது என்றும் தெரிவித்தார். (க-421)

## இலவசமாக மூக்குக் கண்ணாடிகள்

முல்லைத்தீவு, ஜன.22

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வள்ளிபுனம் பகுதியில் இராணுவத்தின் 23ஆவது படைப் பிரிவினரின் ஏற்பாட்டில் பார்வைக் குறைபாடுடைய 253 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

வள்ளிபுனம் பகுதியில் கண் பார்வைக் குறைபாடு உடையவர்களுக்கான கண் பரிசோதனையும் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றன.

வள்ளிபுன இராணுவ முகாமில் நடைபெற்ற இந்த நிகழ்வின் போது உடையார் கட்டு வள்ளிபுனம் - தேவிபுரம், இடைக்கட்டு உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த சுமார் 253 பேர் பயன் பெற்றுள்ளனர். இதில் 23ஆவது படையினரின் அதிகாரியான சுனில் ஜெயரத்தின கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-55)

# ஓட்டோ விபத்தில் சாரதி படுகாயம்

மன்னார் மதவாச்சி பிரதான வீதியில் பயணித்த ஓட்டோவொன்று குடை சாய்ந்ததில் அதன் சாரதி காயங்களுக்கு உள்ளானார். மன்னாரில் இருந்து ஐஸ்கட்டிகளை ஏற்றிக்கொண்டு உயிலங் குளம் பிரதான வீதியூடாகச் சென்று கொண்டிருந்த ஓட்டோவைப் பின்னால் வந்து கொண்டிருந்த வெள்ளை நிற பிக்கப் வாகனம் ஒன்று முந்திச் சென்றுள்ளது.

இதன்போது ஓட்டோவைச் செலுத்தியவர் நிலை தடுமாறியதால் ஓட்டோ குடை சாய்ந்துள்ளது. இதனால் ஓட்டோ சேதத்துக்கு உள்ளாகியதோடு அதனைச்செலுத்திச்சென்றவரும் காயங்களுக்கு உள்ளா னார்.

உடனடியாக அங்கு வந்தவர்கள் ஓட்டோவை மீட்டதுடன் கடும் காயங்களுக்குள்ளான சாரதிக்கு முதலுதவி செய்த பின்னர் மீண்டும் மன்னாருக்கு அனுப்பி வைத்துள்ளனர். ஆனால் குறித்த வெள்ளை நிற பிக்கப் வாகனம் அவ்விடத்தில் நிற்காது சென்று விட்டமை குறிப்பிடத்தக்கது. (க-56)

# மதுபோதையில் சென்றவர்களுக்கு நீதிமன்றத்தால் தண்டனை

கிளிநொச்சி நகரப் பகுதியில் மதுபோதையில் சைக்கிளில் சென்றவர்களுக்கு தண்டம் விதிக்கப்பட்டதுடன் விளக்கமறியல் உத்தரவும் வழங்கப்பட்டது.

பரந்தன் ஏ-9 வீதியில் அண்மையில் இரவு வேளையில் மதுபோதையில் சைக்கிளில் பயணம் செய்த ஐந்து பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் ஐந்து பேரும் கிளிநொச்சி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே இவர்களுக்குத் தலா நூறு ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. அண்மைய நாள்களாக இடம்பெற்று வரும் வீதி விபத்துக்களைத் தடுக்கும் வகையில் இவ்வாறு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-55)



## சிரமதானப் பணி

அக்கராயன் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி எம்.எம்.டி.என். சதுரங்க தலைமையிலான பொலிஸார் பொது மக்களுடன் இணைந்து ஸ்கந்தபுரம் இல.2 பாடசாலையில் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (க-18)

# கல்வி அமைச்சின் செயலாளர் வவுனியா வருகை

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வவுனியாவுக்கு வருகை தந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். கடந்த 15 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு வவுனியாவை வந்தடைந்த அவர் பூந்தோட்டம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற பொங்கல் விழாவில் பங்கு பற்றினார்.

பின்னர் மாலை 4 மணிக்கு வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் உள்ள தரணிக்குளம் கணேச வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நூலகத்தைத் திறந்து வைத்தார்.

பின்னர் தரணிக்குளம் கிராமத்தில் அமைக்கப்பட்ட ஆரம்பப் பாடசாலையின் கட்டடத்தை மாலை 5 மணிக்குத் திறந்து வைத்தார்.

அங்கு கல்வி நடவடிக்கை தொடர்பாகவும், கிராம அபிவிருத்தி தொடர்பாகவும் முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடினார். இவருடன் வடமாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத் துறை அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி சு.செபஸ்தியானும் உடனிருந்தார். (க-421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தமிழரசுக் கட்சியின் கிளை திறப்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மண்முனை மேற்கு வவுணதீவுப் பிரதேசக் கிளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய பொன்.செல்வராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலரும் மாகாண சபை உறுப்பினருமாகிய கே.துரை ராஜசிங்கம், மாகாண சபை உறுப்பினர் மா.நடராசா மற்றும் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணித் தலைவர் கி.சேயோன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கற்குவாரி உடைப்பு; மக்களுக்கு அதிர்ச்சி


அனுராதபுரம் -ஹொரவப் பொத்தானை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வீரச்சோலை முஸ்லிம் கிராமத்தில் கற்குவாரி உடைக்கப்பட்டு வருவதால் அந்தப்பகுதி மக்கள் வெடிச் சத்தங்களால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.
அரசினர் பாடசாலை மற்றும் பாலர் பாடசாலைக்கு ஐநூறு மீற்றருக்கு அப்பால் உள்ள இந்தக் கற்குவாரியை உடைப்பதற்கு அனுமதி வழங்கியது யார் என்று அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.
வெடிப் பொருள்கள் பாவித்து கற்குவாரியை உடைப்பதால் மாணவர்கள் அதிர்ச்சிக்கு உள்ளாக்கின்றனர். கற்குவாரிக்கு அருகிலுள்ள வீடுகளில் வெடிப்புக்கள் தோன்றுகின்றன என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.
கற்குவாரியை உடைப்பதால் இரவு நேரங்களில் தூங்க முடியாத நிலை ஏற்படுகின்றது.



பாடசாலை வகுப்பு நேரங்களில் சத்தம் மற்றும் அதிர்வுகள் ஏற்படுகின்றன என்று மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.
இது தொடர்பில் ஹொரவ்பொத்தானை பிரதேச செயலர் சாந்த தசநாயகவிடம் கேட்டபோது, இது தொடர்பில் தனக்கு இது வரை முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கவில்லை என்று அவர் கூறினார். (ச)

## படகுப் பாதை சேவை இடைநிறுத்தப்பட்டது

### பயணிகள் அவதி



மட்டக்களப்பு.ஜன.22
கிழக்கில் படுவான்கரையையும் - எழுவான்கரையையும் இணைக்கும் முகமாக மண்முனை வாவியில் சேவையில் ஈடுபடும் இரு இயந்திர படகுகளில் ஒரு படகுப் பாதை சேவையில் ஈடுபடாமல் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள் ளது.
கடந்த 3 ஆம் திகதியிலிருந்து நேற்று செவ்வாய்க்கிழமை வரை படகுப்பாதை சேவையில் ஈடுபடாமல் இடைநிறுத்தி வைக் கப்பட்டுள்ளது.
அதனால் நாளாந்தம் பாதையை பயன்படுத்தும் பிரயாணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
இந்த இயந்திர படகுப்பாதையை தினமும் பயன்படுத்தும் ஆசிரியர்கள், அரச, அரச சார்பற்ற திணைக்களங்களின் ஊழியர்கள், அங்காடி வியாபாரிகள், பொது மக்கள் எனப் பலர் அசௌகரியங்களுக்கு உள்ளாகி உள்ளனர் என்று பிரயாணிகள் விசனம் தெரிவித்தனர்.

"-"

**மண்முனை வாவிக்கு மேலால் சேவையில் ஈடு படும் இயந்திரப் பாதை சேவையில் இல்லாததால் நாளாந்தம் பாதையைப் பயன்படுத்தும் பிரயாணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரயாணிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ச)

# தமிழர் உரிமையைப் பெற இராஜதந்திரப் போராட்டம்

## செல்வராசா எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு.ஜன.22
அன்று அகிம்சைப்போராட்டம் என்றும்பின்னர் ஆயுதப் போராட்டம் என்றும் பலபோராட்ட வடிவங்களை தமிழ் மக்கள் சந்தித்தனர்.
ஆனால் இன்று நாம் தமிழரின் உரிமைகளைப் பெற எமது தமிழ்த்தேசியத் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தலைமையில் இராஜதந்திரப் போராட்டத்தை சர்வதேசத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக மேற்கொண்டு வருகின்றோம்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா தெரிவித்தார்.
சிக்கனகடனுதவி கூட்டுறவுச் சங்கம் நடத்திய வருடாந்த பரிசளிப்பு விழா குருமண்வெளி, 12ஆம் வட்டாரத்தின் சக்தி சிக்கன சேமிப்பு கடனுதவி சங்க மண்ட பத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.
இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"-"

**எமது போராட்டம் முடிந்து விடவில்லை. நாங்கள் இன்னமும் பொறுமையைக் கடைப் பிடித்தால் முழுமையான சுதந்திரத்தைப் பெறலாம்.**

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் ஐ.நா. சபை அமர்வானது மூன்றாவது தடவையாக இடம்பெறப்போகின்ற ஒன்றாகும். இரண்டு தடவைகளில் தமிழர்களுக்காக சர்வதேசம் குரல் கொடுத்து இருப்பதோடு பல தீர்மானங்களையும் நிறை வேற்றி இருக்கின்றது .
இதேபோன்று மூன்றாவது தடவையாகவும் குரல்கொடுக்க இருக்கின்றார்கள். அதிலும் எமக்கு வெற்றி நிச்சயம் கிடைக்கும்.
எமது போராட்டத்தின் வடிவங்கள் அகிம்சை என்றும் ஆயுதப் போராட்டம் என்றும் பல கோணங்களில் சென்று இன்று சர்வதேச மயப்படுத்தப்பட்ட இராஜதந்திரப் போராட்டமாக மாற்றம்பெற்றுள்ளது.
இதில் நாம் அனைவரும் பொறுமைகாக்கவேண்டியது கட்டாயமாகும்.
இந்த நாடு சிங்கள மக்களுக்கு மாத்திரம் சொந்தமானதல்ல. இது அனைத்து இனங்களுக்கும் சொந்தமான நாடு. இது சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என பலதரப்பட்டோருக்கு சொந்தமான நாடு. அந்த வகையில் நாம் நிதானமாகச் சிந்தித்து எமது உரிமைகளைப் பெறுவதற்கு முயற்சிக்கவேண்டும்.
அப்போதுதான் அந்த உரிமை நிரந்தரமானதாக அமையும்.
எங்களுடைய அபிலாசைகளைவென்றெடுப்பதற்கு அனைவரும் அயராது பாடுபட வேண்டும். அப்போதுதான் அதனை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும். எமது போராட்டம் முடிந்து விடவில்லை. நாங்கள் தொடர்ந்தும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். அப்போதுதான் முழுமையான சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.
இந்த நாடு பல்லின சமூகம் வாழும் ஒரு நாடாகும். இதனால் கல்வியில் போட்டித் தன்மை அதிகரித்துக் கொண்டே செல்கின் றது. அதனால் எமது சமூகமும் கல்வியில் போட்டி போட்டு தமது கல்வியைத் தொடர்ந்தால் மாத்திரமே எதிர்காலச்சவால்களுக்கு ஏற்றாற்போல் போட்டி உலகில் வாழமுடியும்- என்றார். (ச-31)

## திறமைகளை அடையாளம் காண பயிற்சி

மட்டக்களப்பு.ஜன.22
கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையில், இளம் வீரர்களின் திறமைகளை அடையாளம் காணும் வகையிலான பயிற்சி முகாம் மட்டக்களப்பு, வவுணதீவுபிரதேச செயலக பிரிவில் நடைபெற்றது.
வவுணதீவு பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் வி.பூபாலாராஜாவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் பயிற்சி முகாமில், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வி.ஈஸ்வரன், பயிற்றுவிப்பாளர் ரி.சோமாஸ்கந்தன், கல்லொளை குடா வித்தியாலய அதிபர் ரி.புலேந்திரகுமார், உடற்பயிற்சி ஆசிரியை திருமதி எஸ்.கயல்விழி உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச)

உலகின் முன்னணி நிறுவனமான
UPS இன் விரைவான
பொதிகள் சேவை
இப்பொழுது யாழ்ப்பாணத்தில் UPS
★ உங்கள் இல்லத்திற்கு வந்து பொதிகளைப் பெற்றுக்கொள்வதோடு அப்பொதிகள் சென்றடைந்ததை தெரியப்படுத்துவோம்.
★ 3 நாள்களில் அனைத்து நாடுகளுக்குமான சேவை.
★ ஒரு நாளில் உள்ளூர் சேவை
★ நிறை கூடிய பொதிகளுக்கு விஷேட விலைக் கழிவுகள்!
நிபந்தனைக்குட்பட்டது
தொடர்பு:
021 222 4593,
077 342 4356.
644, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/11504)(3.6.4)

சிவமயம்
சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியம் நடத்தும்
மாபெரும் ஓம் நமசிவாய பிரார்த்தனை
வாகன ஊர்திப் பவனி
ஒன்றிய வித்துவசபை சிவாச்சாரியார்களது ஆசியுடன்
காலம் : 24.01.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு
இடம் : வண்ணை வைத்தீஸ்வர ஆலயத்தில் இருந்து ஆரம்பித்து காங்கேசன்துறை வீதி வழியாக
கீரிமலை நகுலேஸ்வர ஆலயம் சென்றடைதல்
தலைவர் : சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள் (ஒன்றியத் தலைவர்)
ஊர்வல பிரார்த்தனை தினத்தன்று (24.01.2014) வெள்ளிக்கிழமை அனைத்து ஆலயங்களிலும் அதிகாலை 5.00 மணிக்கு மணியோசை எழுப்பி காலை 8.00 மணி வரைக்கும் ஓம் நமசிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தினை (மக்களுக்கு இடையூறுகள் விளைவிக்காத வகையில் அளவான சத்தத்துடன்) ஒலிபெருக்கிகள் மூலமாக ஒலிக்கவிட்டு பிரார்த்தனைக்கு வலுச்சேர்க்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.
சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியம்
யாழ்ப்பாணம்.
(C/1076)(7.6.3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## ஜனாதிபதிக்கு வரவேற்பு

இரண்டுநாள் உத்தியோகபூர்வப் பயணத்தை மேற்கொண்டு ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு திங்கட்கிழமை சென்றடைந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அபுதாபி சர்வதேச விமான நிலையத்தில் வைத்து அபுதாபி மாநகர சபைத் திணைக்களத்தின் தலைவர் மஜீத் அலி அல் மன்சூரி மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கான இலங்கைத் தூதர் பேராசிரியர் மஹிந்த பாலசூரிய ஆகியோர் வரவேற்றனர்.

# ஓரம் கட்டப்படுகிறார் மஹிந்த சமரசிங்க

கொழும்பு.ஜன.22

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் இடம்பெறும் ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வில் கலந்து கொள்ளும் இலங்கைப் பிரதிநிதிகள் தொடர்பாக அரசுக்குள் பனிப்போர் ஆரம்பமாகியுள்ளதாக 'மவ்பிம' சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமை அமர்வுகளில் கலந்து கொண்ட அமைச்சர் மஹிந்த சமரசிங்கவுக்கு இலங்கை தொடர்பான எந்தவொரு அறிக்கையோ, தகவல்களோ வழங்கப்படக் கூடாது என்று வெளிவிவகார அமைச்சின் உயரதிகாரிகள் உத்தரவிட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதே போன்று ஜெனீவாவில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கும் அதிகாரிகளால் உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

அமைச்சர் மஹிந்த சமரசிங்கவுடன் எந்தத் தகவலையும் பகிர்ந்து கொள்ள வேண்டாம் என்று அவர்களுக்குப் பணிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மார்ச்சில் இடம்பெறும் மனித உரிமைகள் கூட்டத்தொடர் அண்மித்துக் கொண்டிருக்கும் நிலையில் வெளிவிவகார அமைச்சு ஏற்கெனவே அமைச்சர் மஹிந்த சமரசிங்கவை ஓரம்கட்டி ஒதுக்கி வைக்கும் நிலைப்பாட்டை எடுத்துள்ளது எனவும் கூறப்படுகின்றது. (த-22)

# எதிர்ப்புப் போராட்டம் 28 இல் கொழும்பில்

## சிவில் அமைப்புகளும் களத்தில்

நாடுமுழுவதும் வியாபித்துச் செல்கின்ற போதைப்பொருள் மற்றும் கஸினோ கலாசாரத்துக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து பொது எதிர்க்கட்சிகளும், சிவில் அமைப்புகளும் எதிர்வரும் 28ஆம் திகதி கொழும்பில் தேசிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தவுள்ளன.

ஐ.தே. தலைமையிலான பொது எதிர்க்கட்சிகள், ஐக்கியத்துக்கான சக்தி அமைப்பு, சிவில் அமைப்புகள், தொழிற்சங்கங்கள், கஸினோ எதிர்ப்பு இயக்கம் என்பன இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்கேற்கவுள்ளன.

கொழும்பு, ஹைட்பார்க் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள இந்த பிரதான ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொள்வதற்காக, ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஆர்ப்பாட்டப் பேரணி லிப்டன் சுற்று வட்டாரத்திலிருந்தும், பொது எதிர்க்கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் தலைமையிலான பேரணி யூனியன் பிளேஸ் பிரதேசத்திலிருந்தும், தொழிற் சங்கங்கள் தலைமையிலான பேரணி மருதானை காமினி திரையரங்கிற்கு அண்மையிலிருந்தும் ஆரம்பமாகி, ஹைட் பார்க் விளையாட்டு மைதானத்தைச் சென்றடையவுள்ளன.

நாடு முழுவதும் வியாபித்து வரும்போதைப்பொருள், கஸினோ கலா சாரத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், வாழ்க்கைச் செலவைக் குறைத்து மக்களுக்கு மானியம் வழங்க வேண்டும் என அரசை வலியுறுத்தியும் இடம்பெறவுள்ள இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் நாட்டு மக்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று ஐ.தே.கவின் பொதுச் செயலர் திஸ்ஸ அத்த நாயக்க அழைப்பு விடுத்தார். (ச-சி)

"-"

**ஆர்ப்பாட்டப் பேரணியில் நாட்டு மக்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும்.**

# போலி நாணயத்தாள்களுடன் இருவர் கைது

கொழும்பு.ஜன.22

14 லட்சத்து 45 ஆயிரம் ரூபா பெறுமதியான 289 போலி ஐயாயிரம் ரூபா நாணயத்தாள் களுடன் இருவர் நீர்கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர். நீர்கொழும்பு, தளுபத்தை, பல்லன் சேனை வீதியில், 'இன்டர்சீட் 'வத்தை யிலுள்ள வீடொன்றில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நாணயத்தாள்களை அச்சடிக்க பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் இதன்போது மீட்கப்பட்டுள்ளன என்று நீர்கொழும்பு பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜயந்த லியனகே தெரிவித்தார்.

# மேல், தென் மாகாண தேர்தலுக்கு 6ஆம் திகதி ஐ.தே.க. வேட்புமனு

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

கொழும்பு.ஜன.22

மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கு எதிர்வரும் 6ஆம் திகதி வேட்புமனுத் தாக்கல் செய்ய ஐ.தே.க. தீர்மானித்துள்ளது.

வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் முதலமைச்சர் வேட்பாளர்கள் யார் என்று அறிவிக்கப்படும் என்று கட்சியின் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.



தென் மாகாணத்தைச் சேர்ந்த ஆளுந்தரப்புக்கு ஆதரவான பிரபல குடும்பமொன்று ஐ.தே.க.வுடன் இணையவுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களைக் கருத்தில் கொண்டு அந்த குடும்பத்தின் பெயரைத் தற்போதைக்கு அறிவிக்காமலிருக்க கட்சி தீர்மானித்துள்ளது. வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கு முன்னர் ஆளுந்தரப்பு மாகாணசபை உறுப்பினர்கள் சிலர் ஐ.தே. கவுடன் இணையவுள்ளனர் என்று அவர் கூறினார்.

ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் அங்கு அவர், மேலும் தெரிவித்ததாவது:-

மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல்களுக்கான வேட்பாளர் பட்டியலைத் தயார் செய்வதற்காக அந்த மாகாணங்களிலுள்ள ஆறு மாவட்டங்களுக்கும் வேட்பாளர் குழுவை நியமித்துள்ளோம்.

இதற்கமைய மேல்மாகாணத்தின் கொழும்பு மாவட் டத்துக்குக் கட்சியின் உப தலைவர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையிலும், கம்பஹா மாவட்டத்துக்கு பி.ஹரிசன் தலைமையிலும், களுத்துறை மாவட்டத்துக்கு கயந்த கருணாதிலக தலைமையிலும், தென் மாகாணத்தின் காலி மாவட்டத்துக்கு தயாகமகே தலைமையிலும், மாத்தறை மாவட்டத்துக்கு விஜேதாஸ ராஜபக்ஷ தலைமையிலும், அம்பாந்தோட்டை மாவட்டத்துக்கு ரஞ்சித் மத்துமபண்டார தலைமையிலும் வேட்புமனுக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழுக்கள் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட வேட்புமனுப் பட்டியலை கட்சிக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த மாவட்ட குழுக்களினூடாக வழங்கப்படுகின்ற வேட்புமனுப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் 5 ஆம் திகதி கட்சியின் முழு வேட்பாளர் பட்டியலையும் தயார் செய்து 6ஆம் திகதி வேட்பு மனுவைத் தாக்கல் செய்ய தீர்மானித்துள்ளோம்- என்றார். (ச-சி)

MINISTRY OF CONSTRUCTION, ENGINEERING SERVICES, HOUSING & COMMON AMENITIES

## DEPARTMENT OF BUILDINGS

### INVITATION FOR BIDS

### PROPOSED SUPERINTENDENTS BUNGALOW FOR INDUSTRIAL ESTATE- ACHCHUVELLY

1. **The Chairman, Regional Procurement Committee,** on behalf of the **Department of Buildings** now invites sealed bids from eligible and qualified bidders for "Proposed Superintendents Bungalow for Industrial Estate-Achchuvelly" as described below and estimated to cost **Rs.4.7 million.**

   The construction period is **84 Days**

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for Grade **C8** or above with the Institute for Construction Training and Development (ICTAD), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.
4. Interested bidders may obtain further information from the **Chief Engineer's Office (North), Department of Buildings, Beach Road ,Jaffna,** and inspect the Bidding Documents at the same address on any working day from **9:00hrs to 16:00 hrs.**
   Contact numbers are: Phone: 0212222781, Facsimile: 0212222781
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chief Engineer's Office (North), Department of Buildings, Beach Road, Jaffna** from **22.01.2014** until **31.01.2014** from **9:00hrs to 15:00 hrs** upon payment of a non refundable fee of Rupees one thousand five hundred **(Rs.1,500/-).**
6. Bids shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Chief Engineer's Office (North), Department of Buildings, Beach Road, Jaffna** to reach **on or before 10.00 hrs on 03.02.2014.** Bids will be opened soon after closing at the Chief Engineer's Office (North) Department of Buildings, Beach Road, Jaffna in presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid for a period of 63 Days from the last date fixed for receiving of Bids or any extended period.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - in the form included in Section 09 of the bidding document
   - in favour of **Director General of Buildings**
   - for an amount of **Rs.94,000.00**
   - valid up to 07.04.2014
   - issued by one of the agencies indicated in the clause 16.2 of the Bidding Data

**A.Nawas Atham**
**Director (ED)**
**Department of Buildings**
**2nd Floor, "Sethsiripaya",**
**Battaramulla.**

(C/11512)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பூனை கண்ணை மூடிக் கொண்டால் பூலோகம் இருண்டு விடாதே.....!

காணாமற்போனோர் குறித்த பெரும் மனிதாபிமான, மனித நேயப் பிரச்சினையை - விவகாரத்தை - திசை திருப்பும் முயற்சியை, அரசின் அங்கங்களில் ஒன்றான பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு முன்னெடுத்துள்ளதாக வடக்கின் சிவில் அமைப்புகள் குற்றஞ்சாட்டி உள்ளன. காணாமற்போனவர்களின் விடயத்தில் குரல் கொடுக்கும் சிவில் அமைப்புகளே இதனை விஸ்தாரமாகச் சுட்டிக்காட்டிக் கண்டனம் தெரிவித்துள்ளன.

காணாமற்போனோர் விவகாரத்தில் அரசாங்கம் நடுவு நிலையாகச் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டு ஊன்றிக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். ஒரு புறம் காணாமற்போனவர்கள் குறித்து விசாரணை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகக் கூறிக்கொண்டு, மறுபுறத்தில் அவ்வகையில் எவரும் இல்லை என்று காட்டுவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுவதாகக் கண்டனம் தெரிவிக்கப்படுகிறது; குற்றஞ்சாட்டப்படுகிறது. நேற்றுமுன்தினம் மட்டும், காணாமற்போன நூற்றுக்கும் அதிகமான பிள்ளைகள், இறந்துவிட்டனர் எனக் கருதி, அவர்களது பெற்றோர் பதிவுகளை மேற்கொண்டனர் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

இந்தப் பதிவு நடவடிக்கை குறித்து பகிரங்கப்படுத்தாமல், அது கரைச்சிப் பிரதேச சபையின் கூட்டுறவு மண்டபத்தில் நடத்தப்பட்டதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பதிவு நடவடிக்கையில், 426 பேர் பங்குபற்றினர் என்றும், அவர்களில் 110 பேர் தமது காணாமற்போன உறவுகள் இறந்துவிட்டதாக பதிவினை மேற்கொண்டனர் என்றும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இதேவேளை-

இராணுவத்தினரிடம் சரண் அடைந்து காணாமற்போனவர்கள் தொடர்பில், சரியான, தகுந்த ஆதாரங்கள் உரியவர்களால் வெளிப்படுத்தப்படும் பட்சத்தில்-

அவ்வாறு குற்றம் இழைத்தவர்கள் தொடர்பில் விசாரிப்பதற்கு சுதந்திரமான விசேட சட்ட ஆணைக்குழு நிறுவப்படும் என்று -

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கும் அந்த ஆணைக்குழுவின் தலைவர் அறிவித்திருக்கிறார்.

குறித்த காலப் பகுதியில், குறித்த- சம்பந்தப்பட்ட இராணுவ முகாமில் பணிபுரிந்த அதிகாரி யார்? மற்றும் படைவீரர்கள் யார் என்பது தொடர்பாக விசாரணை செய்யப்படும் -

அத்துடன் சட்ட மா அதிபர் திணைக்களத்தினரும் இது தொடர்பில் ஆராய்வார்கள் - சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக, சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் - என்றும் ஆணைக்குழுவின் தலைவர் விவரித்திருக்கிறார்.

இதேவேளை-

காணாமற்போனோர் குறித்து அறியும் பணியில் ஈடுபட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு வடக்கு, கிழக்கில் இருந்து பன்னிரெண்டாயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அதன் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் இடைக்கால அறிக்கை ஒன்று முதலில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இத்தகைய ஒரு சூழமைவில், காணாமற்போனவர்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையினர் இறந்துவிட்டதாக, பலாத்கார முறை சார்ந்து பதிவு செய்யப்பட்டமை, பெரும் கரும்புள்ளியாகத் தெரிகிறது.

இந்த விவகாரத்தில், மனித நேயம் முற்றிலும் அழித்து எழுதப்பட்ட செயற்பாடு, அனைத்துலகத்தின் கண்ணில் மண்ணைத் தூவுவதற்கான செயற்பாடு என்பதனை எவரும் இலகுவில் புரிந்து கொள்வர். பூனை கண்ணை மூடிக் கொண்டால் பூலோகம் இருண்டு விடுவதில்லை.

இன்னமும் இரண்டு மாதங்களில், ஜெனீவாவில் தான் சந்திக்க - எதிர்கொள்ள - உள்ள சவால்களுக்கு மேலதிகமாக புதிதாக மற்று ஒன்றையும் - அதாவது காணாமற்போனோர் விவகாரத்தையும் - அரசு (Reinforce) முறுக்கி இறக்க முயற்சிப்பது, பால் போன்று வெள்ளையாக மிகத் தொ[illegible]பாகத் தெரிகிறது.....!

# தேவைதானா இந்த ஆலோசனை?

ராஜராஜன்

"தமிழ் மக்கள் மீது கூட்டமைப்பினருக்கு கருணை இருக்குமேயானால் அவர்கள் ஜனாதிபதியின் கரங்களைப் பற்றுவதுடன் அவருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு தமிழ் மக்களுக்கான தீர்வினைப் பெறறுக் கொடுக்கலாம். அதைவிடுத்து சர்வதேசமே எமது மக்களுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று ஒப்பாரி வைப்பதால் பயன் ஏதும் கிடைக்கப் போவதில்லை" இவ்வாறு திருவாய் மலர்ந்தருளி கூட்டமைப்பினருக்கு ஆலோசனை தெரிவித்திருக்கிறார், நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆலோசகருமானரி.வி.சென்னன்.

'சென்னன் போன்றவர்கள் ஆலோசனை வழங்கும் அளவுக்குத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் நிலை பரிதாபத்துக்குரியதாக மாறிவிட்டதா என்ற சந்தேகம் பலரிடம் ஏற்பட்டிருக்கலாம். மேலும் ஜனாதிபதியின் கரங்களைப் பற்றிப் பிடிப்பதன் மூலமாகவே தமிழ் மக்களுக்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியுமென அவர் தெரிவித்திருப்பது வியப்பை ஏற்படுத்தியிருப்பதாக எவருமே தெரிவிக்க மாட்டார்கள். ஏனென்றால் சென்னன் இவ்வாறுதான் தெரிவிக்க வேண்டுமென்பது எழுதப்படாத விதி. அரசில் அங்கம் வகிக்கும் கட்சியொன்றின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடமிருந்து இவ்வாறான கருத்துக்கள்தான் வெளிவரும். வெளி வர வேண்டும்.

புலி இளைத்துப் போனால் எலி கூடச் சவால் விடும் என்று கூறுவார்கள். இறுதிப் போரின் போது புலிகள் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டு இலங்கைத் தமிழர்களின் வாழ்வு சின்னாபின்னமாக்கப்பட்ட நிலையில் பலரும் வாய்க்கு வந்தவாறு ஆலோசனை வழங்கத் தலைப்பட்டு விட்டனர். இவ்வாறு அந்த வரிசையில் நாடாளுமன்ற உறுப்பினர் சென்னனும் இணைந்து கொண்டுள்ளார்.

### ஆளும் வர்க்கத்துக்கு வால் பிடித்த பரம்பரை

கூட்டமைப்பினருக்கு ஆலோசனை வழங்கிய சென்னன் தமது பக்கத்தையும் ஒருமுறை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த நாட்டின் வரலாற்றிலே பல்வேறு வகையிலும் பாதிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வருகின்றவர்கள் மலையகத்தைச் சேர்ந்த இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். அந்நியர் ஆட்சியின் போது மலையகத்தில் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களை அமைக்கும் பொருட்டு இந்தியாவின் தமிழ் நாட்டிலிருந்து கப்பல்களில் ஏற்றி வரப்பட்ட தமிழ் மக்களின் சந்ததியினரே தற்போது மலையகத்தில் வாழ்கின்றனர்.

இவர்களின் மூதாதையர்கள் இங்கு வந்ததில் இருந்து எதிர்கொண்ட இன்னல்களை எழுத்தில் வடிக்க இயலாது. குளிருக்கு மத்தியில் தோட்டங்களை அமைக்கும் பணிகளில் ஈடுபட்ட இவர்கள் நுளம்புகளின் தாக்கத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். ஏராளமானவர்கள் மலேரியா நோயினால் உயிர்களை இழந்தனர். பலர் வெவ்வேறு நோய்களால் காவு கொள்ளப்பட்டனர். இந்தியாவில் வறுமையின் கோரப் பிடிக்குள் சிக்கித் தவித்த இவர்கள் ஒருவேளை உணவு கூடக் கிடைக்காத நிலையில் பசியால் வாடி இனிமேலும் எம்மால் இயலாது என்ற நிலையில் கப்பலில் ஏறினர். இவர்க[illegible]களுக்கு முகவர்கள் ஆசை வார்த்தைகளை அள்ளி வீசினார்கள். பாலும், பழமும் அங்கே கிடைக்கும். மூன்று வேளையும் விருந்துச் சாப்பாட்டுக்குக் குறைவில்லை. வேலைகளும் கடினமாக இருக்காது. இலங்கையில் சுகபோக வாழ்வே கிடைக்கும் என்ற மயக்கம் கலந்த வார்த்தைகள் அந்த அப்பாவிகளான ஏழை மக்களைக் கவர்ந்தன. இதனால் புது வாழ்வு தேடி இலங்கைக்குக் கப்பலில் ஏறினர்.

ஆனால் இங்கு நிகழ்ந்ததோ வேறு. முகவர்கள் கூறிய ஆசை வார்த்தைகள் எவையுமே இங்கு நிறைவேற்றி வைக்கப்படவில்லை. இவர்களுக்கு மிகக் கடுமையான வேலைகள் வழங்கப்பட்டன. இதற்கான ஊதியம் மிகக் குறைவாகவே வழங்கப்பட்டது. கடுமையாக வேலை செய்துவிட்டுக் களைத்துப் போனவர்கள் இளைப்பாறுவதற்கென ஓர் இடம் கிடைக்கவில்லை. அந்நிய ஆட்சியாளர்கள் ஏதோ மனம் இரங்கிப் புறாக்கூடுகளை ஒத்த லயன்களை அமைத்து இவர்களுக்கு வழங்கினர். இந்த லயன்களே இவர்களின் வாழ்விடங்களான வசந்த மாளிகைகள் ஆகின. இன்னும் கூட இந்த மக்கள் இந்த லயன் குடியிருப்புக்களிலேயே வாழ்வ தைக் காண முடிகின்றது.

தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் சென்னன் சார்ந்திருக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகரான அமரர் எஸ்.தொண்டமானின் தந்தையார் பெரிய கங்காணி என்ற அஸ்தஸ்துடன் இங்கே கால் பதித்துக் கொண்டவர். அந்நியருக்கு இவர் கடும் விசுவாசியாகச் செயற்பட்ட தால் வாழ்க்கையில் உயர, உயரப் பறப்பதற்கு இவரால் முடிந்தது. இன்று தொண்டமான் குடும்பம் அசைக்க முடியாததொரு சக்தியாக மலையகத்தில் உருவெடுத்துள்ளது. இதற்கு அவர்க ளின் வழிகாட்டியாகத் திகழ்ந்த அமரர் தொண்டமான் வகுத்த வியூகங்களே காரணமாக அமைந்தன. என்னதான் அவமானம் நேர்ந்தாலும் ஆளும் தரப்புடன் இணைந்து செயலாற்றுவதே மேலானது என்ற கொள்கையையே அவர் தமது இறுதிக் காலம் வரை கடைப்பிடித்தார். அவரது வாரிசான தற்போதைய அமைச்சர் ஆறுமுகனும் இந்த வழியையே பின்பற்றுகின்றார். இவரும் ஆளுந்தரப்பினரால் அவமா னங்களை எதிர்கொண்ட போதிலும் அவற்றையெல்லாம் தூக்கி எறிந்து விட்டு அரசுடன் இணைந்து செயலாற்றி வருகின்றார்.

### மலையக மக்களுக்கு என்ன பயன் கிடைத்தது

நாடாளுமன்ற உறுப்பினர் சென்னன் கூறியது போன்று ஜனாதிபதியின் கரங்களைப் பற்றிப் பிடிப்பதால் பயன் கிடைக்குமாயின் அதில் தவறில்லை. ஆனால் மலையக மக்கள் இதனால் அதிக பயன் பெற்றதாகத் தெரியவில்லை. அவர்களின் வாழ்க்கை முறையில் பெரிய மாற்றங்களையும் காண முடியவில்லை. ஓரளவு படித்தவர்களும், வசதி படைத்தவர்களும் நகரங்களை நாடிச் செல்ல கீழ் நிலையில் இருக்கும் மக்கள் துன்பங்களுக்கு மத்தியிலேயே தமது வாழ்க்கையைக் கடத்தி வருகின்றனர். இன்றும் கூட லயன் குடியிருப்புக்களே மலையகத்தின் பல பாகங்களிலும் காணப்படுகின்றன. அடுக்கு மாடிக் குடியிருப்புக்களா அல்லது தனிவீடுகளா என்ற விவாதம் தொடர்கின்றதே தவிர உருப்படியாக ஒன்றுமே நடக்கவில்லை. அந்த மக்களின் பொருளாதார நிலையிலும் மாற்றம் தெரியவில்லை.

மேலும் கூட்டமைப்பின் பிளவு தொடர்பாக நீலிக் கண்ணீர் வடிக்கும் சென்னன் போன்றவர்கள் தாம் சார்ந்த கட்சி பிளவுபடாது கட்டுக்கோப்புடன் உள்ளதா என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்று மலையகத்தில் காணப்படும் தொழிற்சங்கங்களும், அரசியல் கட்சிகளும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்றவை என்ற உண்மையை இவர்கள் உணர்ந்து கொண்டால் அதுவே போதுமானது.

> புலி இளைத்துப் போனால் எலி கூடச் சவால் விடும் என்று கூறுவார்கள். இறுதிப் போரின் போது புலிகள் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டு இலங்கைத் தமிழர்களின் வாழ்வு சின்னாபின்னமாக்கப்பட்ட நிலையில் பலரும் வாய்க்கு வந்தவாறு ஆலோசனை வழங்கத் தலைப்பட்டு விட்டனர்.

### அரச தரப்பில் இருந்து உரிய தீர்வு கிடைக்க வேண்டும்

மலையகத்தில் வாழுகின்ற தமிழ் மக்களின் பிரச்சினைகளும் வடக்குக் கிழக்கில் வாழுகின்ற தமிழர்களின் பிரச்சினைகளும் வெவ்வேறானவை என்பதை மலையகத் தலைவர்கள் முதலில் புரிந்து கொள்ளவேண்டும். ஒரு கொடிய போருக்கு முகம் கொடுத்த வடக்குக் கிழக்குப் பகுதி மக்கள் இன்னமும் அதன் தாக்கத்திலிருந்து முழுமையாக விடுபடாத நிலையில் வாழ்கின்றனர். இவர்களின் அழிக்கப்பட்ட வீடுகளுக்குப் பதிலாக நிரந்தர வீடுகள் இன்னமும் முழுமையாக வழங்கப்படவில்லை. பலர் தற்காலிக குடிசைகளிலேயே காலத்தைக் கடத்தி வருகின்றனர். கடந்த நான்கு மாதங் களுக்கு முன்னர் இடம்பெற்ற வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்றது. முதலமைச்சராகப் பதவிப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட கவிவிக்னேஸ்வரன் கூட்ட மைப்பின் நல்லெண்ணச் சமிக்ஞையை வெளிப்படுத்தும் முகமாக ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். இதற்கு வேறு வழிகள் இருந்த போதிலும் அவ[illegible] அவற்றை நாடவில்லை. மேலும் வட[illegible] மாகாண சபைக்கு சிவில் பிரதிநிதியொருவரை ஆளுநராக நியமிக்க வேண்டுமெனவும், மாகாண சபைக்குரிய அதிகாரங்கள் அனைத்தையும் வழங்க வேண்டுமெனவும் இங்குள்ள இராணுவத்தினரை வெளியேற்றுமாறும் வலிகாமம் வடக்கு மக்களின் மீளக்குடியமர்வைத் துரிதப்ப டுத்துமாறும் பல்வேறு முக்கிய கோரிக்கைகள் ஜனாதிபதியின்முன் வைக்கப்பட்டன. ஆனால் இவற்றில் ஒன்று கூட இதுவரை நிறைவேற்றி வைக்கப்படவில்லை.

### தொடரும் ஆளுநரின் ஆட்சி

மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடமாகாண சபை நிர்வாகம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க இராணுவத்தைச் சேர்ந்த ஆளுநர் ஆட்சியைத் தொடருகின்றார்.

ஏற்கெனவே ஏற்பட்டதொரு அசாதாரண சூழ்நிலை ஏற்படக் கூடாதெனக் கூட்டமைப்புத் தலைவர்கள் விரும்புகின்றனர். மக்களும் அதனை இன்னொருமுறை எதிர்கொள்ளத் தயாராக இல்லை. இந்த நிலையில் காணாமற் போனவர்கள் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாமல் நீண்டுகொண்டே செல்கின்றது. திருக்கேதீஸ்வரம் புதைக் குழி விவகாரம் வேறு தற்போது விஸ்வரூபம் எடுத்துள்ளது.

இவற்றுக்கெல்லாம் அரசு தரப்பிலிருந்தே உரிய தீர்வுகள் வழங்கப்படவேண்டும். அது சாத்தியப்படாது விட்டால் சர்வதேசத்தின் தலையீடு என்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இந்த நிலையில் பிரச்சினைகளை உள்ளார்ந்தமாகச் சிந்திக்காது சென்னன் போன்றவர்கள் எழுந்தமானமாக அறிவுரை கூறுவதற்குக் கிளம்பி விடுவதைப் பார்க்கும் போது சிரிப்பும், கவலையும் தான் கலந்து வெளிக் கிளம்புகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதநாட்டியச் சிந்தனைகளும் சுவாமி விபுலானந்தரும்

அ. உமாமகேஸ்வரி

(நேற்றைய தொடர்ச்சி)

"கண்ணினையும் செவியையும் பயிற்றுவித்தார் பொருட்டு மாணவர்களுக்கு ஓவியக் கலையையும், இசைக் கலையையும் ஒரு சிறியதளவிலேனும் அறிவுறுத்த வேண்டும்" என்ற எண்ணத்தையுடையவராய் விளங்கிய அடிகள் நடனம், நாடகம் ஆகிய கலைகளும் மாணவர்களின் நல்லொழுக்க வளர்ச்சிக்கு ஆதாரமாய் இருக்கும் என நம்பினார். இந்தக் கலை வடிவங்களினூடாக சமூகத்துக்கு நற்போதனைகளை வழங்க முடியும் என நம்பினார்.

**பரதக் கலையும் விபுலானந்தரும்**

விபுலானந்த அடிகள் பரத நாட்டியத்தில் - பரதம் என்ற பதத்துக்கு விளக்கமளிக்கையில் பண், ரதம், (பாவம், ரசம்), தாளம் என்னும் மூன்றும் அடங்கிய பிண்டமே பரதம் என்று விளக்குகிறார். அதற்காக
'பண்ணும் பதமேழும் பல ஓசைத் தமிழவையும் உண்ணின்றதோர் சுவையும் உறுதாளத் தொலி பலவும்" என்ற தேவாரப் பாடலை எடுத்துக் காட்டி "உண்ணின்றதோர் சுவை" என்னும் சொற்றொடரை 'ரதம்' என்று கூறுகிறார். இங்கு 'ரதம்' என்பது இரஸம் ஆகும்.
"இசைந்த பாடலிசையுடன் படுத்து.." என்ற இளங்கோவின் வரிகளுக்கு சேரச் செய்த உருக்களை இசை கொள்ளும்படி இரதம் பொருந்தும் படியும், புனர்த்த வல்லனாகிய' என்ற அரும்பத உரையாரினதும்,
'சோழச் செய்த உருக்களை இசை கொள்ளும்படியும் சுவை பொருந்தும் படியும் புணர்க்க வல்லனாகி" என்ற அடியார்க்கு நல்லாரினதும் உரைகளை எடுத்துக் காட்டி ரதம், சுவை என்பது எண்வகை மெய்ப்பாடுகளையே குறிக்கின்றன என்றும் விளக்கி பரதம் என்பது "பண், ரதம், தாளம்' என்பவை சேர்ந்த ஒன்றே என்கிறார். அத்துடன் இந்த எண்வகை மெய்ப்பாடுகளே நவரஸங்களான விதங்கள் பற்றியும் இன்னும் பல பரத நாட்டியத்துக்குரியதான நாட்டிய சாஸ்திரமும் மற்றும் இதர, பரத நூல்கள் கூறும் விடயங்களையும் தமிழ் இலக்கியம் கூறும் விளக்கங்களையும் ஆதாரங்களு டன் விளக்கியுள்ளார்.

**பெண்கள் கவின்கலைகளைப் பயில வேண்டும்**

மதங்கசூளாமணி மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு உறுப்பியல் முதலாம் பகுதியாகவும், எடுத்துக்காட்டியல் இரண்டாம் பகுதியாகவும், ஒழிபியல் மூன்றாம் பகுதியாகவும் மூன்று இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. உறுப்பியல் பகுதியில் நாடகம் தொடர்பான வரைவிலக்கணத்தில் தொடங்கி நாடகத்துக்குத் தேவையான அனைத்து விடயங்களையும் கூறி நாடகம் பற்றிய வரைவிலக்கணத்துடன் தொடங்கியுள்ளார். சாத்துவதி, ஆரபடி, கைசிகி, பாரதி என்கின்ற நால்வகை விருத்திகளையும் அவற்றுக்குரிய சிறப்பு விளக்கங்களையும் தந்துள்ளார். நாடகங்கள், நாட்டிய வகைகள் 10 எனவும் அவை நாடகம், ப்ரகரணம், பாணம், பிரகசனம், இடிமம், வியாயோகம், சமவகாரம், வீத அங்கம், ஈகாமிருகம் என்றும் குறிப்பிடுகிறார். இந்த நாட்டிய வகைகள் பத்து பற்றியும் மேலதிக குறிப்புக்களை பரத முனிவரின் நாட்டிய சாஸ்திரம் மூலமாக அறிந்து கொள்ளலாம்.
மேலும் மதங்கசூளாமணி நிருத்தத்தை தேசி எனவும், நிருத்தியத்தை மார்க்கம் எனவும் குறிப்பிடுகின்றது. ஆயினும் நாட்டிய சாஸ்திரம் மார்க்கம் என்பது செவ்வியல் நடனம் எனவும், தேசி என்பது கிராமிய நடனத்தையும் குறிப்பிடுவதை அவதானிக்கலாம். அத்துடன் வாஸ்யம் என்பது அகமார்க்கம் சார்ந்த மென்னீர்மையான கூத்து எனவும், தாண்டவம் என்பது புறமார்க்கம் சார்ந்த வன்மையான கூத்து எனவும் குறிப்பிட்டுள்ளது. அது மட்டுமன்றி இளங்கோவடிகள் கூறும் அரங்க அமைப்பு முறை பற்றியும் இங்கு எடுத்துக் காட்டியுள்ளார். நாட்டியத்தின் நாயகர்கள், நாயகிகள் பற்றியும் தன்னுடைய மதங்கசூளாமணியில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறாக நாட்டியம் மற்றும் நாடகத்துக்குரிய பல அம்சங்களை விபுலானந்தர் தன்னுடைய மதங்கசூளாமணியில் குறிப்பிட்டுள்ளார்.





"இன்பநூல் எண்ணெண் கலைகளாக விரிவுபட்டு நின்றது. இன்ப வினைவுடையார்க்கு அவ்வின்பத்தினை நல்குதலைத் தமது தொழிலாகக் கொண்ட நாடக மகளிர் அவ்வின்பத் துறையில் பலவற்றையும் கற்று வல்லவராவதற்குரியர்" என்று கலாநிதி சஞ்சிகைக்காக கொடுத்த தனது பரத சாஸ்திரம் என்னும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இக்கூற்றானது பெண்கள் யாவரும் கவின்கலைகளைக் கற்க வேண்டும் என்று வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. 1942 ஆம் ஆண்டிலே மதுரைத் தமிழ்ச் சங்கத்திலே உரையாற்றிய பொழுது "வடமொழிப் பரதமும், சங்கீத ரத்னாகரமும் சிறந்த முறையில் மொழி பெயர்க்கப்படுமாயின் அந்த மொழி பெயர்ப்புக்கள் தமிழ் இசை நடன மறுமலர்ச்சிக்கு உதவும் என்பது என் கருத்து" என்கிறார். அடிகளின் இத்தகு எண்ணச் சிதறல்களின் விளைவாகவே மதங்க சூளாமணி உருப்பெற்றுள்ளது.

**மாணவர்களுடைய ஆளுமை விருத்தியில் கலைகள்**

இசை, நடனம் ஆகிய கலைகளின் வளர்ச்சி நிலைக்காக எழுத்துருவில் தன்னாலான பணிகளைச் செய்வதிலும், அவை தொடர்பான ஆலோசனைகள் கருத்துக்கள் கூறி வழிநடத்துவதிலும் முன்னோடியாகச் செயற்பட்டார். மாணவர்களுடைய ஆளுமை விருத்தியில் கலைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து இலங்கையின் அரச பாடசாலைகளில் பயன்படுத்தத்தக்க விதத்தில் இசைக் கலைப் பாடத்திட்டத்தை அமைத்துக் கொடுத்தார். இவ்விரு கலைகளையும் நிறுவன ரீதியாக அமைக்க வேண்டும் என்னும் நோக்கத்தில் துறை சார்ந்தவர்களை ஊக்குவித்தார். இக்காலத்தில் வட நாட்டிலும், தென்னாட்டிலும் பரத நாட்டியத்தை விருத்தி செய்யும் முயற்சிகள் நடந்து கொண்டிருப்பதை உணர்ந்து இலங்கையிலும் இக்கலைகளை நிறுவனமயப்படுத்த வேண்டும் என்று பேரவாக் கொண்டிருந்தார். அதற்காக துறை சார்ந்தவர்களை ஊக்கப்படுத்தினார். இதன் பயனாக "விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம்" 1982 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி அப்போதைய அமைச்சராக இருந்த தி.செ.ராஜதுரை அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இன்று வாய்ப்பாட்டு, வீணை, வயலின், மிருதங்கம், பரத நாட்டியம், சிற்பம், ஓவியம், படப்பிடிப்பு, சினிமா முதலிய கலைத் துறைக் கூறுகளைக் கற்பிக்கும் நிறுவனமாக வளர்ச்சி கண்டுள்ளது. இவ்வாறாக விபுலானந்த அடிகளது தீர்க்க தரிசனமான சிந்தனைகளும் பன்முகப்பட்ட ஆராய்ச்சித் தேடல்களையும் இன்று நாம் ஆராய்கின்ற போது அவரைப் பற்றிய விடயங்கள் தெரிந்தவை சில வகையே. தெரியாதவை பலவாக இருக்கும் என்பது முடிவாகிறது. யாழ் நூலைத் தவிர்த்து அடிகளாரது கலைத்துவ சிந்தனை பரந்து பட்டது.
குறிப்பாக எகிப்திய கலை வரலாறு, கிரேக்க கலை வரலாறு, ரோமானிய கலை வரலாறு என்று இன்னும் பல பிற நாகரிக கலை வரலாற்றுக் கட்டுரைகளை எடுத்துக் காட்டலாம். எனவே ஆன்மிகம், இசை, கல்வியியல் துறை, மேலைத் தேச கலை வரலாறுகள், இயல்துறை-இலக்கியம் என்பனவற்றில் தனது சிந்தனைகளைச் செலுத்தியது போலவே அடிகளார் பரதநாட்டியத்தின் பாலும் தன் சிந்தனைகளைச் செலுத்தியுள்ளமையைக் காணலாம். பரத நாட்டியம் தொடர்பான அடிகளாரது சிந்தனை பரந்ததும், தேடுதலுக்கு உரியதுமாகும். இதற்கு இந்தச் சிறு கட்டுரைப் பகுதி போதியதன்று.

# இந்து மதத்தின் புனிதத் தன்மையைக் காப்பாற்ற மாபெரும் ஊர்திப் பேரணி

சோபனா

யாழ்ப்பாணத்தின் பாரம்பரியங்களில் ஒன்றாக ஆலய வழிபாடு திகழ்கின்றது. இந்த ஆலய வழிபாடுகளுக்கு பங்கம் விளைவிக்கும் விதமாக கலாசாரத்தைச் சீர்குலைக்கும் செயற்பாடுகளாக ஆலயங்கள் இடித்தழிப்பு, ஆலயங்களில் திருட்டுச்சம்பவங்கள் என்பன இடம்பெற்று வருவது பெரும் வேதனைக்குரிய விடயமே .
இத்தகைய செயல்கள் இந்து சமய விழுமியங்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதுடன் மத ரீதியான நம்பிக்கையின்மையை மக்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றன. இது தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்தில் சர்வதேச இந்துக்குருமார்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மாபெரும் வாகனப் பேரணி ஊர்வலம் யாழ் நகரில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ். நகர் வண்ணை சிவன் ஆலயத்தில் இருந்து கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயம் வரை வாகனப் பேரணியாக விழிப்புணர்வுக் கருத்துக்களைத் தாங்கிச் செல்லவுள்ளனர்.
காலத்தின் வேகத்துக் ஏற்ப மக்களும் தமது வாழ்க்கை நடைமுறைகளையும் விரைவுபடுத்தியுள்ளார்கள். அதனால் சமூகத்தில் பல மாற்றங்களை அவதானிக்க முடிந்துள்ளது. போர்ப் பாதிப்புக்களால் மீண்டெழமுடியாத மக்கள் கால வேகத்துக்கு ஏற்ப தம்மை மாற்றியமைத்துள்ளதுடன் இழந்தவற்றை மீளப் பெறும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதால் கலாசாரங்களையும் மறந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.
இத்தகைய மாற்றங்களுக்குப் போர் பாதிப்புக்களைக் காரணமாகக் குறிப்பிட்டாலும் எமக்கான கலாசாரங்கள் அழிந்து போவதை நாம் பார்த்தும் பாராமலும் இருந்துவிட முடியாது.
குடா நாட்டின் பண்பாடும் ஒழுக்கமும் இந்து சமயத்தின் தொன்மையும் பழைமையான ஒன்று. இதனை மாற்றியமைக்கும் விதத்தில் திட்டமிட்டு நடத்தப்படுகின்ற கலாசாரச் சீரழிவுகளும் மக்கள் மத்தியில் மத ரீதியான நம்பிக்கையின்மையை ஏற்படுத்தியுள்ளது.
குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஆலய வழிபாடுகள் சமய அனுஷ்டானங்கள் மூத்தோரை மதித்தல் போன்ற நற்பண்புகள் அருகி வருவதை எம்மால் அவதானிக்க முடிந்துள்ளது. இவற்றுக்கு முக்கிய காரணங்களாக மத ரீதியாக ஏற்படுத்தப்படுகின்ற காரியங்கள் அமைந்துள்ளன.
அழிந்து போகும் எமது மதப் பண்பாடுகளை பாதுகாக்க வேண் டிய பொறுப்பு எம்மிடம் உள்ளதை நாம் மறந்து விட முடியாது.
குறிப்பாக இந்து ஆலயங்கள் பொதுச் சொத்துக்களாக இருந்து வந்த நிலையில் அவற்றை தனி உரிமையாகக் கொண்டு தனி நபர்கள் உரிமை கோரி நீதி மன்றங்களை நாடிச் செல்வதுடன் ஆலயத்தின் நிதிக் கையாள்கை தொடர்பில் நீதிமன்றங்களில் பேசப்படுகின்றன. இவையெல்லாம் இந்து மதத்தின் புனிதத் தன்மையைக் கெடுக்கும் செயல்களாகவே அமைந்துள்ளன.
இந்த நிலையில் இந்து ஆலயங்களில் புனிதத்தன்மை பேணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் சமூகத்தில் பரவலாக கொலை, கொள்ளை, வன்புணர்வு சிறுவர்துஸ்பிரயோகம் பாலியல் வன்முறைகள் போன்ற கலாசார மீறல்களைக் கண்டித்தும் இந்த மாபெரும் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
கடந்த காலங்களில் குறிப்பாக ஆலயங்களில் அதிகரித்துக் காணப்படும் ஆலய தெய்வ விக்கிரகங்கள் முதல் தெய்வங்களைச் சுமக்கும் வாகனங்கள், ஆலயப் பொருள்கள் என அனைத்தும் களவாடப்படுகின்றன.
இந்து சமயத்தின் அடையாளச் சின்னங்களாக கருதப்படுகின்ற ஆலயங்கள் மீது ஏற்படுத்தப்படுகின்ற இத்தகை செயல்களைத் தடுத்து நிறுத்த நாம் முன்வர வேண்டும்.
இதற்கு முன் மாதிரியாக இந்துக் குருமார்கள் ஒன்றியம் முன்னெடுக்கும் இந்தப் பேரணியில் குறிப்பாக குருமார்கள் உட்பட இந்து மத மக்களும் ஒன்றிணைந்து பேரணிக்கு வலுச் சேர்ப்போம்.
வெளி மாட்டங்களில் இருந்து வருகை தரவுள்ள வாகனப் பேரணிகள் யாழ் வண்ணை சிவன் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக காங்கேசன்துறை வீதியுடாக நகுலேஸ்வரத்தைச் சென்றடையவுள்ளன.
மதச்சம்பிரதாயங்கள் ஊட ாக நடத்தப்படும் இந்தப் பேரணி ஊடாக இனிவரும் காலங்களிலாவது இந்து மதத்தின் புனிதத் தன்மை பாதுகாக்கப்படும் என்பது நம்பிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். அயல் வீட்டாரின் ஆதரவு கிட்டும்.



**இடபம்**: தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். முன் கோபம் விலகும். வியாபாரத்தில் பழைய மிகுதிகளை விரைந்து பெறுவீர்கள். அரச காரியங்களில் அனுகூலம் உண்டு. அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.



**மிதுனம்**: செயலில் வேகத்தைக் காட்டுவீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் கூடும்.



**கடகம்**: பணப்பற்றாக்குறை நீங்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்கள் உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவார்கள்.



**சிங்கம்**: தன்னம்பிக்கை துளிர்விடும். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சியுண்டு. உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும்.



**கன்னி**: பழைய கசப்பான சம்பவங்களையெல்லாம் அவ்வப்போது நினைவுகூர்ந்து பேசாதீர்கள். உங்கள் திறமையை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.



**துலாம்**: வெளிவட்டாரத்தில் நிதானம் அவசியம். யாரையும் யாருக்கும் பரிந்துரை செய்ய வேண்டாம். வியாபாரத்தில் வேலையாள்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளுடன் மோதல்கள் வந்து நீங்கும்.



**விருச்சிகம்**: திறம்படச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். அரசு விடயங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். முன்கோபம், வீண் பதற்றம் விலகும்.



**தனுசு**: நம்பிக்கைக்குரியவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மேலதிகாரி, சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.



**மகரம்**: புதிய முயற்சிகள் வெற்றியடையும். சொத்துச் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை குறைப்பீர்கள். வெளியிடத் தொடர்பு அதிகரிக்கும். பணவரவு உண்டு.



**கும்பம்**: சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். நீங்கள் ஒன்று பேசப்போய் மற்றவர்கள் அதை வேறுவிதமாகப் புரிந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது.



**மீனம்**: எதார்த்தமாக பேசி அனைவரையும் வியக்க வைப்பதுடன் தடைப்பட்ட காரியங்களையும் விரைந்து முடிப்பீர்கள். நண்பர்களின் வருகையுண்டு. வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.

## நாளை

**தை-10 வியாழக்கிழமை | 23.01.2014**

திதி: ஸப்தமி மா.06.37 வரை
நட்சத்திரம்: சித்திரை
பி.இ.12.39 வரை

சுபநேரம்: 08.06-09.36 வரை
இராகுகாலம்:02.06-03.36 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...




## கடவுள் தத்துவம்

இறைவன் என்பவன் யார்? 'ஜன் மாத்யஸ்ய யத: எவனிடம் உலகம் யாவையும் ஆக்கலும், நிலை பெறுத்தலும், ஒடுக்குதலும் நடைபெறுகின்றனவோ அவனே இறைவன். "என்றும் உள்ளவனாய், எப்போதும் தூயவனாய், சுதந்திரம் உடையவனாய், யாதினும் வல்லவனாய், எல்லாம் அறிந்தவனாய், பெருங் கருணையுடையவனாய், ஆசானுக்கு ஆசானாய் இருப்பவன். இவை அனைத்துக்கும் மேலாக 'ஸ ஈஸ்வர: அநிர்வசனீயப் பிரேம ஸ்வரூப:' சொல்லினுக்கு அடங்காத, பகரவொண்ணாத அன்பு வடிவினன்.' இந்த விளக்கங்கள் உண்மையில் உருவக் கடவுளுக்கான விளக்கங்கள்தாம். அப்படியானால் இருப்பது இரண்டு கடவுளரா? தத்துவ ஞானி கூறுகிற, 'இதுவன்று, இதுவன்று' என்று நீக்கிப் பின் நீங்கொணாத சச்சிதானந்த மயமான கடவுள் ஒன்று: பக்தர்களின் அன்புருவான கடவுள் இன்னொன்று. இரண்டு கடவுளர்களா என்ற கேள்விக்கு இல்லை என்பதுதான் பதில். சச்சிதானந்த மூர்த்தி எதுவோ அதுவேதான் அன்பு வடிவான கடவுளும், இரண்டும் ஒன்றுதான். ஒன்று அருவமானது. மற்றொன்று உருவமானது. பக்தன் வழிபடும் தெய்வத்துக்கும் ஞானியின் பிரம்மத்துக்கும் வேறுபாடு இல்லை என்பதை நாம் உணர்தல் வேண்டும். எல்லாமே பிரம்மம்தான்(பிரம்மத்தைத் தவிர இரண்டாவதாக உள்ளது என்று கூறமுடியாதபடி) இரண்டற்று இருப்பது. ஒருமையாகவும், தனிமையாகவும் (தன்னில் தானாக) உள்ள பிரம்மம் மனத்தால் உணர முடியாதபடி மிகமிக நுண்ணியதாக இருப்பதால் நம்மால் அன்பு செலுத்தவோ வழிபடவோ இயலாதபடி விளங்குகிறது. எனவே பக்தன் குணங்களோடு கூடிய பிரம்மத்தை அதாவது உலகங்கள் அனைத்தையும் ஆள்பவனாகிய உன்னத நாயகனைத் தன் பக்திக்குரிய பொருளாக ஏற்கிறான்.

இதை ஓர் உவமை வாயிலாக விளக்கலாம். களிமண்ணிலிருந்தோ அல்லது ஏதேனும் ஒரு மூலப் பொருளிலிருந்தோ தான் எண்ணிலடங்காத விதவிதமான பொருள்கள் செய்யப்படுகின்றன. களிமண்ணாக நோக்கப்படும்போது அந்தப் பொருள்கள் அனைத்தும் ஒன்றுதான். எல்லாம் களிமண் தான். ஆனால் உருவத்தில், வெளிப்பட்ட தோற்றத்தில் அவை வேறாக உள்ளன. பிரம்மத்தினுடைய நிலையும் இதைப் போன்றதுதான். பொருள்கள் ஒவ்வொன்றும் வனையப்படுவதற்கு முன் மண்ணுக்குள் அடங்கிக் கிடந்தன. அந்த நிலையில் அவை ஒரே தன்மையவாய் இருந்தன. ஆனால் வடிவம் பெற்ற பின்னரோ, வடிவம் நிலைத்து நிற்கும் வரை, அவை தனித் தன்மை கொண்டவை. வெவ்வேறானவை. களிமண்ணால் செய்யப்பட்ட சுண்டெலி ஒருநாளும் களிமண் யானையாக இருக்க முடியாது. காரணம், களிமண்ணோடு களிமண்ணாய் ஒன்றாய் இருந்த அவை, உருவம் பெற்ற அளவில், உருவம் காரணமாக வேறாகி விட்டன. அது போன்றே, பிரம்மத்தின் மிகச் சிறந்த தோற்றம், வெளிப்பாடு இறைவன் எனலாம். இன்னும் தெளிவாகச் சொல்வதானால் இறைவன் மனித மனத்தால் உணரப்படுவதாகிய மிக மேலானதொரு (பரம்பொருளின்) வெளிப்பாடு ஆகும். படைப்பு அநாதி காலந்தொட்டு என்றும் இருந்து வருவது. இறைவனும் அப்படியே.

# மனிதர்களுக்கு வழிகாட்டும் சிம்பன்ஸிகள்



அடர்ந்த காட்டுக்குள் வழி தவறிச் சென்று விட்டால், சிம்பன்ஸிகள் வழியைக் கண்டு பிடித்துக் கொடுக்கும் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

சிம்பன்ஸிகளின் தகவல் தொடர்பு பரிமாற்றம் குறித்து அமெரிக்க மற்றும் பிரிட்டன் விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர்.

ஆய்வின் ஒரு பகுதியாக, சிம்பன்ஸிகள் வழிதவறிய மனிதர்களுக்கு வழியைக் காட்டிக் கொடுக்குமா என்பது குறித்து ஆய்வுநடத்தப்பட்டது. அப்போது, சிம்பன்ஸிகள் சைகை மூலம் வழியைக் காட்டிக் கொடுக்கின்றன என்பது தெரியவந்தது.

இதனை பரிசோதித்துப் பார்க்க பரந்த வனப்பரப்பில் ஓரிடத்தில் உணவு மறைத்து வைக்கப்பட்டது.

காட்டுக்குள் விடப்பட்ட மனிதர் தானாக அந்த இடத்தைக் கண்டுபிடிக்க முயன்றும் முடியவில்லை. ஆனால், சிம்பன்ஸிகள்சைகை மூலம் மனிதர்களுக்குஉணவுஇருந்தஇடத்தை கண்டுபிடித்துக் கொடுத்தன.

இதுகுறித்துசெஸ்டர்பல்கலைக் கழகப் பேராசிரியர் அண்ணா ராபர்ட்ஸ் கூறுகையில், இந்த ஆய்வின் முடிவுகள் மொழிகள் எவ்வாறு உருப்பெற்றன என்பதற்கான ஆய்வில் மிகவும் உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார். மேலும் ஸ்டெர்லிங் பல்கலைக்கழக பேராசிரியர் சாரா ஜான் விக், தற்போதைய ஆய்வின் மூலம் மிகவும் சிக்கலான சூழலில் சிம்பன்ஸிகள் தங்களது அறிவுத் திறனை வெளிப்படுத்த முடியும் என்பது தெட்டத் தெளிவாகியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | | | | 8 | 6 | |
| 8 | 5 | 6 | 3 | 7 | 1 | | 4 | |
| | 2 | | | | | | | |
| 1 | | | | | 5 | 4 | | 8 |
| | 8 | 5 | | 4 | | 9 | 1 | |
| 4 | | 9 | 7 | | | | | 3 |
| | | | | | | | 5 | |
| | 1 | | 9 | 5 | 7 | 6 | 8 | 4 |
| | 7 | 8 | | | | 3 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 6 | 2 | 3 | 7 | 9 | 5 | 4 | 8 |
| 4 | 5 | 7 | 1 | 6 | 8 | 2 | 9 | 3 |
| 3 | 8 | 9 | 4 | 2 | 5 | 7 | 1 | 6 |
| 9 | 3 | 5 | 6 | 4 | 1 | 8 | 2 | 7 |
| 7 | 2 | 1 | 8 | 5 | 3 | 4 | 6 | 9 |
| 6 | 4 | 8 | 7 | 9 | 2 | 3 | 5 | 1 |
| 5 | 7 | 6 | 9 | 3 | 4 | 1 | 8 | 2 |
| 8 | 9 | 4 | 2 | 1 | 7 | 6 | 3 | 5 |
| 2 | 1 | 3 | 5 | 8 | 6 | 9 | 7 | 4 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அணுகுண்டுக்கும் அசையாத மரம்!



ஜப்பானில் உள்ள Hlbaku Jumoku எனப்படும் மரத்துக்கு உலகிலுள்ள வேறெந்த மரத்துக்கும் இல்லாத சிறப்பு உள்ளது. 1945, ஆகஸ்ட் 6-ஆம் திகதியன்று ஹிரோஷிமாவில் அணுகுண்டு போடப்பட்டபோது நகரமே அழிந்ததுடன், பல வருடங்களுக்குப் புல் பூண்டுகளே முளைக்காமல் போனது. ஆனால் இந்த மரமானது சுமார் 75 ஆண்டுகளுக்கு மேலாக, அதாவது அணுகுண்டு போடப்பட நாளில் இருந்து இன்றுவரை உறுதியாக நிற்கிறது. இன்று ஹிரோஷிமா சோலையாக பூத்துக் குலுங்கினாலும் இவையெல்லாம் கடந்த 50 ஆண்டுகாலப் பகுதியில் உருவானவை. இதை A bombed tree என்று காரணப்பெயர் கொண்டும் சிலர் அழைப்பர். மிகக் குறைந்த அளவே காணப்படும் இந்த வகை மரங்களை ஜப்பான் கவனமாகப் பாதுகாத்து வருவதும் குறிப்பிடத்தக்கது. -

# நிலாவில் பறக்கும் தட்டு:

## வேற்றுக் கிரகவாசிகளுடையதா?



நிலாவின் மேற்பரப்பை கூகுள் நிலா படமெடுத்து விவரிக்கிறது. இத்தகைய படமொன்றில் ஒரு குறிப்பிட்ட மர்மப் பொருள் நிலவின் மேற்பரப்பில் இருக்கிறது. இது விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. அந்த மர்மப் பொருள் வேற்றுக் கிரகம் சார்ந்ததாக இருக்குமெனவும் சந்தேகிக்கப்படுகிறது. பூமியை கூகுள் எர்த் படமெடுப்பது போல் நிலவை கூகுள் நிலா படமெடுத்து வந்தது. அப்போது ஒரு குறிப்பிட்ட மர்மபொருள் நிலவின் மேற்பரப்பில் இருப்பது படங்களில் விழுந்தது. முக்கோண வடிவில் இருந்த அந்த மர்மபொருளின் முனைகளில், ஒளிரும் தன்மை கொண்ட 7 சிறு புள்ளிகள் காணப்பட்டமை குறிப்பிடத் தக்கது. அந்தாட்டிக்கா பகுதியில் கூட முன்னதாக ஒரு சமயத்தில் இது போன்ற மர்மக் கட்டமைப்பு காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலவை ஆராயச் சென்ற விண்கலமாகக் கூட இது இருக்க வாய்ப்புள்ளதாகவும் அல்லது வேற்று கிரகம் சார்ந்த பொருளாக இது இருக்கக்கூடும் என்றும் கூறப்படுகிறது.

# இரண்டு தலைகளுடன் கூடிய மீன் பார்த்ததுண்டா..?

இரு தலைகளுடன் பிறந்த மனிதர்கள் பலரைப் பார்த்திருப்பீர்கள்.. விலங்குகளைப் பார்த்திருப்பீர்கள்.. ஆனால் இரண்டு தலைகளுடன் பிறந்த மீனை யாரும் அவ்வளவு எளிதாக பார்த்திருக்க முடியாதல்லவா.. ஆம் இரு தலைகளுடன் கண்டுபிடிக்கப்பட்ட மீன் பற்றிய தகவலே இது.



இவ்வரிய சம்பவம் கடந்த 2009 ஆம் ஆண்டில் இடம்பெற்றுள்ளது. இந்த மீனை ஆராய்ச்சி செய்த விஞ்ஞானிகள் இது நீரில் இரசாயனத் தாக்கம் ஏற்பட்டதால் நடந்துள்ளது என குறிப்பிட்டார்கள். குறித்த இரு தலை மீன் இரண்டு நாள்களின் பின்னர் இறந்தமை குறிப்பிடத்தக்கது....


# குழந்தையின் மூளையைப் பலப்படுத்தும் இசைப் பயிற்சி



குழந்தைகளுக்கு இசைப் பயிற்சி அளிப்பதால் மூளை பலம் பெறும் என்று சமீபத்தில் நிகழ்த்திய ஆய்வில் நிரூபிக்கப்பட்டுள்ளது.
குழந்தைகளுக்கு இளம் பருத்திலேயே பாடத்தைத் தவிர, இசை தனிப் பயிற்சியாக அளிக்க வேண்டும். அது, நாளடைவில் குழந்தைகளின் மூளை பல மடங்காகப் பலம் பெற உதவுகிறது. மேலும் குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டுவதற்கும், மூளைக்குச் செல்லும் நரம்புகள் புத்துணர்ச்சி அடைவதற்கும் உதவியாக இருக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.
அதிலும், எழு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு பயிற்சி அளிப்பது, அவர்களின் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத நல்ல அனுபவத்தை ஏற்படுத்துவ தோடு, கற்பனைத் திறனை விரிவடையச் செய்கிறது என்று ஆய்வு கூறுகிறது. குறைந்தபட்சம் ஒரு வருடமாவது இசைப் பயிற்சி அளிப்பது மூளை யைப் பலப்படுத்தும், நினைவாற்றலை அதிகரிக்கும் என்று ஆய்வு தெரிவித்துள்ளது.

**குழந்தைகளின் இளம் பருத்திலேயே பாடத்தைத் தவிர, இசை தனிப் பயிற்சியாக அளிக்க வேண்டும். அது, நாளடையில் குழந்தைகளின் மூளை பல மடங்காகப் பலம் பெற உதவுகிறது. மேலும் குழந்தைகளின் ஆர்வத்தை தூண்டுவதற்கும், மூளைக்குச் செல்லும் நரம்புகள் புத்துணர்ச்சி அடைவதற்கும் உதவியாக இருக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

# செவ்வாய்க்கு மனிதர்களை ஏற்றிச் செல்லும் புதிய விண்கலம்: வடிவமைத்தது நாசா



செவ்வாய்க் கிரகத்துக்கு மனிதர்களை ஏற்றிச் செல்லும் வகையில் அதிக எடையைத் தாங்கிச் செல்லும் புதிய விண்கலம் ஒன்றை நாசா வடிவமைத்துள்ளது. இந்த விண்கலம் 384 அடி நீளம் கொண்டதாகவும், 6.5 மில்லியன் இறாத்தல் எடை கொண்டதாகவும் அமைக்கப் பட்டுள்ளது. இது விண்வெளிக்கு 130 தொன் எடையுள்ள பொருள்களைத் தாங்கிச்செல்லும் என நம்பப் படுகிறது.
சந்திரனுக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்தைத் தொடர்ந்து செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பும் வேலைகளைத் தொடங்கியுள்ளது நாசா. மனிதர்களைச் சுமந்து செல்லும் வகையிலும் அதிக எடை தாங்கும் வகையிலும் இந்தப் புதிய விண்கலம் தயார் செய்யப் பட்டுள்ளது. இந்தப் புதிய விண்கலத்திற்கான சோதனை ஓட்டம் வரும் 2017 ஆம் ஆண்டில் நடைபெற உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6.5 மில்லியன் பவுண்டு எடை கொண்டதாகவும் அமைக்கப் பட்டுள்ளது. இது விண்வெளிக்கு 130 தொன் எடையுள்ள பொருள்களைத் தாங்கிச் செல்லும் என நம்பப் படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு பிரதேச சபை

# பொதுஅறிவித்தல் - 2014

## 01. படவரைஞராகப் பதிவுசெய்தல் - 2014

2014 ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவுசெய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்து கொள்ளவும், புதுப்பித்துக் கொள்ளவும், எமது தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

## 02. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2014

இப்பிரதேசஎல்லைக்குள் வியாபாரம் செய்வோர், பொருள்களை விநியோகிப்போர் 2014ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கானவிண்ணப்பப்பத்திரத்தைத் தத்தமது பிரிவிற்குட்பட்ட உப அலுவலகங்களில் பெற்று அதனைபூரணப்படுத்திபுதுக்குடியிருப்பு/ஒட்டுசுட்டான்/ஒலுமடு உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறும் உரியகட்டணங்களை 31.03.2014ஆம் திகதிக்குள் செலுத்திஉரிமத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

## 03. வீடமைப்பு நகரசீர்திருத்தக் கட்டளைச் சட்டம் பிரிவு 268இன் பிரகாரமான அறிவித்தல்

3.1 புதுக்குடியிருப்புபிரதேசசபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரசதனியார் கட்டடங்கள், மதில், மலசலகூடங்கள், கிணறுகள், குழாய்க்கிணறுகள் என்பவற்றை அமைத்தல் புதுப்பித்தல் வேலைகளைச் செய்தல் போன்றன சட்டத்தின்படி தண்டனைக்குரியகுற்ற மென்பதை அறியத் தருகின்றேன்.

3.2 ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடம் கட்டிமுடிக்கப்படாத பட்சத்தில் அனுமதியைப் புதுப்பித்தல் வேண்டும்.

3.3 சபையின் அனுமதிபெற்றுக் கட்டடம் கட்டிமுடித்தவர்கள் கட்டிமுடிக்கப் பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத் தந்து உரிய அமைவுச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

## 04. சூழல் பாதுகாப்பு உரிமம்(EPL) – 2014

மத்திய சூழல் அதிகாரசபைத் தலைவர் 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்டதத்துவங்களின் பயனைக் கொண்டு எனக்கு வழங்கப்பட்ட குறிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் நிர்வாகப் பாதுகாப்பு பிரதேசத்தில் 1533/16 ஆம் இலக்க 2008.01.25 ஆம் திகதியமற்றும் 1534/18 இலக்க 2008.02.01 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானிப் பத்திரிகைகளில் விதந்துரைக்கப் பட்டதொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கு இணங்க வியாபாரத்தை/தொழிலை நடத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கவேண்டிய பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டள்ளது. ஆகவே சம்மந்தப்பட்டவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் தலைமைப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற உரிய நடவடிக்கை எடுக்கவும் இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2014 ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட தொழில்களை நடத்த அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதனையும் இத்தால் அறியத் தருகின்றேன்.

## 05. விளம்பரங்களைஅமைத்தல்/காட்சிப்படுத்தல்

இப்பிரதேச சபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொதுவீதிகளின் இருமருங்கிலும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்பட்டு/காட்சிபடுத்தப்படும் விளம்பரங்களை 28.02.2014 ஆம் திகதிக்குமுன் உரியகட்டணத்தைச் செலுத்திசபையின் அனுமதியைப் பெற்று கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் தமதுவர்த்தகநிலையகளில் விளம்பரங்கள் இல்லாதபெயர்ப்பலகைஒன்றுமட்டும் காட்சிப்படுத்த முடியும். விளம்பரங்களுடானபெயர்ப்பலகைமற்றும் மேலதிகமாகஉள்ளபெயர்ப் பலகைகளுக்குப் பிரதேச சபையின் அனுமதி பெறப்படல்வேண்டும். அவ்வாறு அனுமதி பெறப்படாத பெயர்ப் பலகைகள் பிரதேசசபையால் அகற்றப்படும்.

## 06. பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கு அண்மித்த பகுதியில் வைத்து கடலுணவுகள், மரக்கறிகள், இறைச்சி, உயிர்க்கோழிகள் விற்பனையைத் தடைசெய்தல்

புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் பொதுச்சந்தைகள் இறைச்சிக்கடைகள் அமைந்துள்ள பகுதிகளில் ஒரு கிலோ மீற்றர் வரையான சுற்றாடலில் மரக்கறிகள் கடலுணவுகள் இறைச்சி வகைகள் என்பன வர்த்தக நிலையங்களிலோ வீதியோரங்களிலோ விற்பனை செய்தல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது சபையால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

## 07. பொது இடங்களில் கழிவுகள் போடுதல்

புதுக்குடியிருப்பு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப் பொருள்களை அனுமதியின்றி கொண்டுசெல்லல், கொட்டுதல் ஆகியன பொது சுகாதாரத்தைக் கருத்திற் கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது. தவறின் பிரதேசசபை கட்டளைச்சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

## 08. பொது இடங்களிலும் வர்த்தகநிலையங்கள் முன்பாகவும்,வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுப்பொருள்களைப் போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் கொள்கலனில் கழிவுப்பொருள்களைச் சேகரித்து அதனை அகற்றவதற்கு எமது சபையின் தலைமை அலுவலகத்தில் உரியகட்டணத்தினை செலுத்தி சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

## 09. பொதுசுகாதாரம் பேணுதல்

சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொதுசுகாதாரத்திற்கு இடையூறாகஉள்ளகாணி உரிமையாளர்கள் பற்றைகளைத் துப்புரவு செய்து சுகாதாரத்தினைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். தவறுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

## 10. கட்டாகாலி கால்நடைகளைக் கட்டிவைத்தல்.

சபை எல்லைக்குள் பொதுபோக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில் வீதிகளில் அலைந்து திரியும் காட்டாகாலி கால்நடைகளை உரிமையாளர்கள் சரியானமுறையில் பராமரித்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் பிரதேசசபையால் பிடிக்கப்பட்டுபகிரங்க ஏலத்தில் விடப்படுவதுடன் உரிமையாளருக்கு எதிராகச் சட்டநடவடிக்கையும் எடுக்கப்படும்.

**கு. மிதிலைநாதன் செயலாளர்,**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை.**

(C/11516)(2.6)


# அமெ. நிலையம் புதிய இடத்தில்

யாழ்ப்பாணம், ஜன.22

யாழ்ப்பாணத்தில் உள்ள அமெரிக்க நிலையம் புதிய இடத்துக்கு இடம் மாற்றப்பட்டுச் செயற்பட்டு வருவதாக அதன் இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

தற்போது 23, அத்தியடி புதிய வீதி, நல்லூர் என்ற புதிய முகவரியில் இந்த நிலையம் இயங்கி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிலையம் இலவச இணையத்தள வசதிகளை வழங்கி வருவதோடு ஆங்கிலத்தைக் கறபதற்கான உபகரணங்களையும் வழங்குகின்றது. மேலும் ஒழுங்கான அடிப்படையில் திரைப்படக் காட்சிகளைத் திரையிடுவதுடன் அமெரிக்க நாட்டின் கல்வி தொடர்பான தகவல்களையும் வழங்கி வருகின்றது.

அத்துடன் மாணவர்கள், ஆசிரியர்கள், தொழில் புரிவோர், கல்வியாளர்கள், பொதுமக்கள் எனப் பலருக்கும் தேவையான புத்தகங்கள், சஞ்சிகைகள், திரைப்படங்கள், நூலக வசதி போன்ற வளங்களும் இங்கு உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த நிலையம் செவ்வாய்- வியாழன், சனி ஆகிய தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையும், ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரையும் திறந்திருக்கும். வர்த்தக விடுமுறை நாள்களில் நிலையம் மூடப்பட்டிருக்கும்.

# எழுது மட்டுவாழ், மிருசுவில் சந்தைகளில் கோழி இறைச்சி கடைகள்

சாவகச்சேரி பிரதேச சபையின் எழுதுமட்டுவாழ், மிருசுவில் ஆகிய சந்தைகளில் கோழி இறைச்சிக் கடைகள் திறக்கப்படவுள்ளன.

எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் கோழி இறைச்சிக் கடைகள் இயங்கவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

மிருசுவில், கரம்பகம், ஒட்டுவெளி, எழுதுமட்டுவாழ் தெற்கு, கிளாலி, முகமாலை போன்ற இடங்களைச் சேர்ந்த மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து இரு இடங்களிலும் இறைச்சிக் கடைகள் அமைக்கப்பட்டு கேள்வி கோரல் மூலம் கடைகள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ந-9)

# பொதுக் கூட்டம்

யாழ். மாநகர சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான முதலாவது பொதுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டம் முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெறும். (ந)

# பாம்பு தீண்டி இருவர் வைத்தியசாலையில்

தென்மராட்சி, ஜன.22

பாம்பு தீண்டிய இருவர் திங்கட்கிழமை இரவு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நுணாவில் மேற்கைச் சேர்ந்த பரமசாமி இராசமணி (வயது-68), மிருசுவில் வடக்கைச் சேர்ந்த பரமநாதன் சிவதாஸ் (வயது-28) ஆகியோரே பாம்புக்கடிக்கு இலக்கானவர்களாவர். (ந-9)


பாராட்டி வாழ்த்துகின்றோம்




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 10.01.2014 இல் நடைபெற்ற 29 ஆவது பட்டமளிப்பு விழாவில் BSc in ICT (Hons) பட்டம்பெற்ற செல்வி றொஷாணி ஸ்ரீபத்மநாதன் அவர்கள் கல்வித்துறையிலும் தொழிற்துறையிலும் மேன்மேலும் சிறப்புக்கள் பெற்று உயர்ந்திட வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
தங்கராசா பெரியப்பா குடும்பம்
உரும்பிராய் கிழக்கு.

அகம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

Congratulations

எமது கல்லூரியின் இசை ஆசிரியை திருமதி **சக்திதேவி சிவகுமார்** அவர்கள் நல்லூர் பிரதேச செயலகத்தால் 09.01.2014 அன்று *கலைஞானச்சுடர்* என்னும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமையை நாமும் அகம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

சற்குணநாதன் - கிருபாராணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் செல்வன் **சஞ்ஜீவன்** (லண்டன்), (உசன், மிருசுவில்) இன்று 22.01.2014தனது 23ஆவது அகவையில் கால்பதிக்கும்வேளையில் சகல செல்வங்களும்பெற்று சீரும் சிறப்புடனும் நீடுழி வாழ அன்புடன் வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, தம்பி - சாயிசன், உறவினர், நண்பர்கள்.
உசன், மிருசுவில். (33086) (45.6)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

# Vacancies

University of Jaffna will entertain applications up to **5th February 2014** from suitably qualified persons for the under mentioned posts.

**Faculty of Engineering**

Temporary Instructor in Civil Engineering / Computer Engineering / Electrical and Electronic Engineering / Mechanical Engineering / Engineering Mathematics

**Qualification**

The applicants must be engineering graduates, who successfully completed four year degree program recognized by University Grants Commission and accredited by the Institution of Engineers, Sri Lanka.

**Note :**

1. The candidates are expected to conduct the first year engineering laboratories covering all specializations of Civil and Environmental Engineering, Electrical and Computer Engineering, Mechanical and Process Engineering and they should be able to help to design the second year level experiments in the same area of specializations.
2. Candidates who are awaiting the results of the final degree examinations may also apply for the post.

**Salary:**

Temporary Instructor Rs. 21,370/- per month fixed

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk**. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Applications for the above posts should be sent to the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna.

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for interview.

**Registrar**
**22.01.2014**

(C/11520)(2.6)

# இலங்கையில் 2018 ஆம் ஆண்டை நீர் வெறுப்பு நோயற்றதாக மாற்றுவோம்

யாழ்ப்பாணம்,ஜன.22

2018 ஆம் ஆண்டில் இலங்கையை நீர்வெறுப்பு நோயற்ற ஒரு நாடாக மாற்றுவோம் என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரம் ஒன்று மாணவர்களுக்காகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதில் பாடசாலை வகுப்பு நேர சூசியுடன் மாணவர்களின் பெயர், வகுப்பு, பாடசாலைப்பெயர் போன்ற விவரங்களும் காணப்பட்டன.

கடந்த வருடம் விசர்நாய்களினால் கடியுண்ட இருவர் யாழ்.மாவட்டத்தில் சாவடைந்தனர். நாய்களின் தலைகளை வெட்டிப் பரிசோதனைக்கு அனுப்பி கடித்தவை விசர் நாய்கள் தான் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் வருடாந்தம் சுகாதாரத் திணைக்களத்தினால் சகல பிரதேசங்களிலும் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்படுகிறது.

வருடாந்தம் 95 தொடக்கம் 99 வீதமான வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்படுவதாக சுகாதாரத் திணைக்களத்தின் வருடாந்தப் புள்ளி விவரங்கள் மூலம் தெரியவருகின்றது.

மஹிந்த சிந்தனைத் திட்டப் பிரகாரம் நாய்கள் கொல்வது தடை செய்யப்பட்டுள்ள நிலையில் கட்டாக் காலிநாய்களின் நடமாட்டம் தினமும் அதிகரித்துச் செல்கிறது. வளர்ப்பு நாய்களுக்கு மட்டும் விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றுவதால் மட்டுமே இலங்கையில் நீர் வெறுப்பு நோயை முற்றாக ஒழிக்க முடியுமென எதிர் பார்ப்பது வேடிக்கையானது.

**பெண் நாய்களை வளர்ப்போர் அதன் குட்டிகளை பாடசாலைகளிலும் சந்தைகளிலும் பொது இடங்களிலும் விட்டுச் செல்கின்றனர்.**

பெண் நாய்களை வளர்ப்போர் அதன் குட்டிகளை பாடசாலைகளிலும் சந்தைகளிலும் பொது இடங்களிலும் விட்டுச் செல்கின்றனர். இதனால் கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கை அதிகரித்தே செல்கிறது.

இந்த நிலையில் துண்டுப் பிரசுரத்தின் மூலம் குறிப்பிட்ட இலக்கை அடைவது என்பது கேள்விக்குறியே.

வளர்ப்புப் பெண்நாய்களுக்குக் கருத்தடை செய்யப்படுகிறது. இதேவேளை கட்டாக்காலிகளாக அலையும் பெண் நாய்களால் இன விருத்தி பெருகுவதைத் தடுப்பது யார்? துண்டுப் பிரசுரம் பிரசுரித்து வெளியிட்டவர்கள் என்ன நோக்கத்துக்காக வெளியிட்டார்களோ அதனை நிறைவேற்றும் பொறுப்பு மக்கள் கையில்தான் உள்ளது. (ந)

25 ஆவது யூபிலி

Best Wishes Best Wishes
ஜேசுதாஸ் மனோகரன் எமறென்சியா
வாழ்க்கை எனும் பயணத்தைத் தொடர்ந்த உங்களுக்கு அகவை இருபத்தைந்து.
இந்த இனிய நாளில் தேனாய் இனித்த
உங்கள் வாழ்க்கை மீண்டும் தொடரட்டும்.
அன்பு உள்ளங்களால் சந்தோஷம் நிறைந்து துன்பங்கள் எல்லாம்
இன்ப மாய் மாறி இந்த பார் போற்ற உங்கள் வாழ்க்கையை
பல்லாண்டு காலம் தொடர்ந்து வாழ இறைவன்
ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: பாசம் நிறைந்த அம்மா, எமில் குடும்பம்.
"ராஜ் வெதுப்பகம்", பண்டத்தரிப்பு.
(43843)(2.6)

தற்போது யாழ் நகரில்...
LLB (Hons) in LAW
from UNIVERSITY OF WOLVERHAMPTON

edexcel
Why Choose BCAS for Law?
> இலங்கையில் ஒரு lawyer ஆக தொழில் புரிவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.
> 3 வருட LLB (Hons) கற்கை நெறியை யாழ்ப்பாணத்திலேயே பூர்த்தி செய்ய முடியும்.
> இலங்கை சட்டக் கல்லூரி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) இனால் அங்கீகரிக்கப்பட்டது.
> இலங்கை சட்டக் கல்லூரிக்கு Law college entrance exam இன்றி அனுமதி பெற்றுக்கொள்ளமுடியும்.
> Attorney படிப்பதற்கு BCAS Campus மேலதிக பயிற்சி வகுப்புக்களை நடாத்துகின்றது.
> வயதெல்லை இன்றி அனைவரும் கலந்து கொள்ள முடியும்.
Macro Ads
For further details : (C/11523)
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
021 2219910 / 0777 102131
www.bcas.lk
Colombo : 077 482 9765 | Kandy : 081 222 4731
Batticaloa : 077 766 6432 | Kurunegala : 077 387 4747

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தாமணிப் பிள்ளையார் திருவிழா

யாழ்ப்பாணம்.ஜன.22

அராலி தெற்கு உதரான்பதி சிந்தா மணிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவவிழா நேற்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறு நாள் 30 ஆம் திகதி வியாழக் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந)



ௐ

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

நிகழும் விஜய ஸ்ரீ தை மீ முதலாம் நாள் (15.01.2014) செவ்வாய்கிழமை பின்னிரவு சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

### பிரம்மஸ்ரீ இ.வெங்கடேச ஐயர்

(இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்க கணிதர்)

அவர்களது ஆத்மசாந்தி கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

தசாகம் (கல்லெடுப்பு) 23.01.2014 வியாழக்கிழமை முற்கல் 10 மணி
ஏகோதிஷ்டம்.மாசிகம் 24.01.2014 வெள்ளிக்கிழமை
சபிண்டீகரணம் 25.01.2014 சனிக்கிழமை
கிருஹயக்ஞம். சமாராதனை 26.01.2014 ஞாயிற்றுக்கிழமை (மதியபோசனம்)

ஷே கிரியைகளில் பங்குபற்றி. 26.01.2014 நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும். மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

சோதிடபரிபாலன மடம்,
கொக்குவில். (43841)(2.6)

**குடும்பத்தினர்.**

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் திருக்கரங்களில்
04 ★ 09 ★ 1915
கட்டுவன் தெல்லிப்பழை



ஆண்டவன் திருப்பாதங்களில்
22 ★ 01 ★ 2009
ஒன்ராறியோ கனடா


### அமரர் பொன்னம்பலம் முருகேசு

(ஓய்வுபெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர்)

**ஆண்டுகள் மாறலாம் நினைவுகள் மாறாது**

சிங்கம்ஸ் பார்மஸி,
கோண்டாவில்.
(42487)(2-6-3)

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
15.08.1932

மறைவு
14.01.2001

(திதி: அபரபக்கஷஷ்டி)

### அமரர் ஆறுமுகம் முத்தையா ஐயாத்துரை

(ஓய்வு பெற்ற கிராம சேவையாளர்)

ஆண்டுகள் பதின்மூன்று சென்றதப்பா
ஆறவில்லை எங்கள் மனம் ஆயிரம்
ஆண்டுகள் சென்றாலும் உங்கள்
நினைவு எம்மை விட்டு நீங்காது

9/1, சுப்ரமணியம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(27372)(3.6.4)

**குடும்பத்தினர்.**

# திட்டத்தை மீள் பரிசீலனை செய்யுங்கள்

## அரச பொது ஊழியர் சங்கம் வேண்டுகோள்

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தை வீதி அபிவிருத்தீ அதிகார சபையாக மாற் றும் திட்டத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தச் சங்கம் கிழக்கு மாகாண முதலமைச்ச ருக்கு அனுப்பி வைத்துள்ள மனு ஒன்றிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக் களம் பல வருட காலமாக அதன் பணியை திருகோ ணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங் களிலும் சிறப்பாகச் செய்து வருகின்றது.

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சரின் சிறந்த வழிகாட்ட லின் கீழும், அவரது அயராத செயற்பாட்டின் பேரிலும், முப்பது வருட கால போர் சூழ்நிலையால் பராமரிக் கப்படாது பாதிக்கப்பட்ட வீதிகள் கிழக்கில் அடையாளம் காணப்பட்டு, ஆசிய அபிவி ருத்தி வங்கி, யுனொப்ஸ், ஜெய்க்கா முதலான திட்டங்கள் மூலம் அபிவிருத்தி மற்றும் புனரமைப் புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு சிறப்புற சேவைகளை முன்னெடுத்து வரும் வீதி அபிவிருத்தித் திணைக் களத்தை மூடிவிட்டு அதிகார சபையாக மாற்றியமைக்கும் திட்டம் வகுக்கப்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

பல வருடங்களுக்கு முன்னர் நாடு முழுவதும் தேசிய வீடமைப்புத் திணைக்களம் மாவட் டங்களில் இயங்கி வந்ததோடு. பின்னர் அதை அதிகார சபையாக மாற்றியபோது அதில் இணைந்து செயற்படவிரும்பாத அலுவலர் கள். ஊழியர்களை உள்வாங்கி மாகாணங் களில் மாகாண வீடமைப்புத் திணைக் களங்கள் இயங்கின.

இந்தத் திணைக்களம் ஒரு வருடத்துக்குள் மூடப்பட்டு அதன் நிர் வாக செயற்பாடுகள் சகலதும் மீண்டும் அதிகார சபைக்குள் உள்வாங்கப்பட்டன. கிழக்கு மாகாண வீட மைப்பு திணைக்கள அலுவலர்கள், ஊழி யர்கள் இதன்போது மாகாண கட்டடத் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டனர். அதனால் கிழக்கு மாகாண கட்டடத் திணைக்களத்தின் ஆளணிக்கு மேல திகமாக ஊழியர்கள் உள்வாங்கப்பட்ட தனால் பின்னர் வெவ் வேறு அலுவலகங் களுக்கு ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதுடன், தூர இடங்களுக்கு இடமாற்றப்பட்டவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இவ்வாறானதொரு சூழ்நிலை கிழக்கு வீதி அபிவிருத்தித் திணைக் களத்தில் கடமை புரியும் ஊழியர்களுக்கு ஏற்படக்கூடாது. எனவே சகல ஊழியர்களும் நிரந்தர சேவைக்குள் உள்வாங்கப்பட்டுநிரந்தரமாக்கப்படுவதுடன் இவர்கள் கிழக்கு மாகாண இணைந்த சேவைக்குள்ளும் உள்வாங்கப் படல் வேண்டும்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

## மெய்வன்மைப் போட்டி

மாரீசன்கூடல் றோ.க.த.க பாடசாலையின் வருடாந்த மெய்வன் மைப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெற வுள்ளது.

பாடசாலை அதிபர் ம.மகேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றூபா உதயரட்ணம், சிறப்பு விருந்தினராக சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர் க. றோபேட் உதயகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் கிராம அலுவலராகக் கடமையற்றும் சின்னத்துரை இரத்தினேஸ்வரன் அவர்களது புதல்வி

### செல்வி இரத்தினேஸ்வரன் வித்தியா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். (43827)(45.6)

நலன் புரிசங்கம்,
பிரதேச செயலகம், வேலணை.

பிரதேச செயலர்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.

## மரண அறிவித்தல்

### சோதிநாகரத்தினம் நரசிங்கமூர்த்தி

(முன்னாள் எழுதுவினைஞர் யாழ்.நீதிமன்றம்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சோதிநாகரத்தினம் நரசிங்கமூர்த்தி 17.01.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோதிநாகரத்தினம் - அகிலாண்டநாயகி தம்பதியரின் மகனும், விமலேஸ்வரியின் (இராசமணி - பிரான்ஸ்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா - தெய்வானை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான கனகசபை, இராஜேஸ்வரன் ஆகியோரின் சகோதரனும், யோகேந்திரன், அன்னலக்சுமி, மனோகரன், வரதலக்சுமி ஆகியோரின் மைத்துனரும் க.நித்தியானந்தன் (கிராமசேவையாளர், J/68), கிருஸ்ணமூர்த்தி ஆகியோரின் சகலனும், உமாகாந்தன் (பிரான்ஸ்), உமாராஜேஸ்வரன் (பிரான்ஸ்), ஞானபாலன் (பிரான்ஸ்), அகிலாண்டநாயகி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2014) புதன்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

50/3, முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (43781)(12.3.6)

தகவல்: க.நித்தியானந்தன் (சகலன்),
கிராமசேவையாளர், J/68,
யாழ்.பிரதேச செயலகம்.
021 222 5642

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பிறிசில்லா இராசாத்தி (இராசாத்தியம்மா)அல்பேட்



உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிறிசில்லா இராசாத்தி (இராசாத்தியம்மா) அல்பேட்19.01.2014 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி ஆறுமுகம் - சீதேவன் தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற ஜோன் றொபேட் அல்பேட்டின் (ஓய்வுபெற்ற அதிபர்) அன்பு மனைவியும், றொசலின் ஜெயமலர் (பேபி உடுவில்), ஜெயராஜ குலேந்திரன், (ஓய்வுபெற்ற அதிபர் யாழ்ப்பாணம்), ஜெயராஜினி (கொழும்பு), ஜெயராஜ வதனி (ஜேர்மனி), ஜெயசிறிதரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், நடராஜ சுந்தரம் (ஓய்வுபெற்ற அதிபர்), கில்டா, ஜெயரட்ணம் (ஓய்வுபெற்ற அதிகாரி, சுங்கத் திணைக்களம்), காலஞ்சென்ற நல்லையா (ஜேர்மனி) மற்றும் சத்தியபாமா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், ராகவன், ராகுலன், ரகுநாத், ரமணன், மேனகா, வோல்வின், கிருஷாந்தினி, எமிலின், திலீப், ஜனார்த்தனன், ஜெசிக்கா, ஜெனீவன், தினோஜஸ், டனியலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (22.01.2014) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உடுவில், மல்வம் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில். (43832)(45.6)

தகவல்:
**குடும்பத்தினர்.**



### சின்னத்தம்பி கணேஸ்

(ஓய்வுபெற்ற CTB சாரதி - காரைநகர் சாலை)

தோப்புக்காடு, காரைநகரைப் பிறப்பிடமாகவும், டாக்டர் செல்வத்துரை வீதி, சங்கரத்தை, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கணேஸ் (ஓய்வுபெற்ற CTB சாரதி-காரைநகர் சாலை) நேற்று (21.01.2014) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற காசிவிசாலாட்சி அம்மாவின் அன்புக் கணவரும், சாந்தகுணலட்சுமி (கனடா), இசைமணி அருமைச்சித்திரம் ஆகியோரின் அன்புத் தந்தையும், குகராஜசிங்கம் (கனடா), காளிதாசன்(கனடா), மாதவன் ஆகியோரின் அன்பு மாமனும், குகசாந், குகசாந்தினி, நாகதீபிகா, நாகதர்சிகா, நாகதர்சிகன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2014) புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி, வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டாக்டர் செல்வத்துரை வீதி,
[illegible], சங்கரத்தை,
வட்டுக்கோட்டை. (43831)(10.6)

தகவல்: த. மாதவன் (மருமகன்),
அதிபர், யா/மானிப்பாய் மெமோறியல்
ஆங்கிலக் கல்லூரி, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது லயன்ஸ் கழக அங்கத்தவர்
லயன். க. சுரேன்
(பொறியியலாளர்)
அவர்களின் தந்தையார்

Dr. அருணாசலம் கணேசமூர்த்தி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

லயன்ஸ் கழகம்
கோப்பாய்.


# முழுமையாக அழிந்த நெற்பயிர்கள்

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள மணற்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்செய்கை உரிய வேளையில் மழை பெய்யாததால் முற்றாக அழிவடைந்துள்ளதாக இந்தப் பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள புத்துவெட்டுவான் பகுதியில் இந்த மணற்குளம் அமைந்துள்ளது. சுமார் 23 விவசாயிகள் அறுபது ஏக்கர் நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கையை மேற்கொண்டிருந்தனர்.

மழை பெய்யாது வறட்சி நிலவியதால் நெற்பயிர்கள் எரிந்து அழிவடைந்துள்ளன.

மணற்குளத்தை நம்பியே இந்தப் பகுதி விவசாயிகள் பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி அழிவடைந்த நெற்பயிர்களுக்கு ஆரம்பத்தில் களைநாசினிகள் விசிறப்பட்டதுடன் உர வகைகளும் இடப்பட்டன. இதனால் விவசாயிகள் படுநட்டத்துக்கு முகம் கொடுக்கநேர்ந்துள்ளது.

(க-55)

# மாணவர்களுக்கான விஞ்ஞானப் போட்டி

யாழ்ப்பாணம், ஜன.22

தமிழ்மொழி மூல மாணவர்களின் விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் நோக்குடன் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் இவ்வருடமும் வடமாகாண பாடசாலைகளுக்கிடையேயான விஞ்ஞானப் போட்டி நிகழ்ச்சிகளை நடத்தத் தீர்மானித்துள்ளது.

வினாவிடைப் போட்டிக்கான எழுத்துப் பரீட்சை,கட்டுரைப் போட்டி என்பன எதிர்வரும் 25 ஆம் திகதி (சனிக்கிழமை) நடைபெறும். அனுமதி அட்டைகள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிடைக்கப் பெறாதவர்கள் தங்கள் பாடசாலை அதிபரூடாக உதவிப் பொதுச் செயலாளருடன் தொடர்பு கொள்ளலாம் என்று யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் அறிவித்துள்ளது.

(ஓ)


# மரண அறிவித்தல்

## திருமதி பத்மாவதி அச்சுதன்



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், மன்னார், உயிலங்குளத்தில் வசித்தவருமாகிய திருமதி பத்மாவதி அச்சுதன் நேற்று (21.01.2014) செவ்வாய்க்கிழமை யாழ். வண்ணார்பண்ணையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம்-பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கருப்பையா-பிச்சமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற அச்சுதனின் (U.K Engineering உயிலங்குளம்-மன்னார்) அன்பு மனைவியும், பகீரதன், கிரிதரன், கலைச்செல்வன் ஆகியோரின் அன்புத் தாயும், கமலாதேவி, காலஞ்சென்ற சிவ மூர்த்தி மற்றும் சிவகுமார், சிவநேசன், சிவராசன், கௌரிமனோகரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராமு, சுந்தராம்பாள், சிவசுப்பிரமணியம், சரோஜாதேவி, பத்மாதேவி, நிர்மலா, ராஜி, அன்ரன் சில்வஸ்ரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2014) புதன்கிழமை மாலை 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

531, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(43848)
(10.6)

தகவல்:
குடும்பத்தினர்.


# சிறப்பான தைப்பூசத் திருநாள்

முல்லைத்தீவு,ஜன.22

ஒட்டுசுட்டான் பகுதியில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது தைப் பூசத்திருநாள். விவசாயிகள் தமது இல்லங்களைத் தூய்மைப்படுத்தியதுடன் காலைவேளை வயலுக்குச் சென்று சூரிய பகவானை வணங்கிய பின்னர் நெற்கதிர்களை எடுத்தனர். பின்னர் வீட்டிலே கும்பம் வைத்து பழைய நெற் கதிர்களை அகற்றிவிட்டுப் புதிய நெற்கதிர்களைக் கட் டினர்.

அத்துடன் நெல்லை உடைத்து அரிசியாக்கி பழைய அரிசியுடன் கலந்து பொங்கி உண்டு மகிழ்ந்தனர். ஆலயங்களில் அன்னா பிஷேகம் இடம்பெற்று புதுப் பொங்கலிட்டுப் படையல்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் முற்றிய நெற்கதிர்கள் ஒட்டுசுட்டான் ஆலய நிர்வாகத்தினரால் வழங்கப்பட்டன. பலர் அங்கு சென்று அவற்றைப் பெற்றுத் தமது வீடுகளுக்குக் கொண்டு சென்றனர்.

இதேவேளை இந்தப் பகுதியில் தைப்பொங்கல் திருநாளும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(க-500)


# Words of Peace

நீங்கள் எதனைத் தேடுகின்றீர்களோ அது உங்களின் உள்ளேதான் உள்ளது என்று கூறாத ஞானிகளும் இல்லை, மகான்களும் இல்லை.

மேலும் அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு:
0117 250001
தினமும்: பி.ப 3 மணி - 10 மணிவரை

(43849)
(10.14)

# Direct Marketing International (Pvt) Ltd

அமெரிக்க நிறுவனத்தின் புதிய பதவி வெற்றிடம் அனுபவம் உள்ளோர் அனுபவமற்றோர் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

- Sales Distributor விநியோகஸ்தர்
- Sales Supervisor மேற்பார்வையாளர்
- Location Manager கிளை முகாமையாளர்

பயிற்சியின் போது 12000+
பயிற்சியின் பின் 40000 + ETF, EPF காப்புறுதி
நிரந்தர வேலை



விண்ணப்ப இறுதித் திகதி:
28.02.2014

(43850)
(10.14)

T.P: 077 190 8997
077 632 0962
077 664 4628



# மரண அறிவித்தல்



## திருமதி லலிதா (சுமதி) தேவராஜா

திருநெல்வேலி, கோப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லலிதா தேவராஜா நேற்று (21.01.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தேவராஜா (தேவா மாபிள்ஸ்) அவர்களின் பாசமிகு மனைவியும், சுரேஸ், சுரேக்கா, டயானா, லவுசிகன், லவுசுயன் ஆகியோரின் அன்புத் தாயும், குயின்சனின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2014) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப. 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராஜவீதி, திருநெல்வேலி,
கோப்பாய்.

(43846) (2.6)

தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின்
29 ஆவது பட்டமளிப்புவிழாவில் கலைப் பிரிவு சங்கீதத்தில் B.F.Aபட்டம் பெற்ற
**செல்வி கிருஸ்ணரூபன் மயூரி**
அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன், அவர் மென்மேலும் பல பட்டங் களைப் பெற்று சிறப்புடன்வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்.
திருவள்ளுவர் சன சமூக நிலையம் அங்கத்தவர்கள்,
பத்திரகாளி அம்மன் பரிபாலன சபையினர்,
ஜேம்ஸ் விளையாட்டுக்கழகத்தினர்.
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை

# வறுமைக் கோடு குறித்து புதிய மதிப்பீடு

## திட்டமிடுகிறது புள்ளிவிவரத் திணைக்களம்

கொழும்பு, ஜன.22
இலங்கையிலுள்ள வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களின் தரம் குறித்துப் புதிய மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு பொதுசன மற்றும் புள்ளி விவரங்கள் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.
இந்த மதிப்பீட்டை விரைவில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. அதன் மூலம் நாட்டின் வறு மைக்கோடு சம்பந்தமாக புதிய த்ரவுகளைப் பெற முடியும் என்று பொதுசன மற்றும் புள்ளி விவரங்கள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.
இந்த மதிப்பீட்டின் மூலம் வறுமைப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் வட்டியில்லாக் கடன்கள் மற்றும் நிவாரண உதவிகளை ஒழுங்கான முறைமையின் கீழ் வழங்க முடியும் என்று திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.
இவ்வாறு வழங்கப்படும் கடன்கள் தற்போது பெருமளவில் தகுதி உள்ளவர்களுக்கு பகிரப்படுவது குறைவு என்பதை அரசு இனங்கண்டதை அடுத்தே இந்த மதிப்பீட்டு நடவடிக்கையை மேற்கொள்ள உள்ளது.
புள்ளி விவரத் திணைக்களத்தினால் மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள மதிப்பீடுகளின் போது தற்போது வறுமைப்பட்ட மக்கள் தொகையினர் வாழும் பிரதேசங்கள் வேகமாக மாற்றமடைந்து வருகின்றமை தெரிய வந்துள்ளது. (ச-22)

## திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்.
நிகழும் மங்களகரமான 2014 ஆம் ஆண்டு தை மாதம் 9ஆம் நாள் [22.01.2014] புதன்கிழமை காலை 7.30-9.00 மணி வரையுள்ள சுப வேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட
**Best Way Super Market**
எனும் புதுக்கடை திறப்புவிழாவினை நடத்த இறைவன் திருவருளால் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து நிகழ்வைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 174B, பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

இனிதே தங்கள் நல்வரவை நாடும்
தொ.பே: 021 205 3822

# மஹிந்த அரசை மார்ச்சில் மடக்க ஜே.வி.பி.வியூகம்

## *கே.டி. லால்காந்த கூறுகிறார்*

கொழும்பு.ஜன.22
"மார்ச்சில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் அரசை தோற்கடிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்துவருகின்றோம். அதற்கு அடுத்து நடைபெறும் ஜனாதிபதி தேர்தலிலும் அரசை தோற்கடித்து வீட்டுக்கு விரட்டியடிக்கப் போராடுவோம்"
இவ்வாறு மேல்மாகாணசபைத் தேர்தலில் ஜே.வி. பியின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்கியுள்ள கே.டி. லால்காந்த தெரிவித்தார்.
மாகாணசபைத் தேர்தல்களையொட்டிய ஜே.வி.பியின் பரப்புரை நடவடிக்கைகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"மார்ச்சில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலுக்காக நாம் நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று பிரச்சாரங்களைச் செய்து வருகிறோம். வீடு வீடாகச் சென்று துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து வருவதுடன் மக்களுக்கு விழிப்புணர்வுத் தகவல்களை வழங்கி அவர்களை தெளிவுபடுத்தியும் வருகிறோம்.
மக்களும் இவற்றை விரும்பி ஏற்றுக் கொள்கிறார்கள் என்றே தோன்றுகின்றது.
காரணம், போர் முடிவடைந்த போது இருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தற்போதிருக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அதிக வித்தியாசங்கள் இருக்கின்றன. இதை மக்களும் தற்போது உணர்ந்து கொண்டார்கள்.
ஆகவே, இம்முறை தேர்தலில் எமது கட்சிக்கு பலமானதொரு வெற்றி வரும் என்றே நாம் நினைக்கிறோம். மக்களின் மனநிலை குறித்து தற்போது எதையும் உறுதியாகக் கூற முடியாதிருப்பினும் எமது செயற்றிட்டங்களைப் பார்க்கும் போது இம்முறை எமக்கு வெற்றி ஒன்று காத்திருக்கின்றது என்றே தோன்றுகிறது- என்றார். (ச)

# கைதியைவிட குறைவான சம்பளம் காவலர்களுக்கு

சிறைக் கைதிகளுக்கு நாளாந்த சம்பளமாக 500 ரூபா வழங்கப்படும் அதேவேளை, பயிற்சி நிலையிலுள்ள தங்களுக்கு நாளாந்தம் 476 ரூபா மட்டுமே வழங்கப்படுகிறது என்று புதிய சிறைக் காவலர்கள் விசனம் தெரிவித்தனர்.
அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சம்பள உயர்வின் பிரகாரம் தற்காலிக வேலைகளில் ஈடுபடுத்தப்படும் சிறைக் கைதிகளுக்கு நாளாந்தம் 500 ரூபா வழங்கப்படுகின்றது.
அரச நிறுவனங்களில் அவ்வப் போது தற்காலிக வேலைகளில் ஈடுபடுத்தப்படும் இவர்களுக்கு இதுவரை நாளாந்த ஊதியமாக 400 ரூபாவே வழங்கப்பட்டு வந்தது என்று புதிய சிறைக் காவலர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.
தங்களைவிட குறைவான சம்பளம் பெறுகிறார்கள் என இந்தக் கைதிகள் அவ்வப் போது புதிய காவலர்களைக் கிண்டல் செய்வது வழக்கமாகிப் போய் விட்டது என்று அவர்கள் விசனம் தெரிவித்தனர். (ச)

ENGLISH MEDIUM
PERSONAL / GROUP CLASSES
HOME VISIT
A/L ACCOUNTING- ENG/ TAMIL
ARTS SUBJECT GR 6 TO 11 ENG / TAM
0773316402 - JAFFNA

## மரண அறித்தல்

### திருமதி திலகவதி உலகநாதன்



புங்குடுதீவு, 9ஆம் வட்டாரத்தைப் (துளசி மாடம்) பிறப்பிடமாகவும், முள்ளியவளை அம்பாள் தோட்டத்தையும், கொழும்பு, கொட்டாஞ்சேனையையும், வதிவிடமாகக் கொண்ட திருமதி திலகவதிஉலகநாதன் நேற்று (21.01.2014) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-கமலம்மா (முன்னாள் கிளிநொச்சி மகாலிங்கம் ஸ்டோர்ஸ் உரிமையாளர்) ஆகியோரின் அன்பு மகளும், முள்ளியவளை அம்பாள் தோட்டம்) உலகநாதனின் ( உரிமையாளர் - அம்பாள் சி.மு) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (உரிமையாளர் அம்பாள் ஸ்ரோஸ் அன் கபே- முல்லைத்தீவு), நாகம்மா தம்பதியரின் மருமகளும், சுகீ (கனடா), சீலன் (லண்டன்), சசீ (சுவர்ணா-லண்டன்), செல்வி (சுவிஸ்), ஜெகன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், பாலபாஸ்கரன், சுஜாநந்தினி, ரவீந்திரன், கிருஸ்ணகுமார், சிவாஜினி ஆகியோரின் அன்பு மாமியும், புனிதவதி, காலஞ்சென்ற பரமலிங்கம் (உரிமையாளர் -ஞானம் மில், கிளிநொச்சி), கனகலிங்கம் (கனடா), புஸ்பவதி (டென்மார்க்), மகாலிங்கம் (ரதி ஜூவல்லர்ஸ்- லண்டன்), சொர்ணவதி (இலங்கை), காலஞ்சென்றவர்களான ஞானலிங்கம், பத்மலிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற கோபாலபிள்ளை(பெ.மு) காலஞ்சென்ற மங்கையர்க்கரசி, பரமேஸ்வரி (இலங்கை), காலஞ்சென்ற புண்ணியமூர்த்தி லெச்சுமன் (ஜேர்மனி), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், செல்வராஜா, ஜோன் மேடோஸ், புஸ்பவதி, மனோன்மணி, ஜெயகௌரி, மல்லிகா, நிலானி, ஆகியோரின் அன்பு மைத்துனியும், புவனேஷ்வரி (ஹொலன்ட்), காலஞ்சென்றவர்களான நாகேஸ், பேரம்பலம், மற்றும் விக்னேஷ்வரி ஆகியோரின் சகலியும், ஜனாதன், ஜானு பிரியா, பபிஷா, டிவிஷா, அஷ்மினா, ஆதிரியா டிஷான், கெர்ஷோன், வஷ்சினி, மாதினி, கெஷ்வினி ஆகியோரின் அன்பு பேர்த்தியும், அப்பம்மாவும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் ஜெயரட்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (23.01.2014) வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் இறுதிக்கிரியைக்காக பொரல்லை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 103, ஸ்ரீ குணானந்த மாவத்தை,
கொட்டாஞ்சேனை, கொழும்பு-13,
077 046 1711, 011 239 5648

தகவல்:
க. உலகநாதன் (கணவர்),
பிள்ளைகள்.

(43856)(10.14)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் சக ஆசிரியை
திருமதி ஜெயந்தா முகுந்தன் அவர்களின் அன்புத் தாந்தை
**செல்லப்பா கனகராசா**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கிறோம்.
ஆசிரியர் கழகம்
யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி- இளவாலை

## மரண அறிவித்தல்

### திருமதி பீற்றர் மேரி மெற்றலின் (ராணி)



யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தை பிறப்பிடமாகவும், 13/1 புனித அன்னாள் வீதி, பாண்டியன் தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட பீற்றர் மேரி மெற் றலின் நேற்று (20.01.2014) திங்கட்கிழமை காலமானார்.
அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (22.01. 2014) புதன்கிழமை பாண்டியன் தாழ்வு புனித அன்னம் மாள் ஆலயத்தில் மு.ப.10.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்துக்காக கொஞ்சேஞ்சி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்

13/1, புனித அன்னாள் வீதி,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

தகவல் : றொபின்
(மகன்- மக்கள் வங்கி)
077 6032316


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் 22.01.2014



# போராளிகள் உதித்த மண்ணில் இப்படியும் இன்று போராட்டமாம்

## எங்கே போகிறது யாழ்ப்பாணம்?



நேற்றைய போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் இவர்கள் தான்

விடுதலைப் போராட்டத்துக்காக பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் தமது இன்னுயிர்களை ஈகம் செய்த இந்த மண்ணில், சினிமா விமர்சனத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாகக் கூறிக்கொண்டு விஜய் ரசிகர்கள் எனத் தம்மை அடையாளப்படுத்திய ஒரு கூட்டம் நேற்று 'உதயன்' பத்திரிகை அலுவலகம் முன்பாகப் போராட்டம் நடத்தியது. ஞாயிறு சூரியகாந்தி இணைப்பிதழில் வெளியான 'ஜில்லா' படம் தொடர்பான விமர்சனத்தில் "இந்தத் திரைப்படத்தைப் பார்க்க திரையரங்குக்குப் போய் மூன்று மணி நேரத்தை வீணடிப்பது கொழுப்பு அன்றி வேறு என்னவாக இருக்க முடியும்?" என்று எழு தப்பட்டிருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்துத்தான் போராட்டம் நடத்துவதாகக் கூறிக் கொண்டு மு.ப. 11 மணி முதல் சுமார் இரண்டு மணி நேரத்துக்கும் மேல் கொளுத்தும் வெயிலின் மத்தியில் வீதியோரமாக நின்று கொண்டிருந்தது அந்தக்கூட்டம்.

முன்னதாக இப்படி ஒரு போராட்டம் 'உதயன்' பத்திரிகை அலுவலகத்திற்கு முன்பாக நடக்கிறதா? என்று முற்பகல் முதல் புலனாய்வாளர் கள் தொடர்ச்சியாக எமது செய்தியாளர்களிடம் விசாரித்தார்கள். குறித்த கூட்டத்தைச் சேர்ந்த 14 பேர் வரையிலானோர் வீதியில் நின்றுகொண்டிருந்த போது அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது போன்று புலனாய்வாளர்களாகத் தம்மை இனங்காட்டிய சுமார் 20இற்கும் மேற்பட்டவர்கள் 'உதயன்' அலுவலகத்தை அண்டிய பகுதிகளில் நின்றிருந்தனர். இராணுவத்தினருக்கு வீடியோ எடுப்பவர் என்று தன்னை அடையாளப்படுத்திய ஒருவர் வீடியோவில் இவர்கள் செய்தவற்றைப் பதிவு செய்துகொண்டிருந்தார். மதியத்திற்குப் பின்னர் அந்தக் கூட்டம் அங்கிருந்து கலைந்து சென்றது. (உ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஆளும் தரப்பு

சம்பவம் தொடர்பில் தாக்குதலுக்கு இலக்கான ஆளும் தரப்பு உறுப்பினர் குமாரசிங்கத்தை தொடர்பு கொண்டு கேட்டபோது:

விவாதம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது நான் குறித்த குற்றச் சாட்டை முன்வைத்தேன். ராமச்சந்திரன் என்ற எதிரணி உறுப்பினர் என்னிடம் அதனை உறுதிப்படுத்துமாறு கோரினார். அரசியல் தலையீடு என்பதால் அதை உங்களுக்கு தனிப்பட்ட வகையில் சொல்கிறேன் என்றேன். அத்துடன் சபைத் தலைவரின் அனுமதியுடன் எனது தனிப்பட்ட தேவைக்காக நான் சபையில் இருந்து வெளியேறினேன். இதன் போது என்னைத் தொடர்ந்து வந்த குறித்த எதிரணி உறுப்பினர் என்னைக் கடுமையாகத் தாக்கியதுடன், கொலை மிரட்டலும் விடுத்தார் இது குறித்து பொலிஸ் நிலையத்தில் நான் முறைப்பாடு செய்துள்ளேன் என்றார்.

இந்தச் சம்பவம் குறித்து எதிரணி உறுப்பினரான இராமச்சந்திரன் என்பவருடன் தொடர்பு ஏற்படுத்தியபோது " நான் வேறு நபர்களுடன் கதைத்துக் கொண்டிருக்கிறேன் உங்களுக்கு மீண்டும் அழைப்பை ஏற்படுத்துகிறேன் என்றார். பின்னர் அவராக அழைத்து பக்ஸில் விவரம் அனுப்புவதாகக் கூறினார். சிறிது நேரத்தின் பின்னர் நாளை அனுப்புவதாக தெரிவித்தார். (ஐ-426)

### கடத்தியவர்களே

அவர்களின் விருப்பத்துக்கு மாறாகக் கொண்டு செல்லப்பட்டவர்கள் ஒரு தொகுதியினர் இருக்கின்றனர். அவர்களின் விருப்பத்துக்கு மாறாக யார் கொண்டு சென்றார்களோ அவர்களுக்கு உரிய தண்டனையை சட்டமா அதிபர் திணைக்களத்தினூடாக பெற்றுக் கொடுப்பதற்குப் பரிந்துரைக்கப்படும்.

இன்னொரு வகையினர், அவர்களின் காணாமற்போன உறவினர்களைத் தேட முடியும் என்றால் தேடிக் கொடுப்போம். அவர்கள் இல்லையென்று எம்மால் உறுதியாக நிரூபிக்க முடிந்தால் அவர்களுக்குரிய நட்டஈடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று ஆணைக்குழுவினர் அங்கு குறிப்பிட்டனர்.

ஒரு சில சாட்சியங்கள், தமது பிள்ளைகளை விடுதலைப் புலிகள் கட்டாயப்படுத்திக் கொண்டு சென்றதாகவும் அதன் பின்னர் அவர்கள் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற்போனதாகவும் தெரிவித்துள்ளனர்.

அப்படியாயின் கடத்தியவர்களா? அல்லது காணாமற்போகச்செய்தவர்களா குற்றவாளி என்று ஊடகவியலாளர்களால் கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த ஆணைக்குழுவினர், கடத்தியவர்கள் தான் குற்றவாளிகள். அந்தக் குற்றவாளிகள் யார் என்று விசாரணை செய்து சட்ட நடவடிக்கைக்கு பரிந்துரை செய்யப்படும். ஆணைக் குழுவுக்குச் சட்டபூர்வமாகத் தண்டிக்கும் அதிகாரம் இல்லை. யாரைத் தண்டிக்கவேண்டுமோ அவர்களை உரிய சட்ட ஒழுங்குக்கு உட்படுத்தி நீதித்துறை ஊடாகத் தண்டனை வழங்கப்படும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குப் பரிந்துரைப்பதற்கு மாத்திரமே எங்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது-என்றனர். (து-5)

### 152 பேர்

இந்த ஆணைக்குழு ஆரம்பத்தில் காணாமற்போனவர்கள் தொடர்பிலான முறைப்பாடுகளை எழுத்து மூலம் அனுப்புமாறு கோரியிருந்தது. அவ்வாறு அனுப்பியவர்களைத் தேர்வு செய்து அவர்களின் சாட் சியங்களை நேரடியாகவே பதிவு செய்தது.

கடந்த 18 ஆம் திகதி சனிக்கிழமையிலிருந்து நேற்று 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை தொடர்ச்சியாக 4 நாள்கள் கிளிநொச்சியில் அமர்வுகள் நடத்தப்பட்டன. கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 9 கிராம சேவையாளர் பிரிவுகளில் இந்த அமர்வுகள் நடத்தப்பட்டன.

இந்த அமர்வுக்காக மேற்படி 9 கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்தும் 154 பேர் அழைக்கப்பட்டிருந்தனர். ஆனாலும் அழைக்கப்பட்டவர்களில் 130 பேர் வரையிலேயே சாட்சியமளித்துள்ளனர்.

குறித்த 9 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த அழைக்கப்படாதவர்களும் கடந்த நான்கு தினங்களில் சாட்சியமளிக்க அனுமதிக்கப்பட்டனர். அனைத்தையும் உள்ளடக்கி 152 பேர் சாட்சியமளித்துள்ளனர்.

எஞ்சிய கிராம சேவையாளர் பிரிவுகளில் விரைவில் அமர்வுகள் நடத்தப்படும் எனவும் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். (து-5)

### எனது கணவர்

அந்தப் பெண் இவ்வாறு தெரிவித்தார்.

**இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்தோம்**

அவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தனது கணவரின் பெயர் சுரேஷ்குமார். அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரிசி ஆலையில் காசாளராகப் பணிபுரிந்து வந்தார்.

இறுதிக்கட்டப் போர் இடம்பெற்ற 2009 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நான், எனது கணவர் மற்றும் கணவரின் தாயார் ஆகியோர் வந்தோம். அன்றையதினம் இரவு வட்டுவாகலில் உள்ள பாடசாலையொன்றில் தங்க வைக்கப்பட்டோம். மறுநாள் காலையில் இராணுவத்தினர் ஒலிபெருக்கி ஊடாகத் தமிழில் அறிவித்தனர். எங்கள் எல்லோரையும் பஸ்ஸில் வந்து ஏறுமாறு தெரிவித்தனர்.

[illegible] சி.ஐ.டி.யின் இரண்டு முகாம்கள் இருந்தன. ஆண்களுக்கு வேறாகவும், பெண்களுக்கு வேறாகவும் அவை அமைக்கப்பட்டிருந்தன. அதனூடாகச் செல்லும்போது, கணவரின் அடையாள அட்டை என்னிடமும், எனது அடையாள அட்டை கணவரிடமும் இருந்தது. அதனைப் பெற்றுக் கொள்வதற்காக இருவரும் முகாமின் ஒரு இடத்துக்கு வந்தோம்.

**அம்மாவுடன் போ நான் வருகின்றேன்**

அப்போது எனது கணவனுடன் பேசிக்கொண்டிருக்கும் போது, சரளமாகத் தமிழ் பேச முடியாத ஒருவர் எனது கணவனை, வாங்கோ போவம் என்று சொன்னார். நான் கணவரின் கையைப் பிடித்தேன். அதற்கு கணவர், அம்மாவுடன் (மாமி) செல்லுமாறும் தான் வருவதாகவும் தெரிவித் தார். அதன் பின்னர் நாங்கள் வெளியில் வந்து காத்திருந்தோம். எனது கணவர் வரவில்லை. எங்களை இராணுவத்தினர் கட்டாயப்படுத்தி பஸ்ஸில் ஏற்றப் பார்த்தார்கள்.

அந்த நேரம் சோதனைச் சாவடிக்கு அருகில், சாதாரண பஸ் ஒன்று வந்து நின்றது. அந்த பஸ்ஸில் தனியே ஆண்களை மாத்திரம் இராணுவத்தினர் ஏற்றிக் கொண்டிருந்தனர். அப்போது எனது கணவனை அந்த பஸ்ஸில் கண்டேன். அவர் ஜன்னல் கரையில் வந்து அமர்ந்து எனக்குக் கை காட்டினார்.

**பஸ்ஸை சூழ்ந்த இராணுவம்**

உடனே நான் பஸ்ஸை நோக்கி ஓடிச் செல்ல, இராணுவத்தினர் பஸ்ஸை சூழ்ந்து கொண்டனர். அந்த நேரம் பஸ்ஸில் காயப்பட்ட ஆண்களும் இருப்பதை நான் அவதானித்தேன். எனது உடுப்புப்பை கணவரிடமிருந்தது. அதை அவர் ஜன்னலால் தூக்கி எறிந்தார். அதன் பின்னர் அந்த பஸ் புறப்பட்டது.

அங்கு நின்ற இராணுவத்தினரிடமும் பின்னர் ஓமந்தையில் நின்ற இராணுவத்தினரிடமும் எனது கணவரைப் பற்றி கேட்டேன். அவரை மூன்று நாள்களில் விடுவதாகத் தெரிவித்தனர்.

பின்னர் எங்களை ஆனந்தக் குமாரசுவாமி முகாமில் இறக்கினர். அந்த முகாமில் எனது கணவரைக் கூட்டிச் சென்ற அரைகுறைத் தமிழ் பேசியவரைக் கண்டேன்.

குறித்த அதிகாரி அங்கிருந்த சி.ஐ.டி முகாமில்தான் இருந்தார். அவர் தான் முகாம் இளைஞர்களை எல்லாம் விசாரணை செய்தார். நான் அவருடன் கதைக்க முற்பட்டபோது அதனை அவர் தவிர்த்தார்.

**முகாமில் சென்று தேடவும்**

இந்தவேளையில் குறித்த அதிகாரிக்கு நெருக்கமான எனக்குத் தெரிந்த ஒருவர் ஊடாக எனது கணவரின் ஒளிப்படத்தைக் கொடுத்து இவரைத் தெரியுமா என்று கேட்கச் சொன்னேன். அதற்குக் குறித்த அதிகாரி நிறையப் பேரை தான் பார்த்திருப்பதால் ஞாபகமில்லை என்று தெரிவித்ததுடன், முகாமில் சென்று தேடுமாறு எனக்குத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் குறித்த அதிகாரியையும் நான் முகாமில் காணவில்லை - என்றார். இது தொடர்பில் ஆணைக் குழுவினர் எதுவித பதிலும் வழங்கவில்லை. (து-5)

### மீனவர்

எதிர்வரும் பெப்ரவரி 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

புதுக்கோட்டை மாவட்டம் ஜனதாப்பட்டினம் பகுதியிலிருந்து ஆறு படகுகளில் வந்த 26 மீனவர்களே இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்ததாகத் தெரிவித்துக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இருநாட்டு மீனவர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் இரு நாட்டு அரசுகளுக்கும் இடையே தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் ஏற்கனவே எல்லை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுச் சிறை வைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்கும் உடன்பாடும் இலங்கை-இந்திய அரசுகளிடையே எட்டப்பட்டு மீனவர்கள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் மீண்டும் நேற்று 26 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தியாவுக்கு பேச்சுக்குச் சென்ற கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன பேச்சு முடிவடைந்து நாடு திரும்பும் வேளையில், இரு தரப்பு மீனவர்களையும் விடுவிப்பது குறித்து உடன்பாடு எட்டப்பட்டுள்ள போதும் எல்லை தாண்டும் மீனவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (து-4-17)

### மன்னார்

40 மனித எலும்புக்கூடுகள் அங்குமுழுமையாகவும், துண்டுகளாகவும் மீட்கப்பட்டுள்ளன. மன்னார் நீதிவானின் உத்தரவுக்கமைவாக நேற்று முன்தினம் திங்கட்கிழமையும் நேற்றுச் செவ்வாய்க்கிழமையும் குறித்த பகுதியில் உள்ள வீதி உடைக்கப்பட்டுத் தோண்டும் பணி இடம்பெற்றது. நேற்றுப் புதிதாகத் தோண்டப்பட்ட பகுதியில் மனித எலும்புத் துண்டுகள் சில கண்டுபிடிக்கப்பட்டன. நேற்றுப் பிற்பகல் 2 மணியுடன் பணிகள் இடைநிறுத்தப்பட்டன. இன்று புதன்கிழமை மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் புதைகுழி மீண்டும் தோண்டப்படும்.

அனுராதபுரம் சட்ட வைத்திய அதிகாரி டி.எல்.வைத்தியரட்ன தெரிவிக்கையில்,

மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்டுவரும் மனித எலும்புக்கூடுகள் தொடர்பில் மரணம் சம்பவித்த விதத்தை அறிந்துகொள்ள நீண்ட நாள்கள் எடுக்கும். குறித்த புதைகுழியின் எல்லை எதுவரை நீண்டு செல்கிறது என்பதைக் கண்டு பிடிக்க முடியாத நிலையில் உள்ளோம் என்று கூறினார். (து-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘தேசத்தின் மகுடம்’ கரப்பந்து ஆவரங்கால் இந்து சம்பியன்



சம்பியன் வென்ற ஆவரங்கால் இந்து இளைஞர் அணி

யாழ்ப்பாணம்.ஜன.22
தேசத்தின் மகுடம் 2014 ஆம் ஆண்டு கண்காட்சியை முன்னிட்டு வடமாகாண ரீதியிலாக நடைபெற்ற கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மன்னார் ஓடைத் தொடுவாய் சென்.தோமஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

“ - ”
ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

5 செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியிலும் சம்பியனானமை குறிப்பிடத்தக்கது. (த-23)

# இன்றைய ஆட்டங்கள்

வவுனியா, ஜன.22
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக மின்னொளியில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் இன்று புதன்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் ஈஸ்வரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பிறண்ட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்.உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 'பி' பிரிவு அணிகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இதில் இன்று புதன்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-
பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக் கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

# 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டி



யாழ்ப்பாணம், ஜன.22
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பருத்தித்துறை பிரதேசத்துக் குட்பட்ட சிரேஷ்ட குழுவினரால் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 9 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் டயமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.
இந்தப் போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-23-400)

# விளையாட்டுத் துறையை மேம்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம்.ஜன.22
வடக்கு மாகாண பாடசாலைகளில் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை வட மாகாண கல்வித் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.
இது தொடர்பான கலந்துரையாடல்கள் மாவட்டரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் வவுனியா மாவட்டத்திலுள்ள வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு கல்வி வலயங்களைச் சேர்ந்த உடற்கல்வி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் அண்மையில் வவுனியா தெற்கு கல்வி வலய மண்டபத்தில் இடம்பெற்றது.
வவுனியா தெற்கு கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.சுபைர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் வட மாகாண கல்வித் திணைக்கள முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளரும் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளருமான கே.சத்தியபாலன் கலந்து கொண்டு அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கமளித்தார்.
இதில் வவுனியா தெற்கு வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் யூட் பரதமாறன், வவுனியா வடக்கு வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜே.மங்களகுமார் உட்பட உடற்கல்வி ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.
தொடர்ந்து எதிர்வரும் 25 ஆம் திகதி வடமராட்சி, தென்மராட்சி வலயங்களைச் சேர்ந்த உடற்கல்வி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்கள் இடம் பெறவுள்ளன என வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன் தெரிவித்துள்ளார். (த-400-422)





கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தால் பொங்கல் விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட 6 பேர் பங்குபற்றும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்து மத்திய சனசமூக நிலைய அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 24:19 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (த-23)

# அம்பாறை வெற்றி



யாழ்ப்பாணம்.ஜன.22
2014 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேசத்தின் மகுடம் கண்காட்சியை முன்னிட்டு கிழக்கு மாகாண ரீதியில் நடைபெற்ற கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.
இறுதியாட்டத்தில் அம்பாறை மாவட்ட சிவில் பாதுகாப்பு அணியை எதிர்த்து திருகோணமலை பற்றிமா விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
5 செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் அம்பாறை மாவட்ட சிவில் பாதுகாப்பு அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (த-23)

# தேசிய அணிகளில் இடம்பெற விண்ணப்பம்

வலி.வடக்கு, ஜன.22
இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஸ்ரீ லங்கா யுத் தேசிய விளையாட்டுக் குழுமத்தினால் ஒன்றிணைந்த தேசிய மட்டத்திலான விளையாட்டு வீரர், வீராங்கனைகளை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

“ - ”
ஆண்களுக்கான கரப்பந் தாட்டக் குழுமத்தில் இணைந்து கொள்வதற்கு ஆகக் குறைந்த உயரம் 190 சென்ரி மீற்றர் இருத்தல் வேண்டும்.

ஆண்களுக்கான கரப்பந்தாட்டக் குழுமத்தில் இணைந்து கொள்வதற்கு ஆகக் குறைந்த உயரம் 190 சென்ரி மீற்றர் இருத்தல் வேண்டும்.
ஆண்களுக்கான கபடிக் குழுமத்தில் இணைந்து கொள்வதற்கு ஆகக்குறைந்த உயரம் 177 சென்ரி மீற்றர் மற்றும் நிறை 80 கிலோவுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.
பெண்களுக்கான கரப்பந்தாட்டக் குழுமத்தில் இணைந்து கொள்வதற்கு ஆகக்குறைந்த உயரம் 177 சென்ரி மீற் றர் இருத்தல் வேண்டும்.
குறிப்பிட்ட விளையாட்டுகளுக்குப் பொருந்தும் விதத்தில் அனைத்து விளையாட்டு வீரர், வீராங்கனைகளும் சிறந்த உடற்தகுதியை கொண்டு இருப்பதுடன் ஜி.சீ.ஈ. சாதாரணதரத்தில் சித்தி பெற்றிருத்தல் விசேட தகைமையாகக் கருதப்படும்.
பயிற்சிக்காலத்தில் உணவு, பணம், விடுதி வசதிகள் வழங்கப்படுவதுடன் விளையாட்டு உடைகள் என்பவற்றுடன் மூன்று வருட காலத்துக்கு வதிவிட பயிற்சி பாடநெறியும் இலவசமாக நடைபெறும்.
எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் உதவிப் பணிப்பாளர் (விளையாட்டு அபிவிருத்தி) ஸ்ரீ லங்கா யுத் மத்திய நிலையம், மகரஹம என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும். (த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலிஸ்ரயர் குக் தொடர்ந்தும் தலைவராக செயற்பட வேண்டும்

இங்கிலாந்து அணியின் தலைவராக அலிஸ்ரயர் குக் தொடர்ந்தும் செயற்பட வேண்டுமென அணியின் சகலதுறை வீரர் ரவி போப்பரா தெரிவித்துள்ளார்.

ஆஷஸ் டெஸ்ட் தொடரையும், சர்வதேச ஒருநாள் தொடரையும் ஆஸ்திரேலிய அணியிடம் இழந்ததை அடுத்து, சர்வதேச ஒருநாள் போட்டிகளுக்கான அணியின் தலைவர் பதவியில் இருந்து தாம் விலகலாம் என அலிஸ்ரயர் குக் தெரிவித்திருந்தார்.

அலிஸ்ரயர் குக் சிறந்த வீரர் எனக் கூறியுள்ள ரவி போப்பரா, ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணியின் தலைவராக அவர் தொடர்ந்தும் செயற்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

ஆஷஸ் தொடரில் திறமையை வெளிப்படுத்தத் தவறிய அலிஸ்ரயர் குக் டெஸ்ட் தொடரில் 10 இன்னிங்ஸ்களில் 246 ஓட்டங்களையும், மூன்று சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 61 ஓட்டங்களையும் பெற்றிருந்தார். (த)

## காயத்தால் அவதிப்படும்
# இளம் புயல்

நியூஸிலாந்து அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளர் ஆடம் மில்னே, இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டிகளில் இருந்து விலகியுள்ளார்.

நியூஸிலாந்து சென்றுள்ள இந்திய அணி 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்று விளையாடி வருகிறது.

முதல் ஒருநாள் போட்டியில் 24 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா தோல்வி அடைந்தது.

இப்போட்டியில் பங்கேற்ற நியூஸிலாந்து வீரர் ஆடம் மில்னே, தொடையின் பின்பகுதியில் ஏற்பட்ட பிடிப்பு காரணமாக பாதியிலேயே விலகினார்.

எனவே மீதமுள்ள போட்டிகளில் இருந்து விலக்கப்பட்டுள்ளார், இவருக்கு பதிலாக பென்னட் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

153 கி.மீ வேகத்தில் பந்துவீசி மிரட்டக்கூடியவர் ஆடம் மில்னே என்பது குறிப்பிடத்தக்கது. (த)




# 2ஆம் இடத்தில் இந்தியா


சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள சர்வதேச டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில், இந்திய அணி இரண்டாம் இடத்தைத் தக்க வைத்துள்ளது.

131 தரநிலைப் புள்ளிகள் பெற்றுள்ள தென்னாபிரிக்க அணி முதலிடத்தில் உள்ளது. 117 புள்ளிகளுடன் இந்திய அணி 2ஆம் இடத்திலும், 111 புள்ளிகளுடன் ஆஸ்திரேலிய அணி மூன்றாமிடத்திலும் உள்ளன. இங்கிலாந்து 4ஆவது இடத்தில் (107 புள்ளி) உள்ளது.

சார்ஜாவில் நடைபெற்ற 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் இலங்கை அணியை பாகிஸ்தான் அணி வென்று, தொடரை 1-1 என சமன் செய்தது.

இதனால் அந்த அணி 2 தரநிலைப் புள்ளி களை இழந்து, 5ஆவது இடத்தில் நிலை பெற்றது. இலங்கை அணி 3 புள்ளிகளை பெற்றபோதும், தரநிலையில் 6ஆவது இடத்திலேயே உள்ளது. (த)

# வெளியேறினார் ஷரபோவா



ஆஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் போட்டியில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஆட்டத்தில் முன்னிலை வீராங்கனையான ரஷ்யாவின் மரியா ஷரபோவா அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறினார்.

நேற்று முன் தினம் முதல் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் செரீனா வில் லியம்ஸ் தோல்வியடைந்தார். இந்நிலையில் மரியா ஷரபோவா 4ஆவது சுற்றில் தோல்வியடைந்து ஆஸ்திரேலிய ஓபனில் இருந்து வெளியேறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற 4ஆவது சுற்று ஆட்டத்தில் ஷரபோவா, ஸ்லோவேகியா நாட்டின் டொமினிகா சிபுல்கோவாவை எதிர்கொண்டார். இதில் 3-6, 6-4,6-1 என்ற செற் கணக்கில் டொமினிகா வெற்றி பெற்றார்.

வலது தோள்பட்டையில் ஏற்பட்ட காயம் காரணமாக கடந்த சில மாதங்களாக போட்டிகளில் பங்கேற்காமல் இருந்த ஷரபோவா, அதில் இருந்து மீண்டு இப்போதுதான் களமிறங்கினார்.

எனினும் ஆஸ்திரேலிய ஓபன் அவருக்கு வெற்றிகரமானதாக அமையவில்லை. 2008 ஆம் ஆண்டில் ஷரபோவா ஆஸ்திரேலிய ஓபன் ரென்னிஸில் சம்பியன் பட்டம் வென்றார் என்பது நினைவுகூரத்தக்கது.

ஷரபோவாவை தோற்கடித்த டொமினிகா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார். அவர் காலிறுதியில் 11ஆம் நிலை வீராங்கனையான ருமேனியாவின் சிமோனாவை எதிர்கொள்கிறார். சிமோனா, தனது 4ஆவது சுற்றில் 8ஆம் நிலை வீராங்கனையான சேர்பியாவின் ஜெலினா ஜான் கோவிச்சை தோற்கடித்து காலிறுதிக்கு முன்னேறியுள்ளார். (த)

# எதிர்மறையான தந்திரோபாயங்கள் எமது தோல்விக்குக் காரணமல்ல



எதிர்மறையான தந்திரோபாயங்களே பாகிஸ்தான் அணிக்கெதிரான இறுதி டெஸ்ட் போட்டியில் தோல்வி அடையக் காரணம் என்பதை இலங்கை அணித் தலைவர் அஞ்ஜலோ மத்தியூஸ் நிராகரித்துள்ளார். துடுப்பாட்டவீரர்கள் இரண்டாம் இனிங்ஸில் சற்று எச்சரிக்கையாக இருந்திருக்க வேண்டும் என போட்டியின் பின்னர் அவர் குறிப்பிட்டுள்ளார். 100 ஓட்டங்களுக்கு இறுதி ஐந்து இலக்குகளையும் இலங்கை அணி பறிகொடுத்ததாக மத்தியூஸ் சுட்டிக்காட்டியுள்ளார். தொடரில் ஏற்கனவே முன்னிலை பெற்றிருந்ததால், ஓட்டங்களைப் பெறுவதையும், இலக்குகளை இழப்பதைத் தவிர்த்து, தற்காப்பு ஆட்டத்தையே வெளிப்படுத்தியிருக்க வேண்டும் என அவர் கூறியுள்ளார். போட்டியின் இறுதிநாள் சுழற்பந்துவீச்சாளர்களுக்கு சாதகமாக இருக் கவில்லை என குறிப்பிட்ட அஞ்ஜலோ மத்தியூஸ், அழுத்தத்துக்கு மத்தியில் பிரசன்ன ஜயவர்த்தன சிறப்பாக துடுப்பெடுத்தாடியதாக தெரிவித்துள்ளார். சார்ஜாவில் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் 5 இலக்குகளால் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி, தொடரை ஒன்றுக்கு ஒன்று என சமப்படுத்தியிருந்தது. (த)

# காலிறுதியில் நடால், பெடரர்


ஆஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் போட்டி யின் ஆடவர் ஒற்றையர் காலிறுதியில் விளையாட ஸ்பெயினின் ரபெல் நடால், சுவிட்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர் ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.

நேற்று முன் தினம் நடைபெற்ற 4ஆவது சுற்று ஆட்டத்தில் உலகின் முதல் நிலை வீரரான நடால், ஜப்பானின் நிஷி கோரியை எதிர்கொண்டார்.

3 மணி நேரம் 17 நிமிடங்கள் நீடித்த இந்த ஆட்டத்தில் 7-6(7/3), 7-5, 7-6(7/3) என்ற செற் கணக்கில் நடால் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

காலிறுதியில் பல்கேரியாவின் கிரிகோர் திமித்ரோவை நடால் எதிர்கொள்ள இருக்கிறார்.

மற்றொரு 4ஆவது சுற்று ஆட்டத்தில் பிரான்ஸின் வில்பிரட் ஜோங்காவை ரோஜர் பெடரர் எதிர்கொண்டார். பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 6-3, 7-5,6-4 என்ற நேர் செற்களில் ரோஜர் பெடரர் எளிதாக வென்று காலிறுதிக்குத் தகுதி பெற்றார். காலிறுதியில் பெடரர், அண்டி முரரேயை எதிர்கொள்ள இருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் இந்து, சென். பற்றிக்ஸ் 19 வயதுப் பிரிவில் இணைச் சம்பியன்

## குழு மோதலுடன் நிறைவுற்றது போட்டி

யாழ்ப்பாணம்,ஜன.22

பிரித்தானிய தமிழ்ப் பாடசாலைகள் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்திய பாடசாலை மட்ட 19 வயதுப் பிரிவு அணிகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி ஆகியன இரண்டும் இணைச் சம்பியன் ஆகின.

நேற்று மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது.

முதற் பாதி ஆட்டம் வரை இரண்டு அணிகளும் சமமாகப் போட்டியிட்டு கோல்கள் எவையும் பெறப்படாத நிலையில் இடைவேளை வழங்கப்பட்டது. இரண்டாம் பாதியாட்டத்தில் இரு அணியினரும் கோல்களைப் பெறுவதற்காக வீறு கொண்டு விளையாடினர். இதன் போது மானிப்பாய் இந்துக் கல்லூரி வீரர் ஒரு கோலை அடித்து போட்டியை விறுவிறுப்பான நிலைக்கு கொண்டு சென்றார்.

தாங்களும் சளைத்தவர்கள் இல்லை என நிரூபிக்க சென். பற்றிக்ஸ் அணி சார்பாக ஜெனட் ஒரு கோலை அடித்தார். இரண்டு அணிகளும் ஒவ்வொரு கோலுடன் சமபலத்துடன் மோதிக் கொண்டன. எனினும் மேலதிக கோல்களைப் பெற முடியாததால் ஆட்டம் சம நிலையில் முடிவுற்றது. பின்னர் சமநிலை தவிர்ப்பு உதைக்கான சந்தர்ப்பம் தீர்மானிக்கப்பட்ட போது மைதானத்தில் கூடியிருந்தவர்களிடையே குழப்ப நிலை உருவாகியது. அதனால் சமநிலை தவிர்ப்பை நடத்த முடியாது போட்டி ஏற்பாட்டாளர்கள் இரண்டு அணிகளையும் இணைச் சம்பியனாக அறிவித்தனர். மைதானத்தில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டனர். மைதானத்தில் குழு மோதல் உருவானதால் அதை தடுக்க முயன்ற பொலிஸாரும் தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவத்துடன் தொடர்புடையதாக ஒருவரை மானிப்பாய் பொலிஸார் கைது செய்தனர். இதேவேளை மூன்றாம் இடத்துக்காக நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாண மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மகாஜனக் கல்லூரி அணி மோதியது. இதில் மகாஜனக் கல்லூரி அணி 1:0 என்ற கணக்கில் வெற்றி பெற்று 3 ஆம் இடத்தை தனதாக்கியது.

(ஜ-23-86)




சர்வதேச ஆங்கில பரீட்சைகள்

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

IELTS (Duration: 40 hrs with free 4 mock exams)

- Latest training materials.
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
- Depend on individual needs, the student can access other English Modules FREELY.

விரிவுரைகள் Oxford University UK postgraduate ஆல் வழங்கப்படும்

IELTS பரீட்சை பதிவுகளை எந்தக்கிளையிலும் இலவசமாக மேற்கொள்ள முடியும்

Spoken English (Veta Fluency Diploma)

அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள்.
அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்.
அச்சடித்த பாடப்புத்தகங்கள்.
மல்ரிமீடியா ஊடான கற்பித்தல்.
நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

City & Guilds A1, A2, B1, B2
(ESOL) Diploma International English for Speakers of other Languages

சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம்
(சித்தியடையாவிட்டால் கட்டணம் மீளளிக்கப்படும்)

திருமணம் செய்து நிரந்தர வீசாவில் London செல்பவர்கள், உயர்கல்விக்கு UK செல்வோருக்கு பிரித்தானிய அரசால் கோரப்படும் ஆங்கில பரீட்சைகள் எமது நிறுவனத்திலே கற்று எமது நிறுவனத்திலேயே பரீட்சைக்கு இலகுவாக தோற்றமுடியும்.

DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403 | M.M.V வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel.:021-226 2470 | கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775 | கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Jet மோட்டேஸ் சந்தி Tel.:021-224 1970 |


# மரண அறிவித்தல்



## சின்னத்தம்பி நடராசா
(அச்சுக்கோப்பாளர்)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், தற்போது சுழிபுரம் மேற்கில் வசித்தவருமாகிய சின்னத்தம்பி நடராசா (அச்சுக் கோப்பாளர்) நேற்று (21.01.2014) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சிதம்பரம் தம்பதியரின் புதல்வரும், கொல்லங்கலட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி - தெய்வானப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், பாக்கியலஷ்மியின் அன்புக் கணவரும், இராஜலஷ்மி (நோர்வே), யோகநாதன் (Halotrust), செல்வநாதன் (பொறியியலாளர் - கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜ்மோகன் (நோர்வே), லிங் கேஸ்வரிதேவி (ஆசிரியர்- பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி - தற்போது இள வாலை திருக்குடும்ப கன்னியர் மடம்), சிவரூபி (வைத்திய கலாநிதி - களு போவில) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான வேலுப் பிள்ளை, பொன்னம்மா, செல்லம்மா, பூரணம், முருகையா, சுப்பிரமணியம் ஆகி யோரின் அன்புச் சகோதரரும், சர்மினி (நோர்வே), தர்ஷன் (நோர்வே), ஐங்கரன் (மாணவன் - விக்ரோறியாக் கல்லூரி), பவித்திரன், திரிநாயனி, ஈசானி ஆகி யோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2014) புதன்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது சுழிபுரம் மேற்கு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருவடிநிலை இந்துமயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

தகவல்: யோகநாதன் (மகன்)
077 968 2558

(43834)(12.6)


SAAMSON Language School

SPOKEN ENGLISH

அரச, தனியார் ஊழியர்கள், பல்கலை மாணவர்கள், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

3 மாதங்களில் எவராவது சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.

சனி, ஞாயிறு பிரிவு ஆரம்பம் 25.01.2014 சனிக்கிழமை

பிரிவு 1: 08.00-10.00 பிரிவு 2: 10.00-12.00 பிரிவு 3: 11.30-01.00

வார நாள் பிரிவுகள் ஆரம்பம் 27.01.2014 (திங்கள்,புதன்)
1. காலை 9.00-11.00 2. முற்பகல் 11.00-01.00

பல்லைவிரிவுரையாளர்களும் ஆசிரியர்களும் படித்து பயன்பெற்ற பாடநெறி.

SAAMSON 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்ப்பாணம். 077 021 4567

Learn French the French Way

af

பிரெஞ்சு மொழி கற்பிப்பதற்கு French அரசாங்கம் மற்றும் French Embassy ஆகியன அங்கிகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் Alliance Française de Jaffna (AF) மட்டுமே. திருமணம் மூலம் France செல்பவர்களுக்கும் France இல் French படிப்பதற்கு / தொழில் புரிவதற்கும் எமது Certificates மட்டுமே Embassy இல் கருத்திற்கொள்ளப்படுகிறது.

Gjpa tFg;Gfs; விரைவில் 021 222 8093

61, Kachcheri-Nallur Road, Jaffna
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)



கோப்பாயில் வீடு விற்பனைக்கு

அரசினர் வைத்தியசாலைக்கு அருகில் முன்று பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் வீடு விற்பகைக்கு உண்டு.

தொடர்பு:- 0779123826 (43710)

A/L பொருளியல்

MCQ BOOK- 4

விலை ரூபா 100

வே. கருணாகரன்

பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை

CHARTERED

புதிய பிரிவுகள் ஆரம்பம்

25 JAN 2014 (Sat) CLASSES FOR YOU

நேரம் காலை 8.30

மிகத்தரமான விரிவுரையாளர்களுடன் இணைந்து கொள்ளுங்கள்

SPECTRA SKILLS
No: 19, Stanley Road, Jaffna.
021 222 1422 | 021 222 1423

கருத்தரங்கு

மதுவரிப்பரிசோதகர்

மற்றும்
ஏனைய பரீட்சைகளுக்கான
★பொது அறிவு
★பொது உளச் சார்பு
ஆரம்பம்: புதன் (இன்று)
பி.ப. 2.00 மணி
வியாழன்: 10-4 மணிவரை
வெள்ளி- 1-4 மணிவரை
யாழ்ப்பாணக் கல்லூரி,
பட்டப்படிப்புகள் பிரிவு,
யாழ்நகர். 0754164564

விற்பனைக்கு

தரமான கொங்கிறீற் கல் (கருங்கல் சல்லியில் அறுக்கப்பட்ட) விற்பனைக்கு உண்டு.
விலை:37/= தங்கள் இடத்திற்கு விநியோகம் செய்யப்படும்.
தொடர்பு:078 615 5929, 021 205 7705
(43810)(4.6.3)

விசேட விமான கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| கொழும்பு—சென்னை | —18500 | RTN |
| கொழும்பு—திருச்சி | —22000 | RTN |
| கொழும்பு—மதுரை | —20600 | RTN |
| கொழும்பு—லண்டன் | —70000 | O/W |
| கொழும்பு—டோகா | —25200 | O/W |
| கொழும்பு—சிங்கபூர் | —31000 | RTN |
| கொழும்பு—மிலான் | —97000 | RTN |
| கொழும்பு—சுவிஸ் | —114000 | RTN |
| கொழும்பு—ஜேர்மன் | —96500 | RTN |
| கொழும்பு—பிரான்ஸ் | —91200 | RTN |
| கொழும்பு—இத்தாலி | —84500 | RTN |
| கொழும்பு—மலேசியா | —19999 | RTN |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்

Nation Popular Travels & Tours
#128,Brown Road, Jaffna
0214 920 920

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS

After O/L What Next?

Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு. O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது. வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

Young Learners for English (YLE) [வயதெல்லை : 7 - 12]
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்.

Diploma In English (2Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத் தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

A1 Exam-Sponsor Visa/ Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை.
- U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது.
- எமது கல்லூரியிலேயே மாதிரிப் பரீட்சைகள் நடைபெறும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை.
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது.

IELTS Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system
We gurantee minimum 6.0 band and above
Duration 2 1/2 Months

B1 Exam-Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

| Batch - 01 | Batch - 02 | Batch - 03 | Batch - 04 |
|---|---|---|---|
| 25.01.2014 | 27.01.2014 | 01.02.2014 | 03.02.2014 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch : NO. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel : 021 222 4550

Hotlines : 0777585913 0777222422 0714299935 0777730074

Vavuniya Branch : NO. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpuliyamkulam, Vavuniya. Tel : 024 324 5287

ஓம் நமசிவாய ஆன்மீக பவனி 24.01.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணி முதல்

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்

(C/11084)(7.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆகாயத்தில் உள்ள நட்சத்திரங்களைப் பார்த்து உனது கப்பலைச் செலுத்து. ஆனால் கீழே இருக்கும் மணலை மறந்து விடாதே.
-ஸ்பர்ஜியன்

புதன் பொய்கை A

உதயன் | ஜனவரி 22 2014 புதன்கிழமை | பக்கங்கள்: எட்டு

# ஆன்றோர் வாக்கும் அளவோடுதான்

ராஜராஜன்

எமக்குத் தீமை செய்பவர்களை நாம் தண்டிக்க விரும்பினால் அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமெனக் கூறினார். தெய்வப் புலவர் திருவள்ளுவர். இவ்வாறு நாம் செய்யும்போது தீமை செய்தவர்கள் மனம் திருந்தி விடுவார்களென்பது வள்ளுவரின் எண்ணக் கருவாக இருந்திருக்கலாம். வள்ளுவர் தாம் வாழ்ந்த காலத்தில் காணப்பட்ட மனிதர்களுக்கே இவ்வாறு அறிவுரை கூறுவதற்குத் தலைப்பட்டிருக்கின்றார். இன்றைய மனிதர்கள் மத்தியில் அவர் வாழ்ந்திருந்தால் அவர் கூற்று வேறு விதமாகவும் அமைந்திருக்கும்.

இயேசு கிறிஸ்துநாதர் கூட ஒருவன் உனது ஒரு கன்னத்தில் அடித்தால் அவனுக்கு மறு கன்னத்தைக் காட்டு என்று உபதேசித்தார். கொடிய சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னர் அவர் உதிர்த்த வார்த்தைகள் இவை.

ஆனால் வள்ளுவர், இயேசு ஆகியோர் வாழ்ந்த காலம் இன்றுள்ள காலத்துடன் ஒத்துப்போக முடியாது. இன்றைய உலகிலே எவ்வளவோ மாற்றங்கள்-மனிதர்களின் வாழ்க்கை முறையில் மட்டு மல்ல அவர்களின் மனநிலையிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதில் பாத கமான மாற்றங்களே அதிகம் என்பதுதான் வேதனையை ஏற்படுத்துகின்றது.

தமக்குத் தீமை செய்தவர் களைப் பழிவாங்க வேண்டும் என்ற வெறியில் அலையும் மனித கூட்டம் இன்று எம் மத்தியில் காணப்படுகின்றது. இவர்கள் மன்னிப்பு என்ற வார்த்தையை உச்சரிப்பவர் களையும் விட்டு வைக்க மாட்டார்கள். வள்ளுவரும் இயேசும் தற்போது இல்லாததால் தப்பித்துக் கொண்டார்கள்.

தனக்கு நன்மை புரிபவர்களையே வஞ்சிப்பதற்குத் தயங்காததொரு இழிந்த கூட்டத்தை இன்று காண்கின்றோம். முற்காலங்களில் கொடிய விலங்குகளை மனிதன் தனது எதிரிகளாக நோக்கினான். அந்த விலங்குகளே அவனது உயிருக்கு உலை வைப்பனவாகக் காணப்பட்டன. ஆனால் இன்று மனிதனே மனிதனுக்கு எதிரியாக மாறி விட்டான். மனிதர்களைப் பார்த்து மனிதர்களே அஞ்ச வேண்டியதொரு பயங்கரமான சூழ்நிலையில் நாம் வாழ்கின்றோம். மிக இளம்பராயத்தைச் சேர்ந்த சிலர் தமக்குள் குழுவொன்றை அமைத்து சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு வந்ததை அறிந்து இதயமே வெடித்து விடும் போன்று பலர் அவதிப்பட்டதை சமீப நாள்களாக நாம் கண்டோம். இரவில் எங்கோ தொலைவில் நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டுத் தூக்கம் கலைந்து நடுங்கும் தேகத்துடனும், பிதுங்கும் விழிகளுடனும் அச்சத்தில் உறைந்து கிடைக்கும் நிலைதான் இன்றுள்ளது. அந்த நாய்கள் புலியையும், சிங்கத்தையும், யானையையும் கண்டு குரைக்கவில்லை. அவ்வாறு இருந்திருந்தாலும் பரவாயில்லை. மனிதர்களாக இருக்கக் கூடாது என்று நினைக்குமளவுக்கு மனிதர்கள் கொடியவர்களாக மாறிவிட்டனர். கொடிய செயலைப் புரிபவர்களின் மனதிலும் கொடிய எண்ணங்களே வேரூன்றிக் காணப்படும். இவற்றை வேரறுப்பது என்பது முடியாத காரியம். இவர்கள் திருந்தி நல்லவர்களாக மாறுவார்கள் எனவும் எதிர்பார்க்க முடியாது.

மேலும் இன்று விசித்திரமான சில செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன. தமக்குத் தீமை செய்தவர்களை மன் னித்து அவர்களுடன் இணக்கத்துக்கு வருவதற்கு பாதிக்கப்பட்டவர்கள் முனையும்போது, பலவீனம் காரணமாகவே இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டதாகக் கருதும் தீமை செய்தவர்கள் மேன்மேலும் தமது இழிசெயலைத் தொடர்கின்றனர். இதேவேளை பதிலுக்குப் பின் பதில் என்ற வகையில் பதிலடி வழங்கும் போது அவர்கள் அடங்கி விடுகின்றனர். ஆகவே வள்ளுவர் கூறிய மருந்து தற்காலத்து மனிதர்களிடம் ஏற்பட்டுள்ள நோய்க்குப் பரிகாரம் ஆகாது என்பது தெளிவாகின்றது.

முன்பெல்லாம் அடிதடி, மோதல் சம்பவங்கள் ஏற்படுவதற்கு ஏதேனும் ஒரு காரணம் இருக்கும். ஆனால் காரணம் எதுவுமில்லாமலே இன்றுள்ளவர்கள் மோதிக் கொள்கின்றனர். இதையொரு மன நோய் என்று கூடக் கூறலாம். மற்றவர்களைக் காயப்படுத்து வதில் ஏற்படும் குரூரமான இன்பம் இன்று சிலருக்குத் தேவையாகவுள்ளது. இவர்களிடம் மனச்சாட்சியோ மன்னிக்கும் இயல்போ அறவே கிடையாது.

> **எமது பாதுகாப்பை நாமே தேடிக் கொள்ள வேண்டும். கிணற்றுள் வீழ்ந்த ஒருவன் சாவை எதிர் கோண்டு இருக்கும்போது அவனைக் காப்பாற்ற முயற்சி செய்யாது வெளியே நின்று ஆண்டவரிடம் முறையிடுவதில் பயனேதும் கிடைக்கப் போவதில்லை. கிணற்றினுள் இறங்கி வீழ்ந்தவனைக் காப்பாற்றுவதே உசிதமான செயலாகும்.**

கொடிய விலங்குகளை விடப்பயங்கரமான இத்தகையவர்களிடம் எப்போதுமே விழிப்பாகஇருக்கவேண்டிய கட்டாய நிலை இன்று தோன்றியுள்ளது.

முன்பு வாழ்ந்த மனிதர்கள் தமது குடும்பத்துக்குப் பயந்தார்கள் - சமூகத்துக்குப் பயந்தார்கள். நாம் ஏதாவது தவறு செய்து விட்டால் எமது குடும்பம் அல்லவா அவமானத்தை எதிர்கொள்ளும் என்ற எண்ணம் அவர்களிடத்தில் காணப்பட்டதால் தவறுகள் நிகழாதவாறு பார்த்துக் கொண்டார்கள். சில தவறுகள் அவர்களையும் அறியாது ஏற்படுவதுமுண்டு. ஆனால் விரைவிலேயே அதற்கான மாற்று வழிகளை அவர்கள் ஏற்படுத் துவதுடன் தவறு களால் ஏற்பட்ட பாதிப்புக்களை நிவர்த்தி செய்து விடுவார்கள். அவர்களிடம் மனிதத் துவம் நிறைந்து காணப்பட்டதால் இவ்வாறு நடந்து கொள்ள முடிந்தது. ஆனால் இன்று இதுவெல்லாம் சாத்தியப்படாத விடயங்களாக மாறியுள்ளன.

எமது சமுதாயம் ஏமாற்றுக்காரர்களால் நிறைந்து காணப்படுகின்றது. சாதாரண மனிதனில் இருந்து பெரிய பெரிய நிறுவனங்கள் வரை பொய் கூறுவதில் தேர்ந்து விளங்குவதை நாம் காண்கின்றோம்.

கடந்த பல நாள்களாக பால்மாவுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றமை அனைவருக்கும் தெரியும். விலை உயர்வுக்காகக் காத்திருக்கும் நிறுவனங்கள் பால்மாவைப் பதுக்கி வைத்துள்ளதாக அரசு வெட்கம் கெட்ட வகையில் அறிக்கை விடுகின்றது.


அந்த நிறுவனங்களைக் கட்டுப்படுத்துமளவுக்கு அரசுக்கு இயலாமை ஏற்பட்டுள்ளது. ஆனால் இதில் பாதிக்கப்பட்டு வருபவர்கள் பொது மக்கள் தான். அரசும் பால்மா நிறுவனங்களும் இணைந்து நாடகமாடுகின்றன. இவர்களை மன்னிப்பதற்கு மக்களுக்கு மனம் வருமா என்பதை வள்ளுவர்தான் கூற வேண்டும்.


தன்னைக் கொல்லவரும் பசுவைக் கொல்வதில் தவறில்லையென அகிம்சா மூர்த்தியான மகாத்மா காந்தியே கூறியுள்ளார். ஆகவே எமக்குத் தீமை செய்ய வருபவர்களை அழிக்க முற்படுவதில் தவறொன்றும் இல்லையென்பது தெளிவாகின்றது.

எமது பாதுகாப்பை நாமே தேடிக் கொள்ள வேண்டும். கிணற்றுள் வீழ்ந்த ஒருவன் சாவை எதிர் கோண்டு இருக்கும்போது அவனைக் காப்பாற்ற முயற்சி செய்யாது வெளியே நின்று ஆண்டவரிடம் முறையிடுவதில் பயனேதும் கிடைக்கப் போவதில்லை. கிணற்றினுள் இறங்கி வீழ்ந்தவனைக் காப்பாற்றுவதே உசிதமான செயலாகும்.

ஆகவே நாம் எம்மைச் சகல வேளையிலும் அகிம்சாமூர்த்திகளாகப் பாவனைசெய்து கொண்டிருக்காது தீமைகளை எதிர்ப்பதற்குத் துணிய வேண்டும். தீமை செய்பவர்கள் தமது தவறுகளை உணரும் வகையில் உரிய பாடத்தைப் புகட்ட வேண்டும். இதற்கு எமது பலத்தைப் பிரயோகிப்பதில் தவறு ஒன்றும் கிடையாது.

மன்னிக்கும் மனப்பான்மையை வளர்ப்போம். ஆனால் அதற்காக எம்மைப் பலவீனத்துக்குள் தள்ளி விடாது பார்த்துக்கொள்வோம். சான்றோர்களின் வார்த்தைகள் தேவைதான். ஆனால் அவையும் அளவோடுதான் என்பதை மறக்காதிருப்போம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்புப் பெண்ணாகக் காட்சி அளிக்கும் சிறுமி



தாய்லாந்து நாட்டின் தலைநகர் பாங்கொக்கில் மார்புப் பகுதிக்கு மேலே பெண்ணாகவும், கீழ் பகுதி பாம்பாகவும் தோற்றமளிக்கும் விசித்திர சிறுமியை காண நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் வரிசையில் காத்திருப்பது ஊடகங்களின் கவனத்தை அதிகமாக ஈர்த்துள்ளது.

மய் லி ஃபேபே என்ற 8 வயது சிறுமியே இவ்வாறு காணப்படுகிறார். அவர் பிறக்கும்போதே இந்தத் தோற்றத்தில் பிறந்ததாக அவரது பெற்றோர் கூறுகின்றனர்.

இதைப் போன்ற வினோதப் பிறவிகள் உலகில் தோன்றுவது மிக, மிக அரிது என்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.

இந்த முரண்பாடான உடல் அமைப்பை மருத்துவ குறியீட்டின்படி, செர் பெண் டொசிஸ் மெலியனார்கிஸ் அல்லது ஜிங் ஜிங் நோய் என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இயற்கைப் படைப்பின் இந்த முரண்பாட்டினை நிவர்த்திக்க இதுவரையில் எவ்வித சிகிச்சை முறையும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று தாய்லாந்து நாட்டின் மருத்துவ வல்லுநர் டாக்டர் பிங் லாவ் கூறினார்.

பாம்புப் பெண்ணான மய் லி ஃபேபே-வை தரிசிக்கவும், அவளது உடலைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொள்ளவும் இந்து, புத்த மதத்தினர், உள்ளூர் மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் நாள்தோறும் அதிகாலை முதல் நள்ளிரவு வரை நீண்ட வரிசையில் கால்கடுக்கக் காத்து நிற்கின்றனர்.

அவர்கள் வழங்கும் காணிக்கைப் பணத்தின் மூலம் அந்த பெண்ணின் குடும்ப வருமானமும், வாழ்க்கைத் தரமும் குறுகிய காலத்துக்குள்ளாகவே அபரிமிதமான வளர்ச்சியை அடைந்துள்ளது.

எனினும், அவர்களின் நிம்மதியும், தனிமையும் தொலைந்து போனதாக மய் லி ஃபேபே-வின் நெருங்கிய உறவினர் ஒருவர் பேட்டியளித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# புற்றுநோயைக் குணப்படுத்தும் 'துளசி எண்ணெய்'

"மரபணு மாற்றம் செய்யப்பட்ட துளசி எண்ணெய் தடவப் பட்ட இடத்தில் புற்றுநோய் பரப்பும் செல்கள் வளர்ச்சி நின்று போனது."



துளசி எண்ணெயில் புற்றுநோயைக் குணப்படுத்தும் ஆற்றல் உள்ளது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்தியாவில் மருத்துவ குணங்களைக் கொண்ட செடிகளில் ஒன்றாக துளசி இருந்து வருகிறது.

இந்தநிலையில் மரபணுமாற்றம் செய்யப்பட்ட துளசியில் அதன் மருத்துவ குணம் எப்படி இருக்கும் என்பது குறித்த ஆய்வை இந்திய-அமெரிக்க விஞ்ஞானிகள் இணைந்து மேற் கொண்டனர்.

இந்த ஆய்வில் கிடைத்த முடிவுகள் குறித்து வெஸ்டர்ன் கென்டகி பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் சந்தி காந்த் மாணி தெரிவித்ததாவது:-

மரபணு மாற்றம் செய்யப்பட்ட துளசியில் அதிகளவு மருத்துவக் குணம் உள்ளது. குறிப்பாக மார்பகப் புற்றுநோயைக் குணப்படுத்தும் ஆற்றல் மரபணு மாற்றம் செய்யப்பட்ட துளசியில் அதிகம் இருப்பது தெரிய வந்துள்ளது.


துளசியில் இருந்து கிடைக்கும் எண்ணெயில் அதிக மருத்துவ குணம் உள்ளது. அந்த எண்ணெயைப் புற்றுநோய் ஏற்படுத்தும் செல்கள் மீது தடவினோம்.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட துளசி எண்ணெய் தடவப்பட்ட இடத்தில் புற்றுநோய் பரப்பும் செல்களின் வளர்ச்சி நின்று போனது. எங்களின் இந்தப் பரிசோதனையின் மூலம் மரபணு மாற்றம் செய்யப்பட்ட துளசியின் மருத்துவ குணம் வெளிப்பட்டுள்ளது.

இதையடுத்து இந்த எண்ணெயைப் புற்று நோய் மருத்துவ சிகிச்சையில் மருந்தாக பயன்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம். கிழக்கத்திய நாடுகளில் இதுபோன்ற செடிகளை நேரடியாக மருத்துவப் பயன்பாட்டுக்கு மட்டும் என்றில்லாமல், நோய் தீர்க்கும் சத்துப் பொருள்களாகவும் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர் என்றார்.



# ஒரே தினத்தில் பிறந்த நாளை கொண்டாடும் சகோதரர்கள்



பொதுவாக ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் இருந்தால் அவர்களில் பிறந்த நாளை நினைவில் வைப்பது என்பது கடினமானது.

ஆனால் பிரிட்டனைச் சேர்ந்த பீற்றர்டன், எமிலி சக்றுஹாம் என்ற தம்பதிகளுக்கு அக்கவலையே இல்லை. ஏனென்றால் இவர்களுக்கு பிறந்த 4 குழந்தைகளுமே ஒரே மாதம், ஒரே திகதியில் தமது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றனர்.

இத்தம்பதிகளின் மூத்த மகனான சாம், மற்றும் இரண்டாவதாக பிறந்த இரட்டைப் பெண் குழந்தைகளான புரூக் மற்றும் நிகோலி ஆகியோர் ஜனவரி மாதம் 12ஆம் திகதியே தமது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றனர்.

இவர்களின் நான்காவது மகனான ரேயன் கடந்த 12ஆம் திகதி பிறந்துள்ளான். இவ்வாறு ஒரு தாய்க்கு பிறந்த 4 பிள்ளைகளும் ஒரே மாதத்து ஒரே நாளில் பிறந்த நாளைக் கொண்டாடுவது அபூர்வ நிகழ்வாகும்.

இந்தத் தம்பதிகளின் வாழ்க்கையில் இன்னுமொரு ஆச்சரியம் என்னவென்றால் இவர்கள் அனைவரும் ஒரே தினத்தில் பிறக்க வேண்டும் என்பதற்கு முன்கூட்டியே எந்தவொரு திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை என்பது தான்.


# நீரிழிவு நோயாளிகளின் சர்க்கரை மட்டத்தை அறிய சாதனம்

"கடும் வரவேற்பைப் பெற்ற கூகுள் கிளாஸ் தொழில்நுட்பத்தின் அடுத்த கட்டமாக இருக்கும் இந்த முயற்சியானது நீரிழிவு நோயாளிகளுக்கு நன்மை பயக்கவல்லது."

பல்வேறு தொழில்நுட்பப் புரட்சிகளை ஏற்படுத்தி வரும் கூகுள் நிறுவனம் தற்போது மேலும் ஒரு புதிய முயற்சியில் காலடி வைத்துள்ளது.

கடும் வரவேற்பைப் பெற்ற கூகுள் கிளாஸ் தொழில்நுட்பத்தின் அடுத்த கட்டமாக இருக்கும் இந்த முயற்சியானது நீரிழிவு நோயாளிகளுக்கு நன்மை பயக்கவல்லதாக இருக்கின்றது.

நீரிழிவு நோயாளிகளின் சர்க்கரை மட்டத்தை துல்லியமாக அறிந்துகொள்வதற்காக உருவாக்கப்படும் சாதனமே இதுவாகும். இந்தச் சாதனம் 'ஸ்மார்ட் கண்டாக்ட் லென்ஸ்' என்று அழைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் மனம் ஆனந்தமாக இருக்க





நல்ல எண்ணங்களையும் நம்பிக்கைகளையும் ஏற்படுத்திக் கொண்டால் நிச்சயம் நாம் வாழும் வாழ்க்கையின் அர்த்தம் விளங்கும். லட்சியங்கள் நனவாகும். அதற்கு என்ன செய்யலாம்?.

நாம் ஆனந்தமாக இருக்க வேண்டுமா? வேண் டாமா? என்பதை முடிவு செய்வது எமது மனம்தான். 'நான் ஆனந்தமாக இருக்கிறேன்' என்று நீங்கள் கருதினால் ஆனந்தமாக இருக்கிறீர்கள். இல்லை என்றால் ஆனந்தம் உங்களிடம் 'மிஸ் (Miss or Mrs) ஆகிவிடும். அதனால், எப்போதும் ஆனந்தமாக இருங்கள்.

ஏக்கங்களும் எதிர்பார்ப்புகளும் இல்லாத மனிதர்களே கிடையாது. ஒவ்வொருவருக்குள்ளும் அவை புதைந்து கிடக்கின்றன. எதிர்பார்ப்புகள் எல்லாம் அடுத்தவர் களுக்கு நிறைவேறுகிறதே; எமக்கு மட்டும் ஏன் நிறைவேறவில்லை என்று எண்ணாதீர்கள். முடியும் என்றால் எல்லாமே முடியும். அதேநேரம் முடியாது என்றால் எதுவுமே முடியாமற் போய் விடும்.

பணம் எல்லோருக்கும் முக்கியம். அதற்காக பணமே வாழ்க்கை என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. அதுவும் தேவை என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டும். இருக்கும் பணமே திருப்தியெனக் கொண்டால் இல்லாத பணத்துக்காக ஏங்கும் மனநிலை வராது. வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும். அந்தப் பழமொழியை நீங்கள் தினமும் உங்கள் வீட்டில் செயற்படுத்தி வந்தால் உங்கள் இல்லம் ஆனந்தம் விளையாடும் வீடே.

ஜன்னலைத் திறந்து வைத்தால்தான் வீட்டிற்குள் தென்றல் காற்றின் இனிமையை உணர முடியும். அதுபோல், கவலைகள் சுமக்காத திறந்த மனதுதான் ஆனந்தமாக இருக்கும்.

ஆடை பாதி, ஆள் பாதி என்பார்கள். நீங்கள் எப்படிப்பட்டவர் என்பதை நீங்கள் அணியும் ஆடையும் தீர்மானிக்கிறது. நல்ல பழக்க வழக்கங்களோடு தூய்மையான-நேர்த்தியான ஆடையைத் தினமும் அணிவது, உங்கள் மீதான அடுத்தவர்களின் மரியாதையை அதிகப்படுத்தும்.

சிலர் தோல்வியைக் கண்டால் அப்படியே துவண்டுபோய் விடுகிறார்கள். தோல்வியும், வெற்றியும் நிரந்தரமல்ல. குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் சொந்தமும் அல்ல. சோர்ந்தாலும் எதிர்த்துப் போராடினால் நிச்சயம் வெற்றிக் கனியைப் பறிக்கலாம்.

வாழ்க்கை என்பது பூக்களின் இதழ்கள் பரப்பப்பட்ட மென்மையான பாதை அல்ல. அங்கே ரோஜாவும் இருக்கலாம், ரோஜாவின் முட்களும் இருக்கலாம். ரோஜா கிடைத்தால் சந்தோஷப்படலாம். அதன் முள் குத்தினால், அங்கேயே இருந்து விடக்கூடாது. அதைப் பிடுங்கி எறிந்துவிட்டு இலட்சியப் பாதையில்போய்க்கொண்டே இருக்கவேண்டும்.

காலையில் எழுந்ததும் குறைந்தது 1/4 மணி நேரமாவது தியானம் செய்யுங்கள். அது உங்கள் மனதை அமைதிப்படுத்தும். தெளிவான-உறுதியான முடிவுகள் எடுக்க உதவும்.

சுறுசுறுப்பாகச் செயற்பட வேண்டும் என்றால் உற்சாகம் ஊற்றாகப் பெருக்கெடுத்து வரவேண்டும். அதற்கு எம்மை சுற்றியுள்ள சூழ்நிலைகள் ஆரோக்கியமாக - மகிழ்ச்சிகரமாக இருக்க வேண்டும். அதற்கு வாரத்தில் ஒருநாளையாவது குடும்பத்தோடு செலவிடுங்கள். அன்று பூங்கா, பீச், தியேட்டர் என்று வெளியில் சென்று வருவது செலவை ஏற்படுத்தினாலும் அள்ள அள்ளக் குறையாத மகிழ்ச்சியைக் கொண்டு வரும்.

பிரச்சினை இல்லாத கணவன்-மனைவியே கிடையாது. எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், அவர்களே ஆற அமர்ந்து பேச ஆரம்பித்தால் அதற்கான தீர்வு எளிதில் கிடைக்கும். மூன்றாவது நபரிடம் உங்கள் பிரச்சினை பற்றி எக்காரணம் கொண்டு சொல்லி விடாதீர்கள். மீறிச் சொன்னால், குரங்கு கையில் கொடுத்த பூமாலை ஆகிவிடும் உங்கள் மண வாழ்க்கை.

குழந்தைகளை லட்சியத்தோடு வளர்த்து ஆளாக்க வேண்டும். பாலின வேறுபாடு காட்டக்கூடாது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதத் திறமை உண்டு. அதைக் கண்டறிந்து ஊக்கப்படுத்தினால் அவர்களும் பிற்காலத்தில் நட்சத்திரங்களாக ஜொலிப்பார்கள். உங்கள் நட்பு வட்டாரம் பயனுள்ளதாக இருக்கட்டும். உங்களை உற்சாகப்படுத்தும் நட் புக்கே முதலிடம் கொடுங்கள். சமாளித்து நடத்தல் என்பது அளவோடு தான் இருக்க வேண்டும். வாழ்க்கையே சமாளிப்பாக ஆகிவிட்டால் நீங்கள் வாழ்ந்ததற்கு அர்த்தமே இல்லாமற் போய் விடும்.

# மரபுசார்ந்த பார்வைக் குறைபாட்டை மரபணுச் சிகிச்சை மூலம் மாற்றலாம்

மரபுசார்ந்த அரிய வகை பார்வைக் குறைபாட்டை மரபணுச் சிகிச்சை மூலம் மாற்றமுடியும் என்ற வியத்தகு உண்மையை மருத்துவ அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

ஆறு தன்னார்வலர்களை ஆய்வு செய்து பார்த்ததன் மூலம் இந்த தகவல் கண்டறியப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விழித்திரையில் உள்ள பார்வைக் குறைபாட்டை ஏற்படுத்தும் மரபணுவை மாற்றுவதன் மூலம் இந்த நோய்க் குறைபாட்டை நீக்கமுடியும் என்று மருத்துவர்கள் தமது பரிசோதனைகளில் கண்டறிந்துள்ளனர்.

இந்தச் சிகிச்சை முறையை மேற்கொண்ட ஆறு மாதங்களுக்குப் பிறகு மங்கலான வெளிச்சத்தில் பார்வை மேம்பாடுகள் இருப்பதாக சில நோயாளிகள் தெரிவித்தனர்.

ஆறு பேரில் இருவரால் கண் மருத்துவரால் தொங்க விடப்பட்டுள்ள எழுத்து வரிகளையும் படிக்க முடிந்துள்ளது என்ற தகவலை லான்செட் மருத்துவ இதழ் தெரிவிக்கின்றது.

அவர்களில் ஒருவரால் இரவு வானத்தில் இருந்த நட்சத்திரங்களையும் பார்க்க முடிந்தது என்று குறிப்பிட்டுள்ளார். மரபணு சிகிச்சை காலவரையின்றி நீடிக்குமா என்பதை இப்போதே உறுதி செய்ய முடியாது என்றும் இந்தப் பணியில் ஈடுபட்ட ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் நுப்பீல்டு கண் ஆய்வுக்கூடத்தின் ராபர்ட் மக்லெரன் எச்சரிக்கின்றார்.

நோயாளிகள் தொடர்ந்து மருத்துவக் கண்காணிப்பில் இருக்கும்வரை பார்வை மேம்பாடுகள் பராமரிக்கப்படக் கூடும் என்றும், அதற்கு ஒரு நோயாளிக்கு இரண்டு ஆண்டுகள் பிடிக்கும் என்றும் அவர் குறிப்பிடுகின்றார். 50 ஆயிரம் பேரில் ஒருவருக்குத் தோன்றும் இந்தக் குறைபாடு ஆண்களைத் தாக்குகின்றது. அதிலும் குறிப்பாக இளவயதினரே இதில் பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றனர். மெதுவாகத் தீவிரமடையும் என்பதால் அவர்களின் மீது மருத்துவரின் அதிக கண்காணிப்பும் தேவைப்படக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



நோயாளிகள் தொடர்ந்து மருத்துவக் கண்காணிப்பில் இருக்கும்வரை பார்வை மேம்பாடுகள் பராமரிக்கப்படக் கூடும் என்றும் அதற்கு ஒரு நோயாளிக்கு இரண்டு ஆண்டுகள் பிடிக்கும் என்றும் அவர் குறிப்பிடுகின்றார். 50 ஆயிரம் பேரில் ஒருவருக்குத் தோன்றும் இந்தக் குறைபாடு ஆண்களைத் தாக்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறவைகளின் இடப்பெயர்ச்சி வியப்பூட்டும் தகவல்கள் சில


மது


வரலாற்றின் தொடக்க காலத்திலிருந்தே பறவைகளின் இடப்பெயர்ச்சி மனிதர்களுக்கு வியப்பையே அளித்து வந்திருக்கிறது - இந்த இடப்பெயர்ச்சி குறித்து விவிலியமும் (the Bible) பேசுகிறது. இருப்பினும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து இன்றுவரை இதற்கான துல்லியமான மிகச்சரியான விடை கிடைக்கவில்லை. பறவைகளின் இடப்பெயர்ச்சி என்பது, அவை இலையுதிர் காலத்தில் (autumn) தெற்குத் திசையிலும், இளவேனிற் காலத்தில் (spring) வடக்கு நோக்கியும் செல்வதைக் குறிப்பதோடு, தாழ்வான பகுதியிலிருந்து உயர்வான மேட்டுப் பகுதிக்குப் போவதையும், நாட்டின் உட்பகுதியிலிருந்து கடற்கரை நோக்கிச் செல்வதையும் கூடக்குறிக்கும்.

குளிர் காலத்தின் குளிரைத் தாங்கமுடியாத பறவைகள் வெப்பச் சூழலுக்குச் (warmer climates) செல்வதை நாம் அறிவோம். மேலும் அந்தப்பறவைகளுக்கு உணவாகும் பூச்சிகள் அல்லது சின்னஞ்சிறு இரைகள் ஆகியன குளிர் காலத்தில் கிடைப்பதில்லை என்பதும் அவற்றின் இடப் பெயர்ச்சியை ஊக்குவிக்கிறது. காரணம் எதுவாக இருப்பினும் நீண்ட பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதை எப்படிப் பறவைகள் அறிகின்றன? பகல் பொழுதின் குறைவு, பறவைகளுக்கு எச்சரிக்கை

**பறவைகளுக்கு உணவாகும் பூச்சிகள் அல்லது சின்னஞ்சிறு இரைகள் ஆகியன குளிர் காலத்தில் கிடைப்பதில்லை என்பதும் அவற்றின் இடப் பெயர்ச்சியை ஊக்குவிக்கிறது.**

மணியாக அமைந்து அவை தம் இடப் பெயர்வை மேற்கொள்ளவேண்டும் என்பதை உணர் வதாக நம்பப்படுகிறது. எனவே பகற்பொழுதின் கால அளவும்





உணவு கிடைக்காத நிலைமையும் வெப் பப் பகுதியை நோக்கிப் பறவைகள் இடம்பெயரக் காரணமாக இருப்பதாக அறியப்படுகிறது. இவை தவிர்த்து மேலும் பல காரணங்கள் இருக்கக்கூடும். இன்னும் பல காரணங் களை நாம் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. ஆயினும் பறவைகளின் இடப் பெயர்ச்சிக்கு மேற்கூறிய காரணங்கள் முக்கிய மானவை என்பதில் ஐயமில்லை. கரிபாவ் (caribou) என்னும் மானினம் மிகக் குறைவான எண்ணிக்கையிலேயே ஒன்றிணைந்து வாழ்பவை. இருப் பினும் அவை உணவு தேடி இடம் பெயர வேண்டிய சூழ்நிலை வந்தவுடன் நூற்றுக் கணக்கில் ஒன்றிணைந்து இடம் பெயர்கின்றன.

**பறவைகள் இடம் பெயரும் தூரம்**

பறவைகளின் இடப்பெயர்ச்சி பற்றி நாம் அறிவோம். அடுத்தது தமக்குத் தேவையான சிறந்த சூழலை அல்லது நிலைமையைக் கண்டறிய பறவைகள் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும் என்பதாகும்.

ஓர் ஆண்டில் 22 ஆயிரம் மைல் வரை பறக்கக் கூடிய வடதுருவப் பகுதியில் உள்ள டெர்ன் பறவைகள் (arctic terns) மிக அதிக தூரம் பயணம் செய்யும் பறவை இனமாகும். இப்பறவைகள் வட துருவத்திலிருந்து தென் துருவப் பகுதிக்கு (the Antarctic region) 20 வாரங்களில் நாளொன்றுக்கு 150 மைல் வேகத்தில் பறந்து செல்லக் கூடியவை ஆகும்.

பெரும்பாலான தரை வாழ் பறவைகள் தமது இடப் பெயர்வின் போது குறைந்த அளவே பயணம் செய்கின்றன. ஆனால் அமெரிக்க கோல்டன் ப்ளோவர் (American golden plover) என்னும் பறவை இனம், தங்கு தடையின்றி நீண்ட தூரம் பயணம் செய்யும். இந்தப்பறவை சுமார் இரண்டாயிரத்து 400 மைல்கள் தடையின்றி பயணம் செய்யக் கூடியதாகும். ஒவ்வொரு வருடமும் இடப் பெயர்வின்போது பறவைகள் எப்போது பயணத்தை ஆரம்பித்து எப்போது முடிக்கின்றன என்பது குறித்து எம்மால் ஏதும் கூற இயலவில்லை.

# தவறு செய்யும் போது வசை மொழிகளை மனம் ஏற்க மறுப்பதேன்?


## விஞ்ஞானிகளின் விளக்கம்

எம்மில் பெரும்பான்மையான மக்கள் மகத்தான காரியங்களைச் செய்யும் போது பிறரின் பாராட்டுக்களை ஏற்றுக் கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியுடன் நூற்றுக்கு நூறு விதம் உடன் படுவோம்.

ஆனால் எம்மில் வெகு சிலரே சில வேளைகளில் நாம் செய்யும் காரியங்களில் தவறு நிகழ்ந்து விட்டால் பிறரின் வசை மொழிகள் ஏற்றுக்கொள்வது வழக்கம். இந்த வேறுபாடு ஏன்? இதற்கான காரணத்தை லண்டனைச் சேர்ந்த மூளை மற்றும் நரம்பியல் விஞ்ஞானிகள் சிலர் சமீபத்தில் விளக்கியுள்ளனர்.

அதாவது நாம் செய்யும் செயல்கள் எதிர் மறையான முடிவைத் தரும் போது நாம் அது குறித்து மிகக் குறைந்த கவனத்தையே செலுத்துவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. விரிவாகச் சொன்னால் மோசமான விளைவை ஏற்படுத்திய செயல்கள் குறித்த முடிவுகளை எடுப்பதில் சாதாரண செயல்களை விட எமது மூளை மிக அதிக நேரத்தை எடுத்துக் கொள்வதால் நம்மில் பெரும் பான்மையினர் செயல்களுக்[illegible] பொறுப்பை உடனே ஏற்றுக்கொள்ள இணங்குவதில்லை. இதனால் தான் அனைத்துச் செயல்களையும் நேர்மறையாக எடுத்துக் கொள்ளும் தன்மை எம்மில் மிகச் சிலருக்கே வாய்த் திருக்கின்றது.

இதனை விஞ்ஞான ரீதியாக நிரூபிப்பதற்கு தேர்ந்தெடுக்கப் பட்ட சிலரிடம் ஆராய்ச்சி மேற்கொள்ளப் பட்டது. இதன்போது அவர்கள் ஒரு பட்டனை அழுத் துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதுடன் உடனடியாக ஒரு ஒலி அலை ஓடவிடப்பட்டது. பின்னர் அவர்கள் பட்டனை அழுத்துவதற்கும் ஒலி அலையைக் கேட்பதற்கும் இடையே எடுத்த நேரத்தைக் கணக்கிடுமாறு வேண் டப்பட்டது. இதன்போது ஒவ்வொரு தனிநபருக்கும் ஏற்ப ஆராய்ச்சியாளர்கள் பெற்ற முடிவு வேறுபட்டது. மேலும் இதன் மூலம் அவர்களின் செயல் நேர்மறையை விட எதிர் மறையாக இருக்கும் போது குறித்த நபர் களின் மூளை அதை உணர்ந்து கொள்ள அதிக நேரம் எடுத்துக் கொண்டமை புலப் பட்டது. இந்த ஆராய்ச்சி முடிவை லண்டனில் உள்ள கானிட்டிவ் நரம்பியல் விஞ்ஞான [illegible] பேராசிரியர் பட்ரிக் ஹக்கார்ட் [illegible]ள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அண்டப் புளுகன்

பிச்சைக்காரன் ஒருவன் அரசசபைக்கு வந்து, எல்லோர் முன்னிலையிலும் தனது ஒரு பாத்திரத்தைக் காட்டி, அரசே, ஆறு மாதத்துக்கு முன்பு உங்களிடம் வந்து நான் ஊருக்குப் போய்விட்டு வரும் வரை இதனை வைத்திருங்கள் என்று சொல்லி இந்தப் பாத்திரம் நிறையத் தங்கக் காசுகள் கொடுத்து விட்டுச் சென்றேன் என்றான்.

ஒரு ராஜா, இந்த நாட்டில் யார் மிகப் பெரிய அண்டப் புளுகைச் சொல்கிறார்களோ.. அவர்களுக்கு ஒரு தங்க மாம்பழம் பரிசாக அளிக்கப்படும் என்று ஒரு போட்டி அறிவித்தார். பின்னர் மந்திரியிடம், நான் வெளியிட்டதே ஒரு பொய்யான அறிவிப்புத்தான். யாருக்கும் தங்க மாம்பழம் தரப்போவ தில்லை என்று ரகசியமாகச் சொன்னார். ராஜாவின் அறிவிப்பைக் கேட்டு, தினமும் நூறுபேர் வந்து பொய் சொன்னார்கள். ஆனால், எதையும் அண்டப்புளுகாக ராஜா ஏற்றுக் கொள்ளவில்லை.

சலித்துப்போய், பொய் சொல்வதற்கு ஆள்கள் வருவதே நின்றுபோய் விட்டது.

திடீரென்று ஒருநாள், பிச்சைக்காரன் ஒருவன் அரசவைக்கு வந்து எல்லோர் முன்னிலையிலும் தனது ஒரு பாத்திரத்தைக் காட்டி அரசே, ஆறு மாதத்துக்கு முன்பு உங்களிடம் வந்து நான் ஊருக்குப் போய்விட்டு வரும் வரை இதனை வைத்திருங்கள் என்று சொல்லி இந்தப் பாத்திரம் நிறையத் தங்கக் காசுகள் கொடுத்துவிட்டுச் சென்றேன். அதை இப்போது திரும்பக் கொடுங்கள் என்று கேட்டான்.

ராஜாவுக்குக் கடுமையான கோபம் வந்துவிட்டது. டேய் அயோக்கியா, அண்டப் புளுகா, நீ எப்போ எனக்குத் தங்கக் காசு கொடுத்தாய் என்று கத்தத் தொடங்கினார்.

பிச்சைக்காரன் அமைதியாக, நான் அண்டப் புளுகன் என் பதை ஏற்றுக் கொண்டு விட்டீர்களே, இப்போது போட்டிக்கான தங்க மாம்பழத்தைக் கொடுங்கள் என்று கேட்டான்.

ராஜா அதிர்ந்துவிட்டார். இல்லை.. இல்லை... நீ சொன்னது அண்டப் புளுகு இல்லை என்று அவசரமாக மறுத்தார்.

உடனே பிச்சைக்காரன், அப்படியென்றால் இந்தப் பாத்திரம் நிறையத் தங்கக் காசுகள் கொடுங்கள் என்று கேட்டான்.

அரசன் வேறு வழியில்லாமல் தங்கக் காசுகளைவிட தங்க மாம்பழமே பரவாயில்லை என்று நினைத்து பிச்சைக்கார னுக்குத் தங்க மாம்பழத்தைக் கொடுத்து அனுப்பினார்.




மழைக்கு நல்ல குடையதாம் -
வெய்யில்
மறைக்க ஏற்ற நிழலுமாம்
உழைக்கு(ம்) மக்கள் யாவர்க்கும்
உதவும் உற்ற துணைவனாம்..

தங்கைக்கு 'சுவிச்சு'க் குடை
தம்பிக்கும் அது வேணும்
அண்ணாவின் பெரிய குடை
அக்காவுக்கும் அது காணும்..

சாமியின் சரிகைக் குடை
சந்நிதிக்கே அலங்காரம்
மாமியின் மடிப்புக்குடை - அதனால்
மச்சாளுக்கு அகங்காரம்..

அப்பு சொன்ன தாழங் குடை
அழகான வட்டமாம்
இப்போ எங்கே போச்சுது
இவை அதற்கு மட்டமாம்..

வண்ண வண்ணக் குடை பாரீர்
வடிவு காண வாரீர்
எண்ண எண்ண இனிக்கும்
எத்தனை விதம் காணீர் !


ஜெ.தமிழின்பன், தரம் 4
யா/இடைக்காடு மகா வித்தியாலயம்.


# மனிதனை மதிக்க வேண்டும்

பிரபல ரஷ்ய எழுத்தாளரான டால்ஸ்டாய் தன்னிடம் உதவி நாடி வருபவர் யாராக இருந்தாலும் தன்னால் இயன்ற அளவு உதவுவார். ஒரு நாள் டால்ஸ்டாய் ஏதோ வேலையாகச் சென்று கொண்டிருந்தார். அப்போது கந்தல் ஆடையுடன் சுருக்கமடைந்த உடலுடன் வயிறு உலர்ந்து கண் குழியான நிலையில் ஒருவன் டால்ஸ்டாயை நோக்கி "ஐயா! நான் சாப்பிட்டு இரண்டு நாள்கள் ஆகின்றன. பசியால் செத்துப்போய் விடுவேன் போல இருக்கிறது. தயவு செய்து உதவுங்கள்" என்று கேட்டுக் கொண்டான்.

டால்ஸ்டாய் தமது சட்டைப் பையைத் துழாவிப் பார்த்தார். பணம் எதுவும் இல்லை. அந்த வறியவனை அன்போடு நோக்கி "சகோதரா ! துரதிர்ஷ்டவசமாக என்னிடம் இப்போது பணம் இல்லை. தயவு செய்து என் வீடு வரை வருகிறாயா? ஏதாவது சாப்பிட ஏற்பாடு செய்ய முடியுமா என்று பார்க்கிறேன்" என்றார். அவர் பேச்சைக் கேட்ட பிச்சைக்காரன் தழதழத்த குரலில் "ஐயா, இதுவரை எனக்கு அளிக்காத பெரும் பிச்சையைத் தாங்கள் அளித்திருக்கிறீர்கள். என்னையும் மனிதனாகப் பாவித்து சகோதரனே! என அழைத்தீர்களே; இதைவிட மனிதாபிமான கொடை வேறு கிடையாது. உங்கள் பரிவுச் சொல்லே எனக்குப் போதும்" என டால்ஸ்டாயை நன்றியுடன் கை கூப்பினான். டால்ஸ்டாய் விடாப்பிடியாகப் பிச்சைக்காரனைத் தன்னுடன் அழைத்துச் சென்று வீட்டில் உணவளித்தார்.

த.கேமிஷா தரம், 7 'ஏ'
ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.





*முடியில் முஸ்லிம்*
*நெற்றியில் திருநீறு*
*உடையோ பௌத்தம்*
*கைகளில் பரிசுத்த ஆகமம்*

*விநோதமான இவ் உலகில்*
*விநோத உடைப்போட்டி*
*வினவினேன் நீ யார்?*
*விநோதமான பதில்*

சர்வமதம் கோபி

## உலகின் பிரபலமானவர்கள்



*'குடிசை வாசிகளின் புனிதர்' என அழைக்கப்படுபவர்?
அன்னை தெரேஸா



*'சிறுகதை மன்னன்' என அழைக்கப் பட்டவர்? புதுமைப் பித்தன்




*'கறுப்பு முத்து' என அழைக்கப்பட்டவர்?
பீலே(முன்னாள் கால்பந்தாட்ட வீரர்)



*'இரும்பு மனிதன்' என அழைக் கப்பட்டவர்? பிஸ்மார்ச்



*'இனிய தோழர்' என அழைக்கப்பட்டவர்?
லெனின்(ரஷ்யா)

த.தர்ஷிகா
யாழ்.நல்லூர் சென்.பெனடிக்ற் வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்துக் கதைகளைத் திரைப்படம் மூலம் வெளிக்கொணர்ந்து பிரசித்தி பெற்றவர்

கிராமத்துக் கதைகளைத் திரைப்படம் மூலம் வெளிக்கொணர்ந்து பிரசித்தி பெற்ற இயக்குநர் இமயம் பாரதிராஜா. படங்களை இயக்குவதோடு நின்று விடாமல் தானே சினிமாத் தயாரிப்பாளரா கவும் நடிகராகவும் உருவெடுத்தார். தமிழ், தெலுங்கு, ஹிந்தி என மூன்று மொழிகளில் திரைப்படங்களை இயக்கியுள்ளார். தமிழ் நாடு தேனி மாவட்டத்தில் அல்லி நகரில் 17.7.1941 ஆம் ஆண்டு பிறந்தார். இவரது இயற்பெயர் சின்னசாமி.


பதினாறு வயதினிலே, சிவப்பு ரோஜாக்கள், கிழக்கே போகும் ரயில், அலைகள் ஓய்வதில்லை, மண்வாசனை, முதல் மரியாதை, கடலோரக் கவிதைகள், வேதம் புதிது, கிழக்குச் சீமையிலே, கருத்தம்மா, கடல்பூக்கள் போன்ற இவரது திரைப்படங்கள் தமிழ் திரையுலகில் அற்புதப் படைப்புகளாக அடையாளப்படுத்தப்பட்டன.

கிராமம் மற்றும் கிராமத்து மண் சார்ந்த மனிதர்களின் வாழ்வை உயிரோட்டமாக அதே வடிவில் காட்சிப்படுத்தி முத்திரை பதித்தவர். திரைப்படத்துறையில் இவர் ஆற்றிய பங் களிப்புக்காக இந்தியாவின் உயரிய விருதான பத்ம ஸ்ரீ விருது இவருக்கு வழங்கப்பட்டது. ஆறு முறை தேசிய விருதுகள், மூன்று முறை தமிழ் நாடு மாநில விருதுகள் மற்றும் ஃபிலிம்ஃபேர் விருது, கலைமாமணி விருது என மேலும் பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

16 வயதினிலே திரைப்படத்தின் மூலம் திரை யுலகுக்கு அறிமுகமாகி சுமார் 30 இற்கும் மேற்பட்ட தரமான படைப்புகளை வழங்கித் தமிழ்த் திரையுலகின் திருப்புமுனை என்று வர்ணிக்கப்பட் டார். கல்வியை தனது சொந்த ஊரிலே மேற் கொண்டார். படிக்கும் போதே இலக்கியங்கள் படிப்பதில் அதிக ஆர்வம் காட்டினார். பின்பு நாடகம் எழுதுவதிலும், நடிப்பதிலும், இயக்குவதிலும் தன்னுடைய கவனத்தைச் செலுத்திய இவர் ஊர் சிரிக்கிறது, சும்மா ஒரு கதை போன்ற நாடகக் கதைகளை எழுதி அதை அவ்வப்போது திருவிழாக் காலங்களில் மேடைகளில் அரங்கேற்றியுள்ளார். சுகாதார ஆய்வாளராக சிறிது காலம் பணிபுரிந்து வந்த இவர், பின்னர் சினிமாத் துறையின் மீது ஏற்பட்ட ஆர்வத்தால் சென்னைக்குச் சென்றார். சென்னையில் மேடை நாடகம், வானொலி நிகழ்வுகள், பெட்ரோல் நிலைய வேலை எனப் பணி புரிந்து கொண்டே சினிமாத்துறையில் நுழைய முயற்சிகளை மேற்கொண்டார். இயக் குநர் பீ புல்லையாவிடம் உதவி இயக்குநராகச் சேர்ந்து சினிமாத் துறையில் முதல் காலடி எடுத்து வைத்தார். பிரபல கன்னட இயக்குநர் புட் டண்ணா கனகனிடம் சேர்ந்து சினிமா நுணுக் கங்களைக் கற்றுத் தேர்ந்தார். குறுகிய காலத் திலேயே தனது முதல் படமான 16 வயதினிலே படத்தை 1977 ஆம் ஆண்டு இயக்கினார்.

தன்னுடைய ஆளுமையை முதல் படத்திலேயே வெளிப்படுத்திய பாரதிராஜா தொடர்ந்து வெற்றிப் படங்களைக் கொடுத்தார். பதினாறு வயதினிலே (1977), சிவப்பு ரோஜாக்கள் (1978), கிழக்கே போகும் ரயில் (1978), நிறம் மாறா பூக்கள் (1979), நிழல்கள் (1990), அலைகள் ஓய்வதில்லை (1981), புதுமைப் பெண் (1983), மண் வாசனை (1983), ஒரு கைதியின் டயரி (1984), முதல் மரியாதை (1985), கடலோரக் கவிதைகள் (1986), வேதம் புதிது (1987), ஆராதனா (1987), கொடி பறக்குது (1989), புது நெல்லு புது நாற்று (1991), நாடோடித் தென்றல் (1992), கிழக்குச் சீமையிலே (1993), கருத்தம்மா (1995) போன்ற திரைப்படங்கள் இவரது புகழ் பெற்ற திரைப் படங்களாகும்.

**16 வயதினிலே திரைப்படத்தின் திரையுலகுக்கு அறிமுகமாகி சுமார் 30 இற்கும் மேற்பட்ட தரமான படைப்புகளை வழங்கித் தமிழ்த் திரையுலகின் திருப்புமுனை என்று வர்ணிக்கப்பட்டார். கல்வியை தனது சொந்த ஊரிலே மேற் கொண்டார். படிக்கும் போதே இலக்கியங்கள் படிப்பதில் அதிக ஆர்வம் காட்டினார்.**



2004 இல் இந்திய அரசின் பத்மஸ்ரீ விருதுக்குத் தகுதி பெற்றார். 1982 இல் சீதா கொகா சிகே, 1986 இல் முதல் மரியாதை, 1988 இல் வேதம் புதிது, 1995 இல் கருத்தம்மா, 1996 இல் அந்தி மந்தானா, 2001 இல் கடல் பூக்கள் போன்ற திரைப்படங்களுக்காக தேசிய விருதைப் பெற்றார். 1978 கிழக்கே போகும் ரயில் திரைப்படத்துக்கான ஃபிலிம் பேர் விருது. 1977 இல் 16 வயதினிலே, 1979 இல் புதிய வார்ப்புகள், 1981 இல் அலைகள் ஓய்வதில்லை, 2003 இல் ஈரநிலம் போன்ற திரைப்படங்களுக்கு தமிழக அரசின் மாநில விருது, தமிழக அரசின் கலைமாமணி விருது, 1981 சீதா கொகா சிலுகா திரைப்படத்துக்கான ஆந்திர பிரதேச அரசிடம் இருந்து நந்தி விருது போன்ற விருதுகளைப் பெற்றார்.




தமிழ், தெலுங்கு, ஹிந்தி என மூன்று மொழி களிலும் சுமார் 40 இற்கும் மேற்பட்ட திரைப் படங்களை இயக்கிய பாரதிராஜா தமிழ்த் திரையுலகில் தோன்றிய இயக்குநர்களில் தனக்கெனத் தனிப் பாணியில் கதை வேர்களை வெளிச்சமிட்டுக் காட்டிய கலைஞன். தன்னு டைய அற்புதப் படைப்புகளினால் தமிழ்த் திரைப்படத் துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தினார்.

குற்றப் பரம்பரை, அப்பனும் ஆத்தாளும் என இரு படங்களின் திரைக் கதை அமைக்கும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். மத்திய அரசு இலங்கைத் தமிழர்களின் நலனுக்கு எதுவும் செய்யவில்லை எனக் குற்றம் சுமத்தி பத்மஸ்ரீ விருதை வாங்க மறுத்தார்.

1986 இல் தாஷ்கண்ட் பட விழாவில் முதல் மரியாதை திரைப்படத்தைத் திரையிட்டார்கள். தனது அம்மாவின் பெயரில் எடுத்த கருத்தம்மா படத்துக்கு தேசிய விருது கிடைத்த போது தன் தாயாரையே விருது வாங்கச் செய்தார்.

பார்வையாளன்.

# எழுந்தமான வைத்தியம் நோயைத் தீர்க்குமா?

மருத்துவம் சீரின்மையால் நோய்களை இனம்காண முடியாமலும், இனம் காணப்பட்ட நோயைக் குணப்படுத்த முடியாமலும் இருக்கிற படியால் தான் எமது மண்ணில் வாழ்பவர்களின் ஆயுட் காலம் குறைவடைந்து செல்கிறது. நோய் வாய்ப்பட்டவர்கள் தமது நோயை முழுமையாகக் குணப்படுத்துவதற்கு அக்கறை காட்டுவதில்லை. அதே போல் மருத்துவர்களும் நோயாளர்களின் நோயை முழுமையாகக் குணப்படுத்த முடியாமல் இருக்கின்றனர். வசதி வாய்ப்புப் படைத்தவர்கள் தனியார் மருத்துவமனைகளில் அதாவது, கொழும்புக்கோ அல்லது இந்தியா வுக்கோ சென்று தமது நோய்களை இலகுவாக குணப்படுத்திக்கொண்டு வருகின்றனர்.

வசதி வாய்ப்பு இல்லாதவர்கள் தமது ஊரிலேயே உள்ள அரச மருத்துவமனை ஒன்றில் தமது நோய்களைக் குணப்படுத்த முயற்சி செய்து வருகின்றனர். பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் வாழும் மக்களே இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். நோயாளர்கள் தமது நோயை முழுமையாகக் குணப்படுத்துவதில் அசண்டையீனமாக இருப்பதற்கு மருத்துவர் களும் காரணமாக அமைகின்றனர்.

தனியார் மருத்துவமனைக்குச் செல்லும் நோயாளர்கள் தமது நோய் குணமாகின்றதோ, இல்லையோ பணத்துடன்தான் செல்ல வேண் டும். இதனால் பண வசதி இல்லாதவர்கள் அரச மருத்துவமனைக்குத் தான் செல்ல வேண்டும்.

நோயாளர்களை முழுமையாகப் பரிசோத னைக்கு உட்படுத்தாமல் தாங்களே முடிவு செய்து விட்டு குளிசையை மட்டும் கொடுத்து அவர்களை வழியனுப்பி வைக்கிறார்கள். இதனால் நோய் வளரக் கூடிய சூழ்நிலையே ஏற்படுகிறது. வளர்ந்த நாடுகளைப் பார்த்தாலும் சரி, அல்லது வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளைப் பார்த்தாலும் சரி, மருத்துவத்தில் கொடி கட்டிப்பறக்கிறார்கள். அந்த நாடுகளில் நோயாளரைப் பராமரிக்கும் முறை யும் உணர்வுபூர்வமாக இருக்கும். மருத்துவர்கள் நோயாளர்களுடன் அன்பாகப் பேசி முறையாகச் சிகிச்சைகளை வழங்குவார்கள்.

பல மருத்துவமனைகளில் பதிவு செய்து விட்டு பறந்து பறந்து பணத்துக்காக சேவை செய்ய மாட்டார்கள். அங்கு பணியாற்றும் தாதியர்கள் பொறுப்புடன் பணியாற்றுவதை எம்மால் பார்க்க முடியும். நாயே பேயே என்று பேசி நோயாளர் களை சஞ்சலத்துக்கு உள்ளாக்கமாட்டார்கள். நோயாளர்களுக்கு சிகிச்சையை முழுமையாக மேற் கொண்டு அவர்கள் வைத்தியசாலையை விட்டு வெளியேறும் போது வாசல் வரை வந்து வழியனுப்பி வைப்பார்களாம்.

வெளி நாடுகளில் வயது போனவர்கள் தமது உடலை 6 மாதத்துக்கு ஒரு தடவை பரிசோதனை செய்து கொள்ள வேண்டியது கட்டாயமான ஒன்று. எமக்குத் தான் நோய் எதுவும் இல்லையே, பிறகு எதற்கு பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்று விட முடியாது. குறிப்பிட்ட திகதியில் உடற் பரிசோதனை செய்து கொள்ளும்படி மருத்துவ மனையில் இருந்து கடிதம் வீடு நோக்கி வரும். இப்படியாக அந்த நாடுகளில் நோய் மக்களைத் தாக்காத ஒரு சூழலை ஏற்படுத்திக் கொண் டிருக்கிறார்கள்.

வசதிகள் இல்லாவிட்டாலும் அந்த நாடுகளில் நோயாளர்கள் பராமரிக்கப்படும் முறையை யாவது நாம் பின்பற்ற வேண்டும். அப்பொழுது தான் எமது நோயாளர்கள் மன உளைச்சல் இல்லாது சிகிச்சையை மேற்கொண்டு தமது நோயைக் குணப்படுத்தக் கூடிய சாத்தியக் கூறுகள் எழக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன.

கடந்த 13 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி இருக்கும். யாழ்ப்பாணத்தில் உள்ள மருத்துவ மனை ஒன்றுக்குச் சென்றேன். எனது வயது போன உறவுக்காரர் ஒருவர் சிகிச்சைக்காகச் சென்றிருந்தார். அவரைக் கூட்டி வருவதற்காகச் சென்றேன். கிளினிக் இடம்பெறும் அறையில் அளவுக்கு அதிகமான வயதுபோன நோயாளர் கள் வரிசையாக அமர்ந்திருக்கின்றனர். எனது உறவுக்காரரும் வரிசையில் ஒருவராக அமர்ந் திருக்கிறார். அவர் இருப்பதைப் பார்த்து விட்டதும் அந்த இடத்தில் ஓரமாக ஒதுங்கி நின்றிருந்தேன். அங்கே நெஞ்சைப் பிடித்துக் கொண்டு வயது போன ஒருவர் கிளினிக் முடிந்து வெளியேறினார். அவரைப் பார்க்கிறேன். ஏதோ புறுபுறுத்துக் கொண்டு வருகிறார். அவரிடம் "என்ன பெரிய வரே, நெஞ்சுவலி தாங்க முடியவில்லையோ" என்று கேட்டேன். அதற்கு அந்தப் பெரியவர் தலையை நிமிர்த்தி என்னைப் பார்த்து "தம்பி சைக்கிளாலை விழுந்து போனேன், அந்த நாளிலிருந்து நெஞ்சில ஒரே நோவு. உந்தப் பொம்பிளை டாக்குத்தரிடம் கேட்டால் பனடோல் போட்டால் சரிவரும் என்று சொல்லுது. எக்ஸ்ரே எடுத்துப் பாருங்கோவன் என்று கேட்டேன். அதெல்லாம் தேவையில்லை, பனடோலைப் போடுங்கோ என்று சொல்லி அனுப்பினா" என்றார்.




நானோ "எப்ப ஐயா விழுந்தனீங்கள்" என்று கேட்டேன். அதற்கு அவரோ விழுந்து நாலு நாள் ஆகுது. நோவுக்கு மருந்து போட்டும் மாற வில்லை. அதனால் தான் இங்க வந்தேன்" என்றார் "டாக்டரிடம் விவரமாய்ச் சொன்னனீ யளோ" என்று கேட்டேன். அவரோ "சொன்ன னான், அதற்கு எந்தக் கவனமும் எடுக்காமல் சாதாரணமாகச் சொல்லி விட்டார் பனடோல் போட்டால் சரிவரும்" என்று. பனடோல் போடுறது என்றால் நான் ஏன் இங்க வாறன், முழுமை யான பரிசோதனையை மேற்கொள்ளவல்லோ வந்தனான். அதற்கும் முடியாது என்றால் நான் என்ன செய்ய முடியும்" என்றார்.

"தனியார் மருத்துவமனையில் ஒரு தடவை உடம்பைப் பரிசோதித்துப் பாருங்கோவன்" என்று சொன்னேன். அதற்கு அவரோ "கையிலை காசு இருந்தால், அங்க போயிருப்பேனே" என்று தளர்ந்த வார்த்தையில் சொல்லி விட்டு நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டு அந்த மருத்து வமனையை விட்டு வெளியேறினார். அங்கே கிளினிக்குக்கு வந்திருந்த வயது போனவர் களைப் பார்க்கிறேன். இவர்களின் உடலில் என்ன என்ன நோய் பிடித்திருக்கிறதோ, அந்த நோய்களுக்கு இந்த மருத்துவமனை உரிய மருத்துவம் வழங்குமா? என்ற கேள்வியுடன் நானும் எனது உறவுக் காரரும் அந்த மருத்துவமனையை விட்டு வெளியேறி னோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதருள் மாணிக்கமாக

### வடக்கு, கிழக்கு மாகாண அரச சேவையில் தடம் பதித்து அமரரான திருமதி செ.சுதாதேவி

வடக்கு, கிழக்கு மாகாண சபை முதன் முதல் உதயமானபோது முகாமைத்துவ உதவியாளராக பணியேற்று மக்கள் சேவைக்கு மகத்தான பணியாற்றிய பின் ஓய்வு நிலையில் கடந்த 27.12.2013 இல் இறையடி சேர்ந்தார் யாழ்.புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திருமதி சுதாதேவி செகராஜசேகரம்.

வடக்கு, கிழக்கு மாகாண அரச சேவையில் பலர் கடமையாற்றி ஓய்வு பெற்றனர். ஆனால் கடமையின் போதும்- கடமையின் பின்னரும் மக்களின் மனதறிந்து சேவையாற்றியவர் திருமதி.சுதாதேவி செகராஜசேகரம் என்றால் மிகையாகாது.

முதன் முதலாக தலைசிறந்த தட்டெழுத்தாளராகப் பணியேற்ற திருமதி.செ.சுதாதேவி தனது அயராத முயற்சியினால் முகாமைத்துவ அதிகாரியாகப் பதவி உயர்ந்தார். பதவியேற்ற காலங்களில் திருகோணமலை நகராட்சி மன்றத்தில் (UC) முகாமைத்துவப் பணியில் நற்பணியாற்றி நகர சபை செயலாளர் மற்றும் நகர மக்களின் நன்மதிப்பைப் பெற்றார்.

இந்தக் காலப் பகுதியில் இவரது சிறப்புப் பணியை பாராட்டி சிறந்த முகாமைத்துவப் பணிக்கான விருது வழங்கிப் பாராட்டப்பட்டிருந்தார்.

**நீத்தார் நயப்புரை**

பின்னர் வலி.தென்மேற்கு மானிப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அர்ப்பணிப்பான சேவையை வழங்கினார். அலுவலகத்தில் இடம்பெற்ற ஆன்மிக மற்றும் சமூக செயற்பாட்டு நிகழ்வுகளில் தன்னை முன்னிலைப் படுத்தி செயற்பட்டு வந்தார். இவரது சேவையை அறிந்த வலி .தென்மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் உள்ளூராட்சி வார இறுதிப் பெருவிழாவில் சிறந்த சேவைக்கான "சிறந்த உள்ளூராட்சி சேவையாளர்" விருது வழங்கி கௌரவித்தார். இதனைத் தொடர்ந்து வலி.வடக்கு பிரதேச சபையில் பணியாற்றினார். இவரது நன்னடத்தை - கனிவான பேச்சு- சேவை செய்யும் மனப்பாங்கு கொண்ட இவரின் உயர்ந்த பண்புகள் காரணமாக அந்தக் காலத்தில் இருந்த அனைத்து உத்தியோகத்தர்களும் இவருக்குக் கூடுதல் மதிப்பளித்து நடந்து கொண்டனர். பின்னர் குறிப்பிட்ட காலம் ஓய்வு நிலையில் அமெரிக்கா கலிபோர்ணியாவில் (USA) வாழ்ந்த திருமதி சுதாதேவி மற்றும் அவரது கணவர் செகராஜசேகரம் ஆகியோர் விடுமுறைக்காக திருகோணமலையிலுள்ள தமது உறவினர் வீட்டுக்குச் சுற்றுலா வந்த வேளை திடீர் சுகவீனமுற்று திருமதி.சுதாதேவி கடந்த 27.12.2013 இல் இறையடி சேர்ந்தார். இவரது இழப்பு அவர் குடும்பத்துக்கு மட்டுமன்றி வடக்கு, கிழக்கில் உள்ள அன்புள்ளங்களுக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்.

அவர் ஏழைகள், கர்ப்பிணிகள், சிறுவர்கள், நோயாளிகள் என பலருக்கும் தனது சொந்த நிதியை வாரி வழங்கி பெரும் சேவை செய்த பெருவள்ளல். திருமதி.சுதாதேவி அவர்களது மனிதநேயப் பணி வடக்கு புன்னாலைக் கட்டுவனிலிருந்து- கிழக்கு திருகோணமலை வரை அவரது அரச கடமை- சமூகப் பணி- ஆன்மிகப் பணி-தொண்டுப்பணி என நீண்டு கொண்டே சென்றது. அவரது சேவை குறித்து அவரது குடும்பத்தவர்களே அறியாத அளவுக்கு அவை பல்கிப்பெருகி நீண்டு இருந்தன. திருமதி செகராஜசேகரம் சுதாதேவி இறக்கவில்லை, இறந்த பின்னும் வாழும் மானுடப் பொதிகையில் வைக்கப்படுகின்றார். இவரைப் போன்றே இவரது கணவரும் மக்கள் சேவையில் தடம் பதித்தவர். எனவே, மக்கள் பணியில் தொண்டாற்றி இறையடி சேர்ந்த திருமதி சுதாதேவி செகராஜசேகரனின் ஆத்மா சாந்தியடைய வேண்டிப் பிரார்த்திக்கின்கின்றேன்.

நவாலியூர் செ.ரமேஸ்

## வெளிநாட்டு நெசவு பயிற்சிக்கு இலங்கையர்



புடைவைக் கைத்தொழில் குறித்த மனிதவள அபிவிருத்தி தொடர்பான வேலைத் திட்டத்தின்கீழ் கண்ணூர் இந்தியன் கைத்தறி தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்தின் வெளிநாட்டு நெசவு வடிவமைப்புப் பயிற்சி நெறியில் கலந்து கொள்வதற்காக கைத்தொழில் வாணிப அமைச்சினால் தொழில் திணைக்களத்தின் நெசவு மேற்பார்வையாளர் தா.உதயரட்ணம் கேரளா மாநிலத்தின் கண்ணூர் சென்றுள்ளார்.

இலங்கையின் நெசவுக் கைத்தறித் தொழில்துறையின் வளர்ச்சிக்கும் புதிய கண்டு பிடிப்புக்களுடன் கூடிய உயர்தர கைத்தறி உற்பத்திகளைத் தயாரித்து ஏற்றுமதிச் சந்தை வாய்ப்புகளை விருத்தி செய்வதற்காக இந்தப் பயிற்சி நெறி வழங்கப்படுவதாக கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு அறிவித்துள்ளது.விமானப் போக்குவரத்து உட்பட பயிற்சி நெறிக்கான செலவினங்களையும் அமைச்சு வழங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. பயிற்சிநெறிகள் இரண்டு மாதங்கள் இடம்பெறும். (வ-7)

## புனைகதைத் துறைக்கு கலைஞானச்சுடர் விருது




நல்லூர் பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையினால் 2013 ஆம் ஆண்டுக்கான கலைஞானச்சுடர் விருதை பெற்றுள்ளார் எழுத்தாளர் த.பரமலிங்கம்.

நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்டுள்ள சிறுகதை, கவிதைப் போட்டிகளில் பாராட்டுக்களையும், பல பரிசில்களையும் இவர் பெற்றுள்ளார். கலைஞானச்சுடர் விருது பெற்ற பத்துக் கலைஞர்களில் புனைகதைத்துறைக்கு பரமலிங்கம் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

தேவிபரமலிங்கம், பட்டனைந்து, மூலபாரதி, நவாலியூர்க் கவிராயர் ஆகிய புனை பெயர்களில் எழுதி வரும் இவரது 'அணிதிரளும் சிறு அலைகள்' என்ற நாவல் நூல் வெளியிடப்பட்டுள்ளது. இவரது இரு சிறுகதைகள் இறுவட்டு வடிவில் வெளிவரவுள்ளன. (ஒ-14)

# விமர்சனங்கள் தீர்ப்புகள் அல்ல



பெரும்பாலான மனிதர்கள் எதுவொன்று குறித்த மதிப்பீட்டையும் அடுத்தவர்களுடைய கருத்துகளை வைத்தே எடைபோடுகிறார்கள். பலர் ஒரு சாதாரண விடயத்தை ஓஹோ என்று புகழ்ந்தால் அது உன்னதமாகத் தெரிகிறது. ஒரு உயர்ந்த விடயத்தைக்கூட பலரும் பரிகசித்தால் அது செல்லாக்காசாகி விடுகிறது.

ஆனால் உண்மையான மதிப்பீட்டை பெரும்பாலானோரின் கருத்துகளை வைத்து எடைபோடுவது சரியானதாக இருக்காது.

ஏனென்றால் எல்லோரும் ஆழமாக அறிந்தே ஒன்றைப் பற்றிக் கருத்து கொள்ள வேண்டும் என்பது கட்டாயமில்லை.

பெரும்பாலான மனிதர்கள் தங்கள் அறிவுக் கேற்பவே கருத்துக் கொள்கிறார்களே தவிர, உண்மையான தன்மையின் அடிப்படையில் அல்ல. அவரவர் மனநிலை, அறிவு, அனுபவம், விருப்பு வெறுப்புகளை ஒட்டியே விமர்சனங்கள் எழுகின்றன. சிலர் அந்தச் சிரமத்தைக்கூட மேற்கொள்வதில்லை. அவர்களால் மதிக்கப்படுவோர் என்ன சொல்கிறார்களோ அதுவே அவர்களுடைய கருத்தாகியும் விடுகின்றது.

நோர்மா ஜீன் பேக்கர் என்ற இளம்பெண் மொடலாகும் கனவுடன் ஒரு மொடலிங் நிறுவனத்துக்குச் சென்று வாய்ப்புக் கேட்டார். அங்கே அவளை நீயா, மொடலா? என்று பரிகசித்தார்கள். ஏதாவது ஏவலாளி வேலைக்குச் செல். இல்லாவிட்டால் திருமணம் செய்து கொண்டு வாழ்ப்பார் என அறிவுரை கூறப்பட்டது. அந்தப்பெண் தனது கனவைக் கலைத்து விட்டிருந்தால் ஹொலிவூட் உலகத்துக்கு மார்லின் மன்றோ என்ற அற்புதக் கதாநாயகி கிடைத்திருக்க மாட்டார். இன்றும் பேசப்படும் சிறப்பை இழந்திருப்பார்.

தமிழ் நாட்டில் அந்தக் காலத்தில் ஸ்ரீதர் ஒரு மிகப் பெரிய திரைப்பட இயக்குநர். அப்படிப் பட்டவரிடம் திரைப்படத்தில் நடிக்க வாய்ப்பு கேட்டு ஒரு தமிழ்ப் பெண் சென்றார். ஸ்ரீதர் இந்த முகம் கமராவுக்குப் பொருத்தமல்ல என்று சொல்லி அனுப்பி விட்டார். அந்தப் பெண் தான் ஹிந்தித் திரையுலகில் கனவுக் கன்னியாக பல ஆண்டுகள் கோலோச்சிய ஹேமமாலினி. இவ்வளவு பெரிய இயக்குநர் சொல்லி விட்டாரே. உண்மையில் எனக்கு திரையுலக முகம் இல்லை என்று அப்பெண் திரும்பி இருந்தால் ஹேமமாலினி அடையாளம் காணப்படாமலேயே போயிருப்பார்.

மிகவும் மந்த புத்திக்காரன். அறிவுக் கூர்மை போதாது என்று ஆசிரியர்களால் கருதப்பட்ட ஓர் இளைஞர் அதை ஏற்றுக் கொண்டு தன் திறமைகளில் நம்பிக்கை இழந்து பின் வாங்கி இருந்தால் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற விஞ்ஞானியாக உலகம் கருதும் அல்பேர்ட் ஐன்ஸ்டீனை உலகம் இழந்திருக்கும்.

விமான இயந்திரவியல் கற்க விண்ணப்பித்த 12 பேர் டேராடுனில் நேர்முகத் தேர்வுக்குச் சென்றார்கள். அந்தப் 12 பேரில் ஒருவர் மட்டும் தகுதியில்லை என்று நீக்கப்பட்டவர் பின்னாளில் இந்திய விண்வெளி ஆராய்ச்சித் துறையில் இயக்குநர் பதவி வகித்துப் பல சாதனைகள் புரிந்தது விந்தையல்லவா?

**பெரும்பாலான மனிதர்கள் தங்கள் அறிவுக்கேற்பவே கருத்துக் கொள்கிறார்களே தவிர உண்மையான தன்மையின் அடிப்படையில் அல்ல. அவரவர் மனநிலை, அறிவு, அனுபவம், விருப்பு வெறுப்புகளை ஒட்டியே விமர்சனங்கள் எழுகின்றன.**

பாடசாலைகளில் கூடைப்பந்தாட்டக் குழுவில் விளையாடத் தகுதியில்லாதவர் என்று மறுதலிக்கப்பட்ட ஒருவர் பின்னாளில் உலகப் புகழ் பெற்ற கூடைப்பந்தாட்ட வீரராகப் புகழ் பெற்றார். அவர் தான் மைக்கேல் ஜோர்டான். பாடசாலை மட்டத்திலேயே அவர் சோர்ந்து போய் ஆடுவதை விட்டிருந்தால் வாழ்ந்த சுவடு தெரியாமல் அவர் போயிருப்பார்.

ஒரு மெழுகுவர்த்தியைக் கொளுத்தக் கூடத் திராணியற்றவள் என்று கேவலமாக ஒரு கன்னியாஸ்திரீயைப் பார்த்து பெரிய மதகுரு சொன்னார்.

தன் இயக்கத்துக்காக லொரெட்டோ, கன்னி மடத்தைத் துறக்க அனுமதி கேட்டபோது தான் இந்த வார்த்தைகளை அவர் கேட்க வேண்டி வந்தது. இதற்குக் கூடத் திராணியில்லாத நீ ஒரு இயக்கத்தையா வழி நடத்தப் போகிறாய் என்கிற ரீதியில் பேசப்பட்ட கன்னியாஸ்திரி வேறு யாரும் அல்ல. கல்கத்தா வீதிகளில் பெரும் சேவை புரிந்த, நோபல் பரிசு பெற்ற அன்னை தெரேசா தான். ஒரு செய்தித்தாளில் கார்ட்டூனிஸ்டாகத் தனது வேலையை ஆரம்பித்த இளைஞருக்கு அந்த வேலை சில நாள்களிலேயே போய் விட்டது. அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் சொன்ன காரணம் உனக்குக் கற்பனைத் திறமையே இல்லை. அந்த இளைஞர் யார் தெரியுமா? கார்ட்டூன் உலகின் மேதை வோல்ட் டிஸ்னி. அவர் உருவாக்கிய டிஸ்னிலாண்ட் என்ற பரவச உலகம் பல நாடுகளில் இன்றும் கற்பனைத் திறனின் சிகரமாகக் கருதப் படுகிறது.

இவ்வாறான உதாரணங்களால் நூற்றுக் கணக்கான பக்கங்களை ஆதாரத்தோடு நிரப்ப முடியும் என்றாலும், செய்தி இது தான். மற்றவர்களுடைய மோசமான கருத்துக்களைத் தீர்ப்புகளாக எடுத்துக் கொள்ளாதீர்கள். மனம் சோர்ந்து விடாதீர்கள். உங்களுக்குள் இருக்கும் உற்சாகத் தீயை அணையவிட அனுமதிக்காதீர்கள். அப்படி அணைய விடும் போதுதான் அவர்கள் கருத்து தீர்ப்பாகிறது. எதில் உங்களுக்கு அளவிடமுடியாத ஆர்வம் இருக்கிறதோ, அதற்காக உழைக்கவும் நீங்கள் தயார் என்றால், அதில் நீங்கள் தாக்குப்பிடித்தால் போதும், நிச்சயமாக வெற் றியடைவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமையை இனிமையாக்க பழகிக் கொள்ளுங்கள்

இன்றைய நவநாகரிக உலகில் ஒருவர் தனியாக இருப்பது என்பதே அதிசயம்தான். Socializing என்னும் பெயரில் நமது வாழ்வில் ஒரு அங்கமாகவே மாறிவிட்ட பேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூக இணையத்தளங்கள் 6 வயதுக் குழந்தை முதல் 60 வயது முதியவர் வரை அனைவரையும் உலகத்தோடு பிணைத்து வைத்திருக்கின்றன.

இவ்வாறு இணையத்தள மோகத்தில் சிக்காதவர்கள் கூட, நண்பர்கள் அல்லது காதலன் அல்லது காதலியின் பிரச்சினையில்கூட தனிமையைத் தொலைத்திருப்பார்கள்.

எனவே, இன்றைய சூழலில் ஒருவர் தனியாக இருக்கிறார் என்றால் அவர் தீராத மன வேதனையில் உள்ளார் என்று அர்த்தம். காதல் தோல்வி, ஏமாற்றம், துரோகம் என ஏதாவது ஒருவிதத்தில் பாதிக்கப்பட்டிருக்கும் அவர்கள், இனி யாரையும் நம்ப வேண்டாம். மற்றவர்களுடன் இருந்து காயப்படுவதை விட தனியாக நிம்மதியுடன் இருப்பதே மேல் என்ற அளவுக்கு தீர்மானித்திருப்பார்கள்.

இந்த முடிவு, நடைமுறைப்படுத்துவதற்கு மிகவும் கடினமான ஒன்று. எப்போதும் நண்பர்களுடன் இருந்து பழகியவர்களுக்கு தனியாக இருப்பது என்பது கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல் இருக்கும். ஒரே நாளில் வாழ்க்கையே வெறுத்தது போலத் தோன்றும். இந்த சிக்கலான சூழலில் இருந்து வெளியே வர அதிக மன வலிமையும் சில எளிமையான தகவல்களும் தேவை... அந்த எளிமையான தகவல்கள் இதோ...

தனிமையில் இனிமை - எமது அனைவரது வாழ்விலும் ஏதாவது ஒரு தருணத்தில் கண்டிப்பாக தனிமை அதன் சுயரூபத்தைக் காட்டும். தனியாக இருப்பது ஒரு பெரிய இழப்பல்ல என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். தனிமையாக இருக்கும் போது நீங்கள் உங்கள் வாழ்க்கையை உங்களின் விருப்பத்துக்கு ஏற்ற விதத்தில் வாழலாம்.

தனிமையைப் புரிந்துகொள்ளுங்கள் - தனிமையில் இரண்டு வகை உள்ளது. ஒன்று நாமே நம் சந்தோஷத்துக்காக இருப்பது. மற்றொன்று மிக சோகமாக இருக்கும் சமயம் தனிமையில் வாடுவது. இந்த இரண்டாம் வகையான தனிமைப்படுத்தும் பாட்டை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. அச்சமயம் எம்மைப் புரிந்து கொண்டவர்களிடம், எம்முடைய வேதனைகளைத் கொட்டித் தீர்ப்பதால் ஓரளவு அந்தத் தனிமையிலிருந்து விடுபடலாம்.


தனிமையைப் புறக்கணியுங்கள் - உங்களைப் போல் தனிமையில் வாடும் வேறு ஒருவரைக் கண்டால் அவரிடம், சாதாரணமாகப் பேச்சுக் கொடுங்கள். ஒரு சாதாரணமான அறிமுகத்துக்குப் பின் நலம் விசாரியுங்கள். இவ்வாறு செய்வதானால் உங்களின் புதிய நண்பரைத் தனிமையின் பிடியிலிருந்து விடுவித் திருப்பீர்கள். சிறிது நேரத்துக்கு உங்களைவிட்டும் தனிமை விலகியிருக்கும்.

குடும்பம் கைகொடுக்கும் - உங்கள் குடும்பத்தினரிடம் அதிக நேரம் செலவிடுங்கள். உங்களை அவர்களால் புரிந்துகொள்ள முடியாது என நீங்கள் எண்ணினாலும், உங்களுக்குத் தேவையான அனைத்துச் சந்தோஷமும் உங்கள் குடும்பத்திலேயே இருக்கலாம்.

தனிமையை வெல்லுங்கள் - தனிமையை மறக்க முயற்சி செய்யுங்கள். சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுத்திக் கொள்ளுங்கள். சிறு வயதிலிருந்து உங்களைக் கவர்ந்த விடயத்தைக் கற்றுக்கொள்ள முயற்சி செய்யுங்கள். உங்களுக்கு உபயோகப்படும் வகையில் பொழுது போக்கு விடயங்களை மாற்றி அமையுங்கள். இவை அனைத்தையும் விட தனிமையை நொடிப் பொழுதில் களைய ஒரு வித்தியாசமான சுவாரஸ்யமான முறை உடனடியாக ஒரு செல்லப் பிராணி வாங்குவதுதான்.

நாய், பூனை, பறவைகள் என எதுவாக இருந்தாலும் உங்களிடம் இருந்து அன்பு மற்றும் சிறிது அக்கறையை மட்டும் எதிர்பார்க்கும் இவை என்றும் உங்களை மீண்டும் தனிமையில் விடாது என்பது உறுதி.



# அழிவின் விளிம்பில் மேற்கு ஆபிரிக்க சிங்கங்கள்

மேற்கு ஆபிரிக்காவுக்கே உரிய பிரத்தியேகமான சிங்கங்கள் இன்றைய நிலையில் அங்கே வெறும் 400 மட்டுமே எஞ்சியிருப்பதாகவும் நிலைமை இப்படியே போனால், இந்த மேற்கு ஆபிரிக்கச் சிங்கங்கள் விரைவில் அழிந்துவிடும் என்றும் இது குறித்து நடத்தப்பட்ட ஒரு புதிய ஆய்வு ஒன்று எச்சரித்திருக்கிறது.

பந்த்தேரா என்கிற தன்னார்வ அமைப்பு மேற்கு ஆபிரிக்கப் பிராந்தியத்தில் இருக்கும் 17 நாடுகளில் தனது ஆய்வை மேற்கொண்டது.

செனகலில் துவங்கி நைஜீரியா வரையிலான 17 நாடுகளில் சுமார் ஆறு ஆண்டுகள் நடத்தப்பட்ட இந்த ஆய்வின் இறுதி அறிக்கையில் இந்த பிராந்தியத்துக்கே பிரத்தியேகமானதும், மரபணு ரீதியில் மற்ற ஆபிரிக்கச் சிங்கங்களிடமிருந்து வேறுபட்டதுமான மேற்கு ஆபிரிக்கச் சிங்கங்கள் வரலாற்று ரீதியில் வாழ்ந்த இடங்களில் இன்று வெறும் ஒரே ஒரு சதவீத இடங்களில் மட்டுமே அவை வாழ்வதாகத் தெரிவித்திருக்கின்றது.

இந்த அறிக்கையை எழுதிய ஆய்வாளர்களில் ஒருவரான பிலிப் ஹென்ஸ்ஷெசெல் இது குறித்துத் தெரிவித்தபோது, சரித்திர ரீதியாக மேற்கு ஆபிரிக்காவில் சிங்கங்கள் வாழ்ந்துவந்த அவற்றின் பாரம்பரிய வாழ்விடங்கள் 99 சதவீதம் குறைந்துள்ளது என்பது எமது ஆய்வில் தெரியவந்துள்ளதாகத் தெரிவித்தார்.

சிங்கங்களின் வாழ்விடங்கள் விவசாயத் தேவைகளுக்காக பெருமளவில் விவசாய நிலங்களாக மாற்றப்பட்டதே இதற்கு முக்கிய காரணம் என்றும், பருத்தியைப் பயிர் செய்வதற்காகவும், உணவுத் தேவைக்கான இதர பயிர்களுக்காகவும் பெருமளவில் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

கடந்த இருபது ஆண்டுகளில் பத்து நாடுகளுக்கும் மேலாக வாழ்ந்து சுற்றித் திரிந்த சிங்கங்கள் இப்போது ஒரு குறிப்பிட்ட பாதுகாக்கப்பட்ட இடங்களிலேயே, அதிலும் மிகவும் ஆபத்தும் அபாயமும் நிறைந்த சூழலில் வாழ்கின்றன என்பது கவலையளிக்கும் ஒரு விடயம், என்றும் கூறினார் ஆய்வாளர்.

இந்தச் சிங்கங்கள் இப்படி வேகமாக அழிவின் விளிம்புக்கு சென்றுகொண்டிருப் பது தமக்கு மிகவும் கவலையளிப்பதாகத் தெரிவித்த ஹென்ஷெசெல், இவை ஆபிரிக்கக் கண்டத்தில் இருக்கும் சிங்கங்களில் மரபணு ரீதியில் மாறுபட்டவை என்பதால் இவற்றின் அழிவு என்பது ஒட்டுமொத்தமாக ஒருவகையான சிங்க இனமே அழிவதாகவே அர்த்தப்படும் என்று கூறினார்.

அழிவின் விளிம்பில் நிற்கும் இந்த அரியவகை மேற்கு ஆபிரிக்கச் சிங்கங்களைப் பாதுகாக்க தேவைப்படும் நிதிவசதி இங்குள்ள அரசுகளிடம் இல்லை என்பதுடன் அந்த அரசுகளுக்கு வேறுபல முன்னுரிமை விவகாரங்களும் இருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே, இந்த மேற்கு ஆபிரிக்கச் சிங்கங்களைப் பாதுகாப்பதற்கு சர்வதேச நிதி உதவி தேவை என்று வாதாடும் அவர், அதற்கும் முன்னதாக இந்த மேற்கு ஆபிரிக்கச் சிங்கங்கள் அழிவின் விளிம்பில் இருக்கும் அருகிவரும் விலங்குகள் பட்டியலில் சேர்க்கப்படவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

அடுத்த கட்டமாக இந்த வகையான மேற்கு ஆபிரிக்கச் சிங்கங்கள் இயற்கையாக வாழும் பிரதேசங்களைப் பாதுகாக்கத் தேவையான சர்வதேச நிதி உதவியையும் உலக நாடுகள் செய்யவேண்டும் என்றும் அவர் கோரினார்.

**அழிவின் விளிம்பில் நிற்கும் இந்த அரியவகை மேற்கு ஆபிரிக்க சிங்கங்களைப் பாதுகாக்கத் தேவைப்படும் நிதிவசதி இங்குள்ள அரசுகளிடம் இல்லை என்பதுடன் அந்த அரசுகளுக்கு வேறுபல முன்னுரிமை விவகாரங்களும் இருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org